# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 344 ஐப்பசி 19ஆம் நாள் திங்கட்கிழமை 05 நவம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM




**வடமாகாண மர நடுகை மாதம்**

*கார்த்திகை - 2018*

"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நடும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப் பெரியளவில் வளர்ச்சியடையும்."

-கிரேக்கப் பழமொழி-

## இராணுவத்தை

# தண்டிக்க நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் நீக்கப்படவேண்டும்

## கோத்தபாய கோரிக்கை



**கொழும்பு, நவம்பர் 5**

இராணுவத்தினரை தண்டிக்கும் நோக்குடன் கடந்த அரசு நிறைவேற்றிய சட்டங்கள் நீக்கப்படவேண்டும். இந்த அரசு அதனைச் செய்யும் என்று நம்புகின்றேன். இவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலரும், தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

>> 24

## அரசியல் கைதிகள் விவகாரத்தில் மைத்திரிபால இரட்டை வேடம்

### சாடுகிறார் மங்கள சமரவீர

கொழும்பு, நவ. 5

கூட்டு அரசின் காலத்தில் அரசியல் கைதிகளை விடுவிக்க மறுத்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தற்போது இரட்டை வேடமிடுவதாக ஐக்கிய

>> 25

## ஐ.தே.கவிலிருந்து மேலும் ஒருவர் நேற்றுத் தாவல்

கொழும்பு நவ. 5

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக பிரியந்த, மகிந்த பக்கம் தாவினார். அவருக்கு கலாசார, உள்நாட்டலுவல்கள் மற்றும் வடமேல் மாகாண பிரதி

>> 24

## ஹக்கீம் - ரிசாட் நேற்று மைத்திரியுடன் சந்திப்பு

கொழும்பு, நவ. 5

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாட் பதியுதீன் ஆகி

>> 25

## வடக்குப் பாடசாலைகளுக்கு இன்று சிறப்பு விடுமுறை

### கல்வி அமைச்சின் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 5

தீபாவளியை முன்னிட்டு வடக்கு மாகாண பாடசாலைகள் அனைத்துக்கும் இன்று சிறப்பு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணப் பாடசாலைகள் அனைத்துக்கும் சிறப்பு விடுமுறை வழங்கு

>> 24

## பிளவுபட்டது கூட்டமைப்பு மேலும் சில எம்.பிக்கள் எம்முடன் இணைவார்கள்

### கோத்தா நம்பிக்கை

கொழும்பு, நவ. 5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டுள்ளது. அந்தக் கட்சியிலிருந்து நாட்டை நேசிக்கும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்களுடன் இணைவார்கள். இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய

>> 24

## மைத்திரிக்கே எனது ஆதரவு

### ஐ.தே.மு. உறுப்பினர் அத்துரலிய தேரர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 5

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கே எனது ஆதரவு. ஜனநாயகத் தலைவரான ரணில் விக்கிரமசிங்க புதிய அரசின் செயற்பாடுகளுக்கு வழிவிட்டு அலரிமாளிகையை

>> 25

## மைத்திரி - மகிந்த ஆதரவுப் போராட்டம்


### கொழும்பில் இன்று நடத்த பெரும் எடுப்பில் ஏற்பாடு

கொழும்பு நவ. 5

மைத்திரி - மகிந்த பலத்தை கொழும்பில் இன்று காட்டுவதற்காக, ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் காட்டிய மக்கள் பலத்துக்குப் பதிலடி கொடுப்பதற்காக, சிறிலங்கா சுதந்திரக் கட்சி

>> 25

## வியாழேந்திரன் வந்தால் செருப்பு மாலை: மட்டக்களப்பில் பெரும் எதிர்ப்பு போராட்டம்




கொழும்பு நவ. 5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அமைச்சுப் பதவிக்காக கட்சி தாவிய ச.வியாழேந்திரன் மீது ஒட்டுமொத்த தமிழர்களும் விமர்சனங்களை முன்வைத்து வரும்

>> 24

## 2 நாள்கள் மட்டுமே முன்நகர்த்தப்பட்டது நாடாளுமன்ற அமர்வு

**அரசிதழ் அறிவிப்பு நேற்று வெளியானது**

கொழும்பு, நவ. 5

நாடாளுமன்றம் எதிர்வரும் 14ஆம் திகதியே கூட்டப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். அன்றைய தினம் 10 மணிக்கு நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் என்று அரசிதழ் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>> 25

## எங்கள் வாக்குகளை விற்காதே கொழும்பில் நேற்றுப் போராட்டம்

கொழும்பு, நவ. 5

ஜனநாயகத்தைப் பாதுகாக்கக் கோரி கொழும்பு லிபர்ட்டி சுற்றுவட்டத்தில் நேற்று ஆர்ப்பாட்டமும், ஊர்வலமும் முன்னெடுக்கப்பட்டன.

நாட்டின் பல மாவட்டங்களைச் சேர்ந்த சிவில் அமைப்புக்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பொது

>> 25

## நாடாளுமன்றத்தை உடனே கூட்டுமாறு பல இடங்களில் நேற்றுப் போராட்டம்

### வவுனியா, கிளிநொச்சியிலும் நடந்தது

யாழ்ப்பாணம், நவ. 5

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு வலியுறுத்தி நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. இந்தப் போராட்டங்களை ஐக்கிய தேசியக் கட்சி ஒழுங்கு செய்திருந்தது.

>> 25

## கட்சித் தலைவர்கள் சபாநாயகர் சந்திப்பு

கொழும்பு, நவ. 5

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ள நிலையிலும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 14ஆம் திகதியே நாடாளுமன்றம் கூடும்

>> 25

## தமிழ் மக்களின் வாக்குகளை மறந்து செயற்படுகிறார் மைத்திரி

### மாவை.எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, நவ. 5

2015ஆம் ஆண்டு மைத்திரிக்கு தோண்டப்பட்ட புதைகுழியிலிருந்து பாதுகாப்பை வழங்கியது தமிழ் மக்களே. தமிழ் மக்கள் அன்று மைத்திரிக்கு வாக்களித்திருக்காவிட்டால் அவர் இன்று இருந்திருக்க முடியாது. அதை

>> 25

நாடாளுமன்றத்தைக் கூட்ட முயன்றால்

**சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்**

விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்

## மைத்திரியின் அழைப்பு கூட்டமைப்பு முடிவில்லை

கொழும்பு, நவ. 5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனையும், சில நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நாளை

>> 25

## நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாங்கள் எதிர்கொள்ளத் தயார்

### ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 5

ஐக்கிய தேசியக் கட்சியினரால் புதிய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொள்ளத் தயார் என்று தெரிவித்த பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்,

>> 25

# ஐ.தே.கவினர் மகாநாயக்கர்களை நேற்றுச் சந்தித்து முக்கிய பேச்சு

கொழும்பு, நவ. 5

நாட்டில்தற்போதுஏற்பட்டுள்ளஅரசியல்உறுதிப்பாடற்ற நிலமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும்என்றுஐக்கியதேசியக்கட்சியின்உறுப்பினர்களும் முன்னாள் அமைச்சர்கள் பலர் அடங்கிய குழு ஒன்று கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடத்தின் மாகாநாயக்க தேரர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

கர்தினால்மல்கம்ரஞ்சித்தை, ஐக்கியதேசியக்கட்சியினர்நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். அதன் தொடர்ச்சியாகவே இந்தச் சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது. அஸ்கிரிய பீடத்துக்குச் சென்று அஸ்கிரிய பீடத்தின் மாநாயக்க வரகாகொட சிறி ஞானரதனதேரரையும், பின்னர் மல்வத்த பீடத்துக்குச் சென்று மல்வத்த பீடத்தின் மாகாநாயக்க திப்படுவாவே சிறி சுமங்கல தேரரையும் சந்தித்து ஆசி பெற்ற பின்தற்போதைய அரசியல்நிலைபற்றிஅவர்களுக்குஎடுத்துக் கூறினர்.

இங்கு கருத்துத் தெரிவித்த லக்ஸ்மன் கிரியெல்ல, தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் உறுதிப்பாடற்ற தன்மையை நிவர்த்திசெய்வதற்குஉடனடியாகநாடாளுமன்றத்தைக்கூட்ட வேண்டும். இருந்தபோதும்சட்டவிரோதமானமுறையில்நியமித்துள்ள புதிய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்குப் பெரும்பான்மைஇல்லாததால்நாடாளுமன்றத்தைஒத்திவைத்துள்ளனர். சபாநாயகர் என்ற வகையில் நாடாளுமன்றத்தில் அவருக்குஇருக்கும்அதிகாரத்தைப்பயன்படுத்திஉடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும் என்றார்.

சம்பிக்க ரணவக்க தெரிவித்ததாவது, தலைமை அமைச்சர் ஒருவர்இருக்கும்போதுமற்றுமொருதலைமைஅமைச்சரை நியமிப்பதுசட்டத்துக்குமுரணானதாகும். மைத்திரிக்குவாக்களித்த62இலட்சம்மக்களின்எதிர்பார்புக்களுக்குஅதுபாதகமானதாகும். மைத்திரிக்குமக்கள்வழங்கியஆதரவுமுடிவடைந்துவிட்டது. நாங்கள்உலகநாடுகளுடன்தொடர்புள்ளநாடுஎன்ற வகையில் உலக நாடுகள் சட்ட பூர்வமான அரசு எது என்று அறிந்துகொள்ள விரும்புகின்றார்கள். அதை நிரூபிப்பதற்கு நாடாளுமன்றத்தைக் கூட்டுவது முக்கியமாகும் என்றார்.

ரஞ்சித் மத்தும பண்டார, மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராகநியமிப்பதற்கானகாரணமாகமைத்திரிபாலவின் கொலை முயற்சி ஒன்று பற்றிப் பேசப்படுகின்றது. இதுதொடர்பாகநாமல்குமாரஎன்றஒருவர்முறைப்பாடுஒன்றைசெய்தார்., அது தொடர்பாக நாங்கள் பக்கசார்பற்ற விசாரணை நடத்தினோம். 124ஒலிப்பதிவுகள்வழங்கப்பட்டன. அதனைஅரசின் பகுப்பாய்வாளரிடம் வழங்கி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஆய்வுசெய்தோம். அதில்ஒருஇடத்திலேனும்கொலைமுயற்சி பற்றிப் பேசப்படவில்லை. இந்த ஒலி நாடாக்களை மீண்டும் கேட்டுப் பார்ப்போம் என்று சவால் விடுகின்றேன் – என்றார். (5)

# பல மில்லியன் டொலர் உதவிகள் நிறுத்தம்

## கூறுகிறார் ரணில்



கொழும்பு நவ. 5

இலங்கையில் அரசியல் குழப்பநிலை உருவான பின்னர் அமெரிக்காவும், ஜப்பானும் பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான நிதியுதவியை இடைநிறுத்தியுள்ளன என்று ரணில் விக்கிரமசிங்கதெரிவித்துள்ளார். றொய்ட்டர் செய்திச்சேவைக்கு வழங்கியுள்ள பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தலைமை அமைச்சர் பதவியிலிருந்து என்னை நீக்கியதன் காரணமாக இலங்கையில் ஜனநாயகத்தின் எதிர்காலம் குறித்து கேள்விகள் எழுந்துள்ளதால் ஜப்பானும் அமெரிக்காவும் பல மில்லியன் டொலர்கள் அபிவிருத்தி நிதியை இடைநிறுத்தியுள்ளன. மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு தொடர்பில் பன்னாட்டுச் சமூகத்தின் மத்தியில் கரிசனைகள் காணப்படுகின்றன.

பெருந்தெருக்கள் அபிவிருத்தி மற்றும் காணி நிர்வாகத்தில் முன்னேற்றம் காணும் நடவடிக்கைகளுக்காக 500 மில்லியன் டொலர்களை வழங்கயிருந்த அமெரிக்கா அதனை தற்போது இடைநிறுத்தியுள்ளது. தொடருந்து அபிவிருத்தி திட்டமொன்றுக்காக 1.4 பில்லியன் டொலர்களை வழங்குவதற்கு முன்வந்த ஜப்பான் அதனை வழங்குவதை தற்போது இடைநிறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டி எனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மக்கள் போராட்டங்களை எனது கட்சி விரிவாக்கவுள்ளது. நாங்கள் மாற்றுவழிகள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம். பொதுமக்களை பெருமளவில் அணி திரட்டவுள்ளோம்– என்றார். (5)

# ஊடக சுதந்திரம் பறிபோய்விட்டது

## ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்புநவ. 5

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதிக்குப் பின்னர் எமது நாட்டில் ஏற்பட்டிருந்த ஊடக்சுதந்திரம் இன்று பறிபோயுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலரும் முன்னாள் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2015ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னர் எமதுநாட்டில்ஊடகசுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. தலைமை அமைச்சரான ரணில் விக்கிரமசிங்கவை சில ஊடகங்கள் விமர்சித்திருந்தில் இதனை நாம் தெளிவாக உணர்ந்திருந்தோம்.

ஆனால், மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டதாக செய்திகள் வெளியான அடுத்தகணமே இலங்கை ரூபாவாகினி கூட்டுத்தாபனத்துக்குள்பலகுண்டர்கள் சென்று கலவரத்தில் ஈடுபட்டனர். இதுதான் இவர்களின் ஜனநாயகம்.நாடாளுமன்றில் மகிந்தவுக்குப் பெரும்பான்மை இல்லாமையால் கோடிக்கணக்கில் பணத்தைகொடுத்துநாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கும் வாங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு தேசத்துரோகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பில் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் –என்றார். (5)

# கூட்டமைப்பு நடுநிலை வகித்தால்; பதவி விலக நான் தயார்

## வியாழேந்திரன் சவால்

யாழ்ப்பாணம்,நவ 5

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல்குழப்பநிலையில்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடுநிலைமை வகித்தால் நானும்நடுநிலைமைவகிக்கத்தயார் என்று கிழக்குப் பிராந்திய அபிவிருத்திப் பிரதியமைச்சர்சதாசிவம்வியாழேந்திரன் தெரிவித்து ள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறுதெரிவித்துள்ளார் .அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை தமிழ் மக்கள்தொடர்பாகஅரசிடமிருந்து எந்தவிதமான தீர்வுகளையும் பெற்றுக்கொடுக்கவில்லை.

தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றும்செயற்பாட்டிலேயேகூட்டமைப்புஈடுபடுகின்றது. இவர்களுடன் இணைந்திருந்தால் மக்களுக்கு எந்த நன்மையும் செய்ய முடியாது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினையில் எவருக்கும் ஆதரவு வழங்காமல் நடுநிலைமை வகிக்கட்டும். நானும் பதவியை விட்டு நடுநிலைமை வகிக்கின்றேன். அதுவும் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக கண்டிப்பாகசெய்யப்போவதில்லை. ஆகவே இவர்களுடன் இருந்து எமது காலத்தை வீணடிப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. எவ்வளவுகுறுகியகாலமாக இருந்தாலும் எமக்குக் கிடைக்கின்ற வாய்ப்புக்களைப் பயன்படுத்தி எமது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் –என்றார். (7)

# துப்பாக்கிச் சூட்டில் மகிந்த அணி உறுப்பினர் சாவு

யாழ்ப்பாணம்,நவ 5

ஹக்மன – பெலிஅத்த வீதியின்கெபிலியபொலப்பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் சிறிலங்கா பொது மக்கள் முன்னணியின்உறுப்பினர்ஒருவர் உயிரிழந்துள்ளார் . நேற்றுமாலைசுமார் 4.30 மணியளவில் மூடுந்து மற்றும் உந்துருளியில் வந்த சிலரால்மேற்கொள்ளப்பட்ட இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் மகிந்த அணியின் ஹக்மன பிரதேசசபை உறுப்பினர் எல்.எச்.சாந்த என்பவரே இவ்வாறு உயிரிந்துள்ளார். துப்பாக்கிச் சூட்டில்படுகாயமடைந்தநிலையில் ஹக்மன மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டிருந்த குஅவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது . சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணைகளை ஹக்மன பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (7)

# பொன்சேகாவிடமிருந்துபீல்ட்மார்சல் பட்டத்தை பறிக்க மைத்திரி முயற்ச்சி

கொழும்பு , நவ. 5

சரத் பொன்சேகாவிடம் இருந்து பீல்ட் மார்சல் பட்டத்தைப்பறிப்பதற்கான, சட்டநடைமுறைகள் குறித்து, அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஆராய்ந்துவருகிறார்என்று, கொழும்புஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபாலவையும், முன்னாள் பாதுகாப்புச் செயலரையும் கொலை செய்யும் சதித் திட்டம் தொடர்பாக நாமல் குமார என்பவர்தகவல்வெளியிட்டிருந்தார். இதன்அடிப்படையில்குற்றப்புலனாய்வுப்பிரிவுவிசாரணைகளை நடத்தி வருகிறது. இந்தச் சதித் திட்டத்தில் சரத் பொன்சேகாவுக்குதொடர்புஇருப்பதாககண்டறியப்பட்டுள்ளது. அதனை மூடிமறைக்கும் வகையில் ரணில் விக்கிரமசிங்க அரசு செயற்பட்டது என்றும் மைத்திரி குற்றம்சாட்டியிருந்தார்.

சரத் பொன்சேகாவிடம் இருந்து பீல்ட் மார்சல் பட்டத்தைப்பறிப்பதற்கான, சட்டநடைமுறைகள் குறித்து மைத்திரிபால சிறிசேன ஆராய்ந்து வருவதாக கூறப்படுகிறது.

பீல்ட்மார்சல்பதவியானது, செயற்பாட்டில்உள்ள ஒரு இராணுவ நிலையாகும். அவருக்கு ஒரு பணியகமும், முழுமையான இராணுவப் பாதுகாப்பும் இருக்கிறது. சுதந்திர நாள் அணிவகுப்பு, வெளிநாட்டுப்பிரதிநிதிகளுடனானசந்திப்புகளில் அவர் இன்னமும் இராணுவ சீருடையிலேயே பங்கேற்கிறார். அவர் இன்னமும் இராணுவ சேவையில்இருக்கிறார்என்பதைஇதுதெளிவுபடுத்துகிறது, என்று அரசதலைவர் செயலக அதிகாரி தெரிவித்தார். எனினும், சட்ட நெறிமுறைகளின்படி, பாதுகாப்புத் தலைவராகஇருப்பதற்கு அரச தலைவர் மைத்திரி அதிகாரம் அளிக்க வேண்டும். சரத் பொன்சேகாவிடம் இருந்து பீல்ட் மார்சல் பட்டத்தைப் பறிக்கும் அதிகாரம் மைத்திரிக்கு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் பொதுவேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதற்கு, தனக்கு பீல்ட் மார்சல் பட்டம் வழங்கப்பட வேண்டும் என்று சரத் பொன்சேகா நிபந்தனை விதித்திருந்தார். அதனைமைத்திரிபாலஏற்றுக்கொண்டிருந்தார். அரசதலைவராகஅவர்தெரிவானதும்பட்டத்தை வழங்கினார். (5)

# விமர்சித்தவர்கள் மீது வழக்குத் தொடர்வாராம்

## கூறுகிறார் பிரதி அமைச்சர் வியாழேந்திரன்

கொழும்பு நவ. 5

துரோகி என்று ஏனையோரை விமர்சிப்பவர்கள் முதலில் தங்களைச் சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். அமைச்சுப் பதவிக்காக விலை போவதாக என்னை விமர்சிப்பவர்கள் அதனை நிரூபிக்க வேண்டும். அவ்வாறு என்னை விமர்சித்தவர்கள் மீது வெகு விரைவில் வழக்குத் தொடரவுள்ளேன். இவ்வாறு கட்சி தாவிப் புதிதாகப் பிரதி அமைச்சுப் பதவியேற்றுக் கொண்ட ச.வியாழேந்திரன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு ஆளும் கட்சியைப் பாதுகாப்பதற்கு பதிலாக அரசுடன் இணைந்து மக்களுக்கு சேவை செய்வது சிறந்ததாகும். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைமை அமைச்சர் மகிந்தவுக்கு ஆதரவு வழங்குவதற்காக நான் அரசுடன் இணையவில்லை. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பல்வேறு சந்தப்பங்களில் எனக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளார். அவரின் செயற்பாடுகளில் திருப்தி அடைந்துள்ளேன் என்றார். (5)

# தலைமை அமைச்சராக மகிந்த நியமிக்கப்பட்டது சட்டவிரோதமே!

## அடித்துக் கூறுகிறார் க.குமார்



யாழ்ப்பாணம், நவ .5

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச இலங்கையின் தலைமை அமைச்சராக அரசமைப்புக்கு முரணாகவே நியமிக்கப்பட்டுளளார் எனத் தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின்தலைவர்கஜேந்திரகுமார்பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பை எமது அடிப்படையாக எடுத்துக் கொண்டால் நாம் தேசிய ரீதியாக செயற்பட முடியாது என்பதையும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். நாம் ஒரு நாளும் முன்னேற முடியாது. எமது இனப் பிரச்சனைக்கு அடிப்படைக் காரணமே இந்த அரசமைப்புத் தான். இதனையும் நான் இந்த இடத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மகிந்த ராஜபக்சவை அரசமைப்புக்குமுரணாகவேதலைமை அமைச்சராக நியமித்துள்ளார் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இல்லை.

தற்போதைய அரசியல் நெருக்கடியானது வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டியே. இதனால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. மகிந்தவை சீனா இயக்குகின்றது என்றால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இந்தியாவினதும் மேற்குலக நாடுகளினதும் கைக் கூலியாகச் செயற்படுகிறது.

அரசமைப்பை மீறியதாகக் கூறி மகிந்தவை எதிர்க்கின்றோம் என்று கூட்டமைப்பினர் அறிக்கை விட்டுள்ளனர்.

அதே நேரம் ஐக்கிய தேசியக் கடசியின் ரணில் விக்கிரமசிங்கவை எந்த நிபந்தனையும் இல்லாது ஆதரிக்கின்றனர்.

இதே ரணில் கடந்த மூன்று ஆண்டுகளும் செய்யாததையா இனி செய்யப் போகின்றார். எனவே இந்த விடயத்தில் கூட்டமைப்பினர் நடுநிலை வகிப்பதே சரியான தெரிவாக இருக்கும்.

அரசமைப்பு மீறப்பட்ட சம்பவங்கள் பல முன்னைய காலத்திலும் நடைபெற்றுள்ளன. கடந்த 2002 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் களை எதிர்கொள்ள முடியாத இலங்கை அரசு போர் நிறுத்தம்' ஒன்றை அறிவித்து தமிழர் தாயக பகுதியை அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதி என அறிவித்தனர். இது அரசமைப்புக்கு முற்றுமுழுதான விரோதமான செயற்பாடு.

அந்த நேரத்தில் ஓர் சிங்களவர் அதனை எதிர்த்திருந்தாலோ வழக்கு தொடர்ந்திருந்தாலோ அதனை இல்லாது செய்திருப்பார்கள்.

இதே நேரம் சுனாமி இடர் ஏற்பட்ட போது தமிழர் தாயகப் பகுதிகளில் அதிக சேதம் ஏற்பட்டது.

இதனை அறிந்த உலக நாடுகள் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்ப அரசமைப்புக்கு அப்பால் அதிக நிதியை எமது பகுதிகளுக்கு வழங்கத் தீர்மானித்தது. அனால் அந்த பணம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போகக் கூடாது என்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அது தடுத்து நிறுத்தப்பட்டது. ஆக அவர்கள் இந்த நாட்டிலே தமக்கு தேவையானவற்றை செய்வார்கள்.

தற்போதும் இதே போன்ற ஓர் நிலைமையே ஏற்பட்டுள்ளது. எனவே கூட்டமைப்பு யாருக்கு ஆதரவு கொடுத்தாலும் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. எனவே கொள்கை அடிப்படையில் நடுநிலைமையுடன் இருப்பதே சிறப்பு ஆகும்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள முன்னாள் ஆயுதக் குழுக்களை விட்டு விலகி தமிழரசுக் கட்சியின் தலைமைகள் மாற்றத்துடன் செயற்பட தயாராக இருந்தால் எனது கட்சியும் தமிழ் மக்கள் பேரவை, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன இணைந்து செயற்படுவது தொடர்பில் அனைவரும் ஒன்றாக ஆராயலாம் - என்றார். (8)

## அடுத்த வருடத்தில் 5 சதவீத துரித பொருளாதார வளர்ச்சி



கொழும்பு ,நவ .5

அடுத்த வருடத்தில் 5 சத வீத துரித பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என அரசு தெரிவித்துள்ளது.


இதற்கு அமைய இலங்கை ரூபாவின் ஸ்திரத்தன்மையை பேண உரிய வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசு எதிர் பார்த்துள்ளதாக நிதி அமைச்சின் செயலர் எஸ்.ஆர். ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டங்களை மத்திய வங்கி, திறைசேரி மற்றும் நிதி அமைச்சு என்பன இணைந்து முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், அடுத்த வருடத்தில் விவசாயத் துறையின் வளர்ச்சியையும் எதிர்பார்ப்பதாக நிதியமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார்.

# அமைச்சுப் பதவி காட்டி அழைப்பு விடுக்கின்றனர்

## கே. கே.பியதாஸ தெரிவிப்பு



கொழும்பு ,நவ .5

நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சிமாற்றம் காரணமாக புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டவுடன் புதிய அரசோடு வந்து இணைந்து கொண்டால் அமைச்சுப் பதவி தருவதாக எனக்கு அழைப்பு விடுக்கின்றனர் என்று ஐக்கிய தேசிய கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே. கே.பியதாஸ தெரிவித்தார்.

ஹட்டன் மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்பாக நேற்று இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆர்பாட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

திடீர் எனத் தலைமை அமைச்சரை மாற்றி புதிய தலைமை அமைச்சராக முன்னான் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை இந்த நாட்டின் தலைமை அமைச்சராக நியமித்துள்ளார்.

ஆனால் மகிந்த அணியினர் நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபித்து காட்டுவதற்காக "உங்களுக்கு அமைச்சுப் பதவி தருகிறோம் அத்துடன் பெருந்தொகையான நிதியும் தருகிறோம்" என என்னையும் அழைத்துக் கூறினார்கள்.

மேலும் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்குமாறும் எனக்கு அழைப்பு விடுத்தனர்.

இந்த நிலையில் நாடாளுமன்றத்திலே அநேகமான உறுப்பினர்கள் எங்களின் பக்கமே இருக்கிறார்கள்.

ஆகையால் நாடாளுமன்றம் கூடிய பிறகு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க பெரும்பான்மையைக் காட்டுவார் - என்றார்.

## நாடாளுமன்றத்தைக் கூட்ட முயன்றால்

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

கொழும்பு நவ. 5

அரச தலைவர் மைத்திரிபாலவின் முடிவை மீறி நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கு சபாநாயகர் கரு ஜயசூரிய நடவடிக்கையெடுத்தால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் இணைந்து கொண்டுவருவது தொடர்பில் ஆலோசித்து வருவதாகத் தெரியவருகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளுக்கு உடனடியாகத் தீர்வுகாணப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிவில் அமைப்புகள் மற்றும் பன்னாட்டுச் சமூகமும் தொடர்ந்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அழுத்தம் கொடுத்துவரும் நிலையில், நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கான நடவடிக்கைகள் எதனையும் இதுவரை அரசதலைவர் முன்னெடுக்கவில்லை. நாடாளுமன்றத்தை கூட்டுவது தொடர்பில் சபாநாயகருடன் அரச தலைவர் ஆலோசித்திருந்த போதும், உறுதியான முடிவுகள் எதனையும் எடுத்திருக்கவில்லை. நாளை மறுதினம் புதன் கிழமை நாடாளுமன்றம் கூட்டப்படும் என்றும் அதற்கான உறுதிமொழியை அரச தலைவர் வழங்கியிருந்ததார் என்றும் சபாநாயகர் அறிவித்திருந்தார்.

ஆனால், சபாநாயகரின் கூற்றை சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், பொதுமக்கள் முன்னணியும் முற்றாக நிராகரித்துள்ளன. நாடாளுமன்றம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று எதிர்வரும் 16ஆம் திகதி சம்பிரதாயப்பூர்வமாகத்தான் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்து வருகின்றன.

அதற்கு முன்னர் நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கான நகர்வுகளில் சபாநாயகர் ஈடுபட்டுள்ளதாகவும், அவ்வாறு 16ஆம் திகதிக்கு முன்னர் கூட்டப்பட்டால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருது தொடர்பில் மைத்திரி மகிந்த தரப்புகள் ஆலோசித்து வருவதாகவும் தெரியவருகின்றது. (5,10)

## மகிந்த அணியினர் நேற்று அமைச்சுப் பொறுப்பேற்பு

கொழும்பு நவ. 5

மகிந்த அணியாக கடந்த காலங்களில் இயங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், அரசு தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர். மகிந்த ராஜபக்ச கடந்த மாதம் 26ஆம் திகதி தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றார். மகிந்த தலைமையிலான புதியஅமைச்ச ரவை கடந்த திங்கட் கிழமை பதவியேற்றிருந்தது. மகிந்த அணியைச் சேர்ந்தவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் மகிந்த அணியைச் சேர்ந்தவர்கள் நேற்று அமைச்சுப் பதவிகளை ஏற்றுள்ளனர். தேசிய ஒருங்கிணைப்பு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சராக வாசுதேவ நாணயக்காரவும், பெருநகரங்கள் மேற்கு பிராந்திய அபிவிருத்தி அமைச்சராக தினேஸ் குணவர்தன வும் நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர். ஊடகத் துறை டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல்லவும் நியமிக்கப்பட் டுள்ளனர். (5)



# அமைச்சுப் பதவிபெற்ற 8 பேரும் மீண்டும் ரணிலுக்கு ஆதரவு ?

## கூறுகின்றார் மத்துமபண்டார

கொழும்பு,நவ.5
அமைச்சுப் பதவிகள் பெற்றுள்ள 8 பேர் மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கொள்வார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாக்கு அளிக்கப்படும் நேரத்தில் அது வெளிப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். தனியார் சகோதார மொழி வானொலிச் சேவைக்கு தற்போதைய அரசியல் நிலமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த 8 அமைச்சர்களில் பெரும்பாலானவர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட அழுத்தங்கள் காரணமாகவே சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர்.
நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படும் தினத்தில் அவர்கள் அனைவரும் ரணில் விக்ரமசிங்கவின் பக்கம் இருப்பார்கள் - என்றார்.

# ஐ.தே.கவில் இருந்து 10 பேர் மகிந்த பக்கம் பாய்வர்!

## வாசுதேவ கூறுகின்றார்

கொழும்பு,நவ.5
ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து இன்னும் 10 பேர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசுடன் இணைந்து கொள்ளவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.
தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுடன் புதிய அரசுக்கு ஆதரவு வழங்கும் கட்சிகள் நேற்றுமுன்தினம் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் வெற்றி கொள்வது தொடர்பிலும், நாடாளுமன்றத்தைக் கூட்டும் போது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான ஏற்பாடுகள் குறித்துமே இந்தக் கூட்டத்தில் சிறப்பாகக கவனம் செலுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அமைச்சுப் பதவியைப் பெற்றவர் லண்டனுக்கு அவசர பயணம்

கொழும்பு,நவ.5
மகிந்த - மைத்திரி அரசில் கடந்த புதன்கிழமை அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்ட வசந்த சேனநாயக்க அவசரமாக லண்டனுக்குச் சென்றுள்ளார்.
அவர் நேற்றுக் காலை லண்டனுக்குப் பயணமானதாகவும் இந்தப் பயணம் தனிப்பட்ட காரணங்களுக்கானது என மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினரான ரொஷான் ரணசிங்க மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆகியோரும் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளனர். இந்நிலையில் வசந்த சேனநாயக்கவும் அவசரமாக லண்டனுக்குச் சென்றுள்ளார்.
அத்துடன் நேற்றுமுன்தினம் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன நாடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## அரசிதழ் அறிவிப்புக்காக

# தயார் நிலையில் அரச அச்சகம்

கொழும்பு நவ. 5
அவசர அரசிதழ் அறிவித்தல்களை வெளியிடுவதற்காக நேற்றுமுன்தினம் தொடக்கம், அரச அச்சுப் பணியகம் தயார் நிலையில் இருப்பதாக, அதன் தலைமை அதிகாரியான கங்க லியனகே தெரிவித்துள்ளார்.
எந்த நேரத்திலும், முக்கியமான அரசிதழ் அறிவிப்புகளை வெளியிட வேண்டியிருக்கும் என்றும், அரச அச்சகப் பணியாளர்களைத் தயாராக வைத்திருக்கும் படியும், அரச தலைவர் செயலகமும், சபாநாயகர் செயலகமும், தமக்கு தகவல் அனுப்பியதாக அவர் கூறினார்.
எனினும் நேற்று மாலைவரை எந்த அரசிதழ் அறிவிப்பும் அரச அச்சக திணைக்களத்துக்கு கிடைக்கவில்லை.
நவம்பர் 16ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு, அரசிதழ் மூலம் அறிவிப்பு வெளியிட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு

# சமூக வலைத்தளங்கள் மூலம் ஒன்றிணைந்து போராட்டம்



இலங்கையில் முடக்கிவைக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும் எனக் கோரி கொழும்பு நகரில் பொதுமக்கள் சிலர் தினம்தோறும் கூடிப் பதாகைகளைப் பிடித்தபடி போராட்டம் நடத்திவருகின்றனர்.
கொழும்பு நகரின் கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி சதுக்கத்தில் தினமும் மாலையில் 4.30 மணியிலிருந்து ஆறு மணிவரை ஆண்களும் பெண்களுமாகச் சுமார் 50 பேர் வரை தினமும் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.
இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள இவர்கள் சமூக வலைத்தளங்களின் மூலம் மட்டுமே அழைப்புவிடுக்கின்றனர். அதைப் பார்த்தே பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.
"கடந்த செவ்வாய்க்கிழமையன்று ரணில் விக்ரமசிங்கவின் ஆதரவாளர்கள் நடத்திய மிகப் பெரிய ஊர்வலத்தில் கலந்துகொண்டோம். அதற்குப் பிறகு பொதுமக்களில் சிலர்கூடி, ஜனநாயக வழியில், எந்தக் கட்சிச் சார்பும் இன்றித் தொடர் போராட்டத்தை நடத்துவது என முடிவுசெய்தோம். முதல் நாள் சுமார் 300 பேர் வரை இந்தச் சதுக்கத்தில் கூடினோம். பிறகு தினமும் 5ஆயிரத்து 60 பேர் கூடுகிறார்கள்," என்கிறார் இந்தப் போராட்டத்தில் முதல் நாளிலிருந்து கலந்துகொண்டுவரும் ட்ரேசி ஹொல்சிங்கெர். . "இந்தப் போராட்டம் யாருக்கும் ஆதரவானது அல்ல. ஜனநாயக வழிமுறைகளை மீட்பதற்காக மட்டுமே இதனை நடத்துகிறோம்." என்கிறார் இதில் பங்கேற்ற சுபா விஜேஶ்ரீவர்தனே. இலங்கையில் நாடாளுமன்றம் கூட்டப்படும்வரை இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தப்போவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

# ஐ.தே.க. தலைவராக சஜித்தை நியமிக்க நகர்வுகள் மும்முரம்

கொழும்பு நவ. 5
ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை கிடைக்காவிடின் ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த தலைவராக சஜித் பிரேமதாசவை அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை கட்சியின் ஒருதரப்பினர் முன்னெடுத்து வருவதாகத் தெரியவருகின்றது.
நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க ரணில் மற்றும் மகிந்த தரப்புக்கள் முயற்சிகளை முன்னெடுத்துள்ளன.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளதால்



தற்போதைய நிலையில் ஐ.தே.கவுக்கே நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலம் உள்ளது. நாடாளுமன்றில் பெரும்பான்மையை ஒருவேளை, ரணில் விக்கிரமசிங்கவால் காட்ட முடியாது போனால், அவரின் அரசியல் ஏதிர்காலமே கேள்விக் குறியாகவுள்ளது.
அவருக்கு எதிராக கொண்டுவரப்பட்டிருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போதே கட்சிக்குள் பெரிய பிளவுகள் ஏற்பட்டிருந்தது. ஒருதரப்பு ஐ.தே.கவின் தலைமைப் பதவியில் மாற்றம் வேண்டுமென போர்க்கொடி உயர்த்தியிருந்தது. ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து தலைமைப் பதவியை பறித்து சஜித் பிரேமதாசவிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டிருந்தன.
அந்த விவகாரத்தை தனது அரசியல் சாணக்கியத்தால் ரணில் முறியடித்திருந்தார். தற்போது மீண்டும் கட்சியின் அடிமட்டத்தில் கிளர்ச்சிகள் வெடித்துள்ளன. நாடாளுமன்றில் பெரும்பான்மையைக் காட்ட முடியாது போனால், ஐ.தே.கவின் தலைமைப் பதவி சஜித்திடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் தகவல் அறியும் வட்டாரங்களில் மேலும் அறிய முடிகிறது. (5.10)

## கால்நடைகள் களவாடப்பட்டு இறைச்சிக்கு வெட்டப்படுகின்றன

முல்லைத்தீவு,நவ.5
கால்நடைகள் களவாடப்பட்டு இறைச்சிக்கு வெட்டும் சம்பவங்கள் விசுவமடுப் பகுதியில் அண்மைக்காலமாக அதிகரித்துவருவதாக கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவித்துள்ள னர். குறிப்பாக பொதுமக்கள் பலரின் மாடுகள் காணமல் போயுள்ளதாக தெரிவித்துள்ளனர்.
இந்நிலையில் கடந்த வாரம் அன்று பிரமந்தநாற்றுப்பகுதியில் வீடு ஒன்றில் வைத்து மாடு ஒன்றினை இறச்சிக்காக வெட்டப்படுவதாக தர்மபுரம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.
தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மாடு வெட்டிக்கொண்டிருந்த வேளை மாட்டின் இறைச்சி கத்தியுடன் இருவரையும் மற்றும் வீட்டின் உரிமையாளரையும் கைதுசெய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தர்மபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)

## நகை திருடிய கும்பல் உட்பட வர்த்தகரும் கைது

சாவகச்சேரி நவ. 5
வீதியில் சென்றோரிடம் சங்கிலிகள் திருடிய கும்பலையும் திருட்டு நகைகளைக் கொள்வனவு செய்த வர்த்தகரையும் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வாரம் வங்கி முகாமையாளரின் மூன்றரைப் பவுண் சங்கிலியை அபகரித்துச் சென்ற நபர்கள் செலுத்திய உந்துருளியின் இலக்கத்தைக் கொண்டு ஒருவர் கைது செய்யப்பட்டார்.
விசாரணையின் போது யாழ்ப்பாணம் நகை உற்பத்தி நிலையத்தில் நகைகள் கொள்வனவு செய்யும் ஒருவரையும் கைது செய்தனர்.
இவர்களிடம் மேற்கொண்ட தொடர் விசாரணைகளின் அடிப்படையில் கோப்பாய், மானிப்பாய், யாழ்ப்பாணம் போன்ற இடங்களைச் சேர்ந்த மேலும் நால்வரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
இவர்களிடமிருந்து உருக்கிய நிலையில் ஏழரைப் பவுண் தங்கமும் கைப்பற்றப்பட்டுள்ளது. இவர்களை நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (9 - 159)

## நூலகத்துக்கான அடிக்கல் நடப்பட்டது



கொழும்பு,நவ.5
திருகோணமலை அன்பு வழிபுரத்தில் நூலகம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம் பெற்றது.
நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்மந்தன். இணைப்புச் செயலாளரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோண மலை மாவட்டக்கிளைத் தலைவருமான ச.குகதாசன்.திருகோணமலை நகராட்சி மன்றத் தலைவர் நா.இராசநாயகம். நகராட்சி மன்ற உறுப்பினர்களான க.செல்வராஜாவ.ராஜ்குமார், முன்னாள் நகரசபை உறுப்பினர் து.தனராஜ். முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் இரா.சிவராஜா உட்படப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.
40 இலட்சம் ரூபாய் நிதியில் அமைக்கப்படவுள்ள இந்த நூலகத்துக்கான நிதி எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனூடாக ஒதுக்கப்பட்டுள்ளது. (40)

# மகிழுந்தில் கஞ்சா கடத்திய மூவர் கைது

வவுனியா,நவ.5
வவுனியா ஓமந்தை பகுதியில் மகிழுந்தில் கேரளா கஞ்சாவினை கடத்திச்சென்ற மூவரை ஓமந்தை பொலிஸார் நேற்று மதியம் கைது செய்துள்ளனர்.



ஓமந்தை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுரேஷ்த டி சில்வா தலைமையில் ஏ9 வீதியில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
யாழ்ப்பாணத்திலிருந்து சம்மாந்துறை நோக்கி பயணித்த மகிழுந்தில் இருந்தே 1 கிலோ 126 கிராம் கேரளா கஞ்சாவினை எடுத்துச்சென்ற சம்மாந்துறை பகுதியினை சேர்ந்த மூவரையும் பொலிஸார் கைது செய்து பொலிஸ் தடுப்பு காவலில் வைத்துள்ளனர்.
மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (110)

## வடக்கு மாகாண ஆசிரியர் பேராளர் மாநாடு

கொடிகாமம், நவ. 5
இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் வடக்கு மாகாண ஆசிரியர் பேராளர் மாநாடு எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.
சங்கத்தின் வடக்கு மாகாண செயலாளர் ஸ்ரீகந்தநேசன் தலைமையில் சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜய சிங்க. உப தலைவர் சு.பிரதீப் மத்திய குழு உறுப்பினர் இரா.சந்திரசேகர் வடமாகாணக் கல்வி கூட்டுறவுச் சங்க வடமாகாணப் பணிப்பாளர் சி.தங்கரூபன் ஆகியோரின் பங்களிப்புடன் நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை. கலந்து கொள்ளவுள்ளவுள்ளார்.
"வடக்கு மாகாண கல்வி நிலையும் ஆசிரியர்களின் வகிபாகமும்"என்னும் தலைப்பில் சிறப்புரை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (159, 9)

## அனுமதியின்றி மரம் ஏற்றிச் சென்றவர் கைது

கிளிநொச்சி நவ. 5
அனுமதிப்பத்திரம் இன்றி விறகுகள் போன்று பாலைமர திராந்திகளை ஏற்றிச்சென்ற வாகனமும் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தின் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர் சிறீவர்த்தனவின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுத்திகாரியாக சதுரங்க வழிநடத்தி வருகின்றார்.
இந்த நிலையில் நேற்றைய தினம் காலைப் பொழுதில் மரம் கடத்தல் தொடர்பாக கிடைத்த ரகசிய தகவலினை அடுத்து முட்கொம்பனில் இருந்து யாழ்ப்பாணம் கடத்தப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியிலான பாலை மரத் தீராந்திகள் கைப்பற்றப்பட்டுள்ளன விறகு போன்று சோடிக்கப்பட்டு குறித்த தீரா ந்திகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அதனை கடத்திச் சென்ற நபரையும் வாகத்தையும் கைப்பற்றியுள்ளதாகவும் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார் (6)



## சமூக வலைத்தளங்களைப் பாதுகாப்பது தொடர்பான செயலமர்வு



ஊர்காவற்றுறை நவ. 5
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் கழகங்களின் ஏற்பாட்டில் பிரதேச இளைஞர் யுவதிகளுக்கான சமூக வலைத்தளங்களைப் பாதுகாக்கும் செயற்றிட்டம் தொடர்பான கருத்தரங்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.
பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் த.கோகுல்ராஜ் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் வளவாளர்களாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய அலுவலர். பிரதேச செயலக உத்தியோகத்தர். தேசிய இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.
கருத்தரங்கில் பிரதேசத்தைச் சேர்ந்த 118 இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

## 1,900 ஹெக்ரேயர் நிலப்பரப்பில்

# யாழ் குடாநாட்டில் இம்முறை சின்ன வெங்காயம் செய்கை

**யாழ்ப்பாணம், நவ. 5**

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் இந்தமுறை பெரும்போக வெங்காயச் செய்கையின் போது சுமார் ஆயிரத்துத் 900 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் சின்ன வெங்காயம் பயிரிடப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று விவசாயத்திணைக் களம் தெரிவித்தது.**

இந்தமாதத்தின் இறுதியில் வெங்காயச் செய்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மழை அதிகம் பெய்தால் வெங்காய நடுகையைப் பிற்போடவும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. சின்னவெங்காய விதைகளுக்கும் பற்றாக்குறை நிலவுவதால் அனேகமான செய்கையாளர்கள் இம்முறை உண்மைவிதைகள் மூலம் நாற்றுமேடை அமைத்து அதன் ஊடாக நாற்றுக்களை நடுகைசெய்யவும் தீர்மானித்துள்ளனர் என்று தெரியவருகிறது. (ம-17)



## கேபிள் மூலமான தொலைபேசி இணைப்புக்கள்

யாழ்ப்பாணம், நவ. 5

சிறிலங்கா ரெலிகொம் நிறுவனம் மண்டைதீவு பிரதேசத்துக்கு கேபிள் மூலமான தொலைபேசி இணைப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

நீண்டகாலமாக தொலைபேசி இணைப்பு வசதிகள் இன்றி இந்தப் பகுதி மக்கள் சிரமப்பட்டு வந்தனர். இந்த நிலையில் தற்போது முதற்கட்டமாக இந்தப் பகுதியைச் சேர்ந்த 150 வரையிலான குடியிருப்பாளர்களுக்கு தொலைபேசி இணைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (ம-17)

## சாரதிகளுக்குள் கைகலப்பு

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ். நகரில் தனியார் பேருந்துச் சாரதி ஒருவரை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சாரதி ஒருவர் இரும்புக் கம்பியால் மூர்க்கத்தனமாகத் தாக்கி காயப்படுத்தினார் என்று பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் முற்றவெளிப் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இரு சாரதிகளுக்கும் இடையே வாய்த் தர்க்கம் ஏற்பட்டு இறுதியில் அது கைகலப்பாக மாறியது என்றும், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சாரதி தனது பேருந்தில் இருந்த இரும்புக் கம்பியினால் தமிழ்ச் சாரதியை மூர்க்கத்தனமாகத் தாக்கினார் என்றும் சொல்லப்படுகிறது.

தலையில் படுகாயமடைந்த அந்தச் சாரதி சுய நினைவிழந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-17)

## கலைஞர்களுடனான சந்திப்பு


தென்மராட்சி, நவ. 5

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினர் மாவட்டத்திலுள்ள கலைஞர்களுடன் கலந்துரையாடி அவர்கள் தொடர்பான விபரங்களைக் கேட்டறிந்து வருகின்றனர்.

நாட்டில் உள்ள பல கலைஞர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் வாழ்ந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளதை அடுத்தே அவர்கள் பற்றிய விபரங்கள் திரட்டப்படுகின்றன. திணைக்கள அலுவலர்களால் இந்தத் தகவல்கள் திரட்டப்படுகின்றன. அவ்வாறு சேகரிக்கப்படும் தகவல்களின் அடிப்படையில் கலைஞர்களின் நலன்கள் பேணப்படவுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)



ஜே/68 முதியோர் சங்கத்தின் 14ஆவது ஆண்டு நிறைவு விழாவும், மூத்தோர் மதிப்பளிப்பும் சென். றொக்ஸ் சனசமூக நிலைய அரங்கத்தில் அண்மையில் நடைபெற்றன. (ம)



சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட வரணி பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூல்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு நூலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ம-9)

## கைதடி முதியோர் இல்லத்துக்குச் சென்ற கொக்குவில் இந்துக் கல்லூரியின் சமூகம்

யாழ்ப்பாணம், நவ. 5

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கல்விச் சமூகத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை கைதடி அரச முதியோர் இல்லத்துக்குச் சென்று அங்குள்ள முதியவர்களுடன் மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

"பிள்ளைகள்தான் தமது பெற்றோரைப் பராமரிக்க வேண்டும்" என்ற தொனிப்பொருளில் கருத்தமர்வையும் அங்கு மாணவர்கள் ஏற்பாடு செய்து நடத்தினார்கள். மாணவர்களால் முதியோர்களுக்கு சிற்றுண்டிகளும் அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டன. (ம-17)

## சாவ. மருத்துவமனையில் தோல் சிகிச்சைப் பிரிவு!

யாழ்ப்பாணம், நவ. 5

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் தோல் சிகிச்சைப் பிரிவு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதி புதன்கிழமைகளில் யாழ். போதனா மருத்துவமனை தோல் மருத்துவநிபுணர் வருகைதந்து பரிசோதனைகளை மேற்கொண்டு சிகிச்சை வழங்குகிறார் எனவும் தொடர் சிகிச்சை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மருத்துவர்களால் பிரதி திங்கட்கிழமைகளில் வழங்கப்படுகிறது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 5

பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு டெங்குக் கட்டுப்பாட்டு விழிப்பணர்வுக் கருத்தரங்கு பாடசாலை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் ஆ. ஜென்சன் றொனால்ட் மாணவர்களுக்குக் கருத்துரை வழங்கினார். (ம-9)






## கணினி மயமாகிய வங்கி நடவடிக்கை

சாவகச்சேரி, நவ. 5

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியின் நடவடிக்கைகள் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன. வங்கியின் வாடிக்கையாளர்கள் தமது புத்தகத்துடன் வருகை தந்து கணினி மயப்படுத்தப்பட்ட புதிய கணக்குப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (ம-9)



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சிற்பி ஜயரத்தினத்தின் நினைவு தினமும் பரிசளிப்பு நிகழ்வும் கல்லூரி அதிபர் மணிசேகரம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றன. முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மெய்யியல் துறையின் முதுநிலை விரிவுரையாளர் சிவகரன் மற்றும் சிறப்பு விருந்தினராக மனிதவள முகாமைத்துவ நிபுணர் சாள்ஸ் விக்டர் சுதாகரன் சேவியர், மதிப்புறு விருந்தினராக தெல்லிப்பழை சிறி துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-23)

# இளைய வளர்ப்பு வாழைச் செய்கைக்கு யாழ்ப்பாண குடாநாட்டில் பலர் ஆர்வம்



யாழ்ப்பாணம், நவ. 5

யாழ்ப்பாணமாவட்டத்தில்இளைய வளர்ப்பு வாழைச் செய்கையில் ஈடுபடுவதற்கு செய்கையாளர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர். கடந்த வருடம் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் பெரும் வெற்றி கிட்டியதை அடுத்தே இந்த வருடம் அனேகமானோர் இளைய வளர்ப்பு வாழைச் செய்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

இந்த இளைய வளர்ப்பு வாழைச் செய்கையில் ஈடுபடுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட 25 வரையிலான செய்கையாளர்களுக்கு அதற்கான இளைய வளர்ப்பு இன வாழைக் குட்டிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஒவ்வொரு செய்கையாளர்களுக்கும் 220 வரையிலான வாழைக்குட்டிகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

உரும்பிராய், ஊரெழு, புத்தூர், தெல்லிப்பழை ஆகிய பிரதேசங்களில் இந்த இளைய வளர்ப்பு வாழைச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த ஆண்டு குடாநாட்டில் முதன்முதலாக இந்த இளைய வளர்ப்பு வாழைச் செய்கை பரிட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டது. அதில் அதிக வருமானம் பெறப்பட்டதை அடுத்தே இந்த வருடம் பலரும் இளைய வளர்ப்பு வாழைச் செய்கையில் ஈடுபட ஆர்வம்காட்டிவருகின்றனர். (ம-17)

# பரிசளிப்பும் ஒளிவிழாவும்

## தர்மக்கேணி அ.த.க.பா.



பளை தர்மக்கேணி அ.த.க. பாடசாலையின் பரிசில்நாள் நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

பாடசாலையின் அதிபர் வே.செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் பா.வாசுதேவன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம்கிருபாசாரதியபயிற்சிப்பாடசாலையின் அதிபர் அ.கிருபாகரன், பளைப் பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர் ந.பிரேமவாசன் ஆகியோரும் மதிப்புறு விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய தகவல் தொழில்நுட்ப பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் க.குமரனும் கலந்து கொண்டனர்.

## தமிழ்க் கந்தையா வித்தி



கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தின் வருடாந்த ஒளி விழா நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் அதிபர் எஸ்.சிவராஜன் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக முன்னாள் மேலதிக மாகாணப் பணிப்பாளர் திருமதி பி.செல்வின் இறேனியஸ் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக வலிகாம வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் என்.காண்டீபன்அவர்கள், மதிப்புறு விருந்தினர்களாக அருட்தந்தை அன்ரன் புனிதகமார் வண.ஜ.இராஜ்குமார், யாழ்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் கே.ஆர். கமலநாதன் மற்றும் சேவைக்கால அசிரிய அலோசகர் திருமதி றிச்சேட் றேமன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை



அச்சுவேலி ஆரம்பப் பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அச்சுவேலி இராஜமாணிக்கம் திருமண மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருவே.குணசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணக் கல்வி வலய வலயக்கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, யாழ்ப்பாணக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.சசிகுமார் ஆகியோரும் மதிப்புறு விருந்தினராக வலிகிழக்கு பிரதேச சபை உறுப்பினர் செ.நிக்சனும் கலந்து கொண்டனர். (ம-9,159)

## ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல்

சாவகச்சேரி, நவ. 5

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்களின் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய, கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிரேமதாஸும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச ஆரம்பப் பிள்ளைப்பருவ அலுவலர் செ.வினோதன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர்செ.பேரின்பநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-9)

## உந்துருளி விபத்தில் இருவருக்குக் காயம்

சாவகச்சேரி, நவ. 5

உந்துருளி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் சாவகச்சேரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. காயமடைந்தவர்களான மீசாலை கிழக்கைச் சேர்ந்த சுதன் விஜிதரன் (வயது 20), எட்வேட் ராஜா சோபனா (வயது 20) இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். (ம-9)



யாழ்பாணத்தில் இயங்கும் 'தாய்மண் நல்வாழ்வுசார் தொண்டு அமைப்பு' கச்சாய் அ.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் 13 மாணவர்களுக்கு அண்மையில் சில உதவிகளைச் செய்தது. பாடசாலையின்அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. (ம-9,159)

## வர்த்தக கட்டடம் சீரமைப்பு

யாழ்ப்பாணம், நவ. 5

கோப்பாய் சந்திக்கு அருகாமையில் உள்ள வலி. கிழக்குப்பிரதேசசபைக்குச் சொந்தமான வர்த்தக மற்றும் சந்தைக் கட்டடத்தைச்சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் க.சர்வேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த சந்தைக் கட்டடத் தொகுதி சீரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. இந்தக் கட்டடத் தொகுதியில் உள்ள சகல வர்த்தக நிலையங்களும் சீர்செய்யப்பட்டு வருகின்றன. ஏற்கனவே கட்டடத்தொகுதியில்உள்ள மரக்கறி விற்பனைக் கூடமும் வர்த்தகத் தொகுதியாக மாற்றப்பட்டு வருகிறது. (ம-17)

## பரமேஸ்வரா வித்தியின் பரிசளிப்பு

சாவகச்சேரி, நவ. 5

யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலையின் அதிபர் ரி.செல்லக்குமார் தலைமையில் பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலர் மு.கனகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-9)

## கிணற்றுக்குள் தவறி வீழ்ந்தது பக்கோ மயிரிழையில் உயிர் தப்பினார் சாரதி



சாவகச்சேரி, நவ. 5

சாவகச்சேரி பெருங்குளம் வயல் பகுதியில் குளக்கட்டுக்கு மண் அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பக்கோ வாகனம் பாதுகாப்பற்ற கிணற்றினுள் தவறி வீழ்ந்தது. வாகனத்தைச் செலுத்திவந்த சாரதி வாகனக் கதவைத் திறந்து மயிரிழையில் உயிர் தப்பினார். கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

குளத்தைச் சுற்றிக் காணப்பட்ட மண் அணைகள் சேதமடைந்திருந்ததால் அதனைச் சீரமைத்துத் தருமாறு விவசாயிகள் செய்த முறைப்பாட்டினையடுத்து குளக்கட்டினைச் சுற்றி மண் அணைக்கும் பணிகள் கடந்த ஒரு வாரகாலமாக இடம்பெற்று வந்தன. கடந்த இரு தினங்களாக பெரும்மழை பெய்ததையடுத்து வயல்களில் நீர் நிறைந்து காணப்பட்டது. இதனால் வயலில் உள்ள கிணறும் நிறைந்து வித்தியாசம் தெரியாமல் காணப்பட்டுள்ளது. இதையடுத்தே பக்கோ கிணற்றுக்குள் வீழ்ந்தது என்று சொல்லப்படுகிறது.

சாரதி தன்னைச் சுதாகரித்துக்கொண்டு கதவைத் திறந்து அதிர்ஸ்டவசமாக உயிர் தப்பினார். இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9,159)

# மழை காலத்தில் வீதிகள் சீரமைப்பால் மக்களும் மாணவர்களும் பாதிப்பு





வவுனியா,நவ.5

வவுனியா நாகர் இலுப்பைக்குளம் செல்லும் முதன்மை வீதி தற்போதைய பருவமழைகாலத்தில் சீரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருவதால், பாடசாலை மாணவர்கள் இரண்டு கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், பாடசாலைச்சீருடைகளும் பழுதடையும் நிலையும் காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த வியடம் குறித்து மேலும் தெரிய வருகையில், வவுனியாவிலிருந்து நாகர்- இலுப்பைக்குளம் செல்லும் முதன்மை வீதியில் இரண்டு கிலோ மீற்றர் தூரம் தற்போது மழையுடனான கால நிலையில் சீரமைப்புச் செய்யப்படுகின்றது. இதனால் அவ்வீதியூடாக வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்படுவதுடன் மாணவர்கள் இரண்டு கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இதனால் பாடசாலைச்சீருடைகள் பழுதடையும் நிலை காணப்படுகின்றதுடன், மழை காலத்தில் சீருடைகள் பயன்படுத்த முடியாத நிலையும் காணப்படுகின்றது. இவ்வாறு மழை காலத்தில் வீதியைச் சீரமைப்பு செய்யும்போது, கிரவல்மண்,மழைநீருடன்கலந்துசென்றுவிடும். இதனால் எவ்வித நன்மைகளும் ஏற்படப்போவதில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## கல்விக் கருத்தரங்கு

முல்லைத்தீவு,நவ .5

யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் தமிழ் மாணவர்களின் "விழிகள்" அமைப்பின் ஊடாக வருடா வருடம் பின்தங்கிய பாடசாலை மாணவர்களைபரீட்சைக்குத் தயார்படுத்தும் வகையில், க.பொ.த சாதாரணம், உயர்தரப் பரீட்சைகளிற்கு முன்னரான கணித, விஞ்ஞானப் பாட மீட்டல் கருத்தரங்கு ஒன்று ஒரு வாரகாலமாக நடைபெற்று வருகின்றது.

கடந்த மாதம் 24 ஆம் திகதி ஆரம்பித்த இந்த மீட்டல் கருந்தரங்கு செயற்திட்டம் நேற்றுவரை இடம்பெற்றது . (110)



## 38 இலட்சம் பெறுமதியான வேலைத்திட்டங்கள் பூர்த்தி



வவுனியா,நவ .5

வவுனியா தெற்கு தமிழ்பிரதேச சபையால் 38 இலட்சம் பெறுமதியான வேலைத்திட்டங்கள் பூர்த்திசெய்பட்டு உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கபட்டது.

வவுனியா தெற்குப்பிரதேச சபையினுடைய நிதியிலிருந்து வவுனியா மணிப்புரம் கிராமத்தில் மூன்று மில்லியன் ரூபா செலவில் ஆயுர்வேத மருத்துவமனை நேற்றுக் காலை திறந்துவைக்கபட்டது.

அத்துடன் பிரதேச்சபைக்கு சொந்தமான ஓமந்தையில் அமைந்துள்ள பாரம்பரிய உணவகத்தில் எட்டு இலட்சம் ரூபா செலவில் புதிதாக ஒரு சமையலறை அமைக்கபட்டு பயன்பாட்டிற்காக திறந்துவைக்கப்பட்டது.

தெற்குதமிழ்ப் பிரதேச சபையின் தலைவர் து.நடராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேசசபை உறுப்பினர்கள், சபையின் செயலர், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (110)

## கசிப்பு வைத்திருந்த பெண் உள்ளிட்ட இருவர் கைது

கிளிநொச்சி,நவ. 5

உடமையில் கசிப்பை வைத்திருந்த பெண் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்

கிளிநொச்சி மாவட்டத்தின் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர் சிறீவர்த்தனவின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின், பொறுப்பதிகாரியான சதுரங்க வழிநடத்தி வருகின்றார், தருமபரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலேயே இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டு போத்தல் கசிப்பினை உடமையில் வைத்திருந்த பெண்ணையும் 5



போத்தல் கசிப்பினை உடமையில் வைத்திருந்த நபரையும் கைது செய்யதுள்ளதாகவும், கைது செய்யப்பட்டவர்களும், சான்றுப் பொருள்களும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (6)



## தென்மராட்சி பிரதேச செயலகத்தின் பிரிவுபசார நிகழ்வு

கொடிகாமம், நவ.5

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் பிரிவுபசார நிகழ்வு 31 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. (159, 9)

## திறன் வகுப்பறைத் திறப்பு நிகழ்வு

கிளிநொச்சி,நவ. 5

பளை பேராலை சோரன்பற்று பாடசாலையின் திறன் வகுப்பறை திறப்பு நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த வெள்ளிக் கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் 0.3 மில்லியன் ரூபா பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து, பேராலை கிராமத்தின் பளை சோரன்பற்று சி.சி. தமிழ்க் கலவன் பாடசாலைக்குரிய திறன் வகுப்பறை அமைக்கப்பட்டு திறப்பு நிகழ்வு இடம் பெற்றது

நினைவுக் கல்லினை முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் கல்வி அமைச்சர் குருகுலராஜா திரைநீக்கம் செய்ய, வகுப்பறையினைப் பிரதேச செயலர் பரமோதயன் ஜெயராணி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் முன்னைநாள் வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராசா, பிரதேச செயலர் திருமதி பரமோதயன் ஜெயராணி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு.சுரேன் , பச்சிலைப்பள்ளிபிரதேச சபைத் உறுப்பினர்கள் றமேஷ்,கோகுல்ராஜ், அருள்ச்செல்வி மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் அயல் பாடசாலை அதிபர்கள் பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (6)



## பரிசளிப்பு நிகழ்வு



கிளிநொச்சி,நவ .5

கிளிநொச்சி கிராஞ்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை முதல்வர் ச.லதீஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக ப.அருந்தவசெல்வம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ,திட்டமிடல் வலயகல்வி அலுவலகம் பூ.திருக்குமார், த.லோகேஸ்வரன் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரோடு பழைய மாணவர்கள் பெற்றோர்கள் நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (222)



வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் மீன் ஏல விற்பனை நிலையம் நேற்றுக் காலை 11 மணிக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் நிதியுதவியில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு நேற்று மருதங்கேணிப் பிரதேசசெயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.



## மாந்தை பிரதேச இலக்கிய விழா எட்டு கலைஞர்களுக்கு விருதுகள்

மன்னார்,நவ.5

மாந்தை மேற்கில் சிறப்பாக இடம்பெற்ற பிரதேச இலக்கிய விழாவில் தெரிவு செய்யப்பட்ட எட்டுக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாந்தை மேற்குப் பிரதேசச் செயலக கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகார சபை இணைந்து நடத்திய 'பிரதேச இலக்கிய விழா' நேற்றுமுன்தினம் மாலை அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பிரதேச இலக்கிய விழா நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக, மன்னார் மாவட்ட மேலதிக அரச செயலர் எஸ்.குணபாலன், மற்றும் சிறப்பு விருந்தினர்களாக மடு வலயக் கல்விப்பணிப்பாளர் கே.சத்தியபாலன், மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் பி.எம்.செபமாலை.மாந்தை மேற்குப் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் எஸ்.செளந்தரநாயகம், ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர் ஏ.அந்தோனி முத்து ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டது. யேசுதாசன் சாரா நீராஜா (சித்திரக் கலை), சி.பெலிக்ஸ் ஜெனிவர் (சித்திரக்கலை).எ.டெலிஸ்ரன் நீஸாந் (மிருதங்க இசை) ஆகிய மூவருக்கும் இளம் கலைமதி விருது வழங்கி வைக்கப்பட்டதோடு, சந்தியாப்பிள்ளை அருளானந்தம்(இசை,

கீ போட்வாத்தியக்கலை), பெரியசாமி முத்துக்கருப்பன் (பாடல் எழுத்துருவாக்கம்) முஹமட் இமாம் ஹன்பர் (எழுத்தாளர்,இயற்துறை), வேலு சந்திரகலா (எழுத்தாளர்,பல்கலைகள்).கலாபூசணம் கிறிஸ்தோகு சந்தியோகு (மிருதங்க இசை) ஆகிய ஐவருக்கும் கலைமதி விருது வழங்கி மதிப்புறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (56)



## முன்பள்ளி கல்வி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

முல்லைத்தீவு,நவ.5

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைக் கல்வி வலயத்தில் முன்பள்ளி கல்வி டிப்ளோமா படித்த 22 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முல்லை வலயக்கல்விப் பணிமனையில் நடைபெற்றுள்ளது.

முல்லை கல்வி வலயத்தின் முன்பள்ளிகளுக்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் க.தவராசா , சிறப்பு விருந்தினர்களாக கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இ.கவாஸ்கர் , மற்றும் மாகாண முன்பள்ளி பணிப்பாளர், வேள்ட் விசன் நிறுவனத்தின் முகாமையாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளதுடன் ,ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி மதிப்பளித்துள்ளார்கள். (ரி -3)



## வீதி விளக்கு பொருத்தும் பணி

கிளிநொச்சி ,நவ .5

திருமுறிகண்டிப் பகுதியில் பிரதேச சபையினரால் வீதி விளக்குப் பொருத்தும் பணி நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளரின் முயற்சியால் குறித்த பணி இந்து புரம் , திருமுறிகண்டி பகுதியில் துரித கதியில் நடைபெற்றது. (222)

### கிளிநொச்சி நகரில்

# கழிவுகளால் நிறைந்துள்ள குளத்தைச் சீரமைக்கவும்

## இனியும் இழுத்தடிக்காதீர்கள் என்று பிரதேச சபையிடம் மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, நவ. 5**

**கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள குளம் நகரின் கழிவுகள் கொட்டுகின்ற இடமாகக் காணப்படுகிறது என்று பல தரப்பினர்களாலும் சுட்டிக்காட்டப்படுகிறது.**




நகரின் மத்தியில் அமைந்துள்ள மருதமரங்களால் சூழப்பட்ட அழகிய இயற்கைச் சூழலில் காணப்படும் இந்தக் குளம் தற்போது, நகரின் கழிவுகளும் சேர்ந்து அழுக்கான நிலையில் காணப்படுகிறது.

நகரின் பல இடங்களிலும் இருந்து கொண்டு செல்கின்ற பிளாஸ்ரிக் கழிவுகள் உள்ளிட்ட பல கழிவுப் பொருள்களும் குளத்தின் நீரேந்து பகுதிகளில் கொட்டப்படுகின்றன. குளத்துக்கு வெள்ளநீர் வருகின்ற வாய்க்கால்களிலும் சில்ர் கழிவுகளைக் கொட்டுகின்றனர்.

இந்தக் கழிவுகள் மழைக் காலங்களில் நீரில் அடித்துசெல்லப்பட்டுக் குளத்துக்குள் கொண்டுசேர்க்கப்படுகிறன.

இது தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டும், சபை அமர்வில் உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டும் நடவடிக்கை எதுவும்,இதுவரை எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் குறிப்பிடுகின்றனர். இது தொடர்பில் பிரதேச சபையினர் இனியாவது கவனம் செலுத்த வேண்டும் என்று கோரப்படுகிறது. (4,214)



சுவிஸ் சொளத்தூணைச் சேர்ந்த தவம் சரண்யனின் 18 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, அக்கராயன் குளம் அம்பலப் பெருமாள்புரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்குக் கடந்த முதலாம் திகதி கற்றல் உபகரணங்களும் சிறப்புணவிற்காக ஒரு தொகைப்பணமும் வழங்கப்பட்டது. (222)

## கஞ்சா வைத்திருந்தவர் கைது

கிளிநொச்சி,நவ.5

கஞ்சாவினை உடமையில் வைத்திருந்த இருவரை கள்ளுத்தவறணையில் வைத்து கைது செய்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர் சிறீவர்த்தனவின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரியாக சதுரங்க வழிநடத்தி வருகின்றார் நேற்றைய தினம் இரணைமடுப் பகுதியில் அமைந்துள்ள, கள்ளு விற்ப்பனை நிலையத்தில் மேற்க்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 1.800 மில்லி கிராம் கஞ்சாவினை உடமையில் வைத்திருந்த நபரையும் 2 கிராம் கஞ்சாவினை உடமையில் வைத்திருந்த நபரையும் கைது செய்துள்ளதாகவும், கைது செய்யப்பட்ட இருவரையும் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காகக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக, கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (6)



## நீண்டகாலமாக திருத்தப்படாத பாலத்தினால் விவசாயிகள் சிரமம்


முல்லைத்தீவு,நவ.5

முல்லைத்தீவு வவுனிக்குள நீர்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான மல்லாவி திருநகர் முதன்மை வீதியினையும், டி15 வீதியினையும் இணைக்கும் வீதியில் அமைந்துள்ள ,நீர்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான பாலம் நீண்டகாலமாக சீரமைக்கப் படாமையினால் விவசாயிகள் வயல் நிலங்களுக்கு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளார்கள்.

வவுனிக்குளம் நீர்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான வலதுகரை வாய்க்காலில் அமைந்துள்ள நான்கு பாலங்கள் சீரமைக்கப்படாமையினால், இந்தப் பாலம் ஊடாக உழவியந்திரங்களைக் கொண்டு செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள். பல நூற்றுக் கணக்கான விவசாயிகள் இந்த பாலங்கள் ஊடான போக்குவரத்தினை மேற்கொண்டு வருகின்றார்கள். குறிப்பாக திருநகர் முதன்மை வீதியில் இருந்து சுடலை செல்லும் வீதியில் அமைந்துள்ள முதன்மைப் பாலம் 1961 ஆம் ஆண்டு போடப்பட்டது. இந்தப் பாலத்தை தான் இப்போதும் பயன்படுத்தி வருகின்றார்கள் என்றும், இதே போன்று வவுனிக்குளத்தின் வலதுகரை வாய்க்கர்லை மையப்படுத்தி நான்கு பாலங்கள் காணப்படுகின்றன .இந்த பாலங்களை சீரமைத்து தருமாறு நீர்பாசனத்திணைக்களத்துக்கு கோரிக்கைவிடுத்தும், இதுவரை சீரமைக்கப்படவில்லை தற்போது காலபோக விதைப்பு காலம் முடிவடைந்துள்ளது.

இதன்போது பல உழவு இயந்திரங்கள் இந்த பாலங்களில் விபத்துக்களை எதிர்கொண்டுள்ளன எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இந்த பாலத்தினை சீரமைத்து தருமாற விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (ரி -3)





## பார்த்தீனியம் அழிக்க தவறியவர்கள் மீது சட்ட நடவடிக்கை

அச்சுவேலி, நவ.5
யாழ்ப்பாணத்தில் முதற்கட்டமாகக் கோப்பாய், தெல்லிப்பழை, உடுவில், பிரதேச செயலகப் பிரிவில் பார்த்தீனியம் அழிக்கத் தவறியவர்கள் மீது சட்ட நடவ்டிக்கை எடுக்கப்படுகின்றது.

சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு 30 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பார்த்தீனியத்தை அழிக்கத் தவறிய 158 காணி உரிமையாளர்களுக்கு மஞ்சள் அறிவித்தல் வழங்கப்பட்டு இரண்டு வார அவகாசம் வழங்கப்பட்டது. அதில் ஏழு பேருக்குச் சிவப்பு நிற அறிவித்தல் வழங்கப்பட்டது.

பார்த்தீனியம் அழிக்கப்படாமல் இருக்கும் காணிகள் தொடர்பான விவரங்களை உடன் அறியத்தருமாறு யாழ்ப்பாண மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி அஞ்சனாதேவி சிறிரங்கன் அறிவித்துள்ளார்.

பார்தீனியங்களை அழிக்கத் தவறியவர்கள் மீதான சட்ட நடவடிக்கை தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதற்கட்டமாகக் கோப்பாய், தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலக பிரிவில் பார்த்தீனிய அழிப்புத் தொடர்பான சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் 27.5 ஏக்கர் நிலப்பரப்பில் பார்த்தீனியம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. மேலும் நடவடிக்கை தொடர்கின்றது. பார்த்தீனியத்தை அழிக்கத் தவறிய காணி உரிமையாளர்கள், குத்தகையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பாத்தீனியத்தை அழிக்கத் தவறியவர்கள் மீது நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் "ஒரு மாதத்துக்கு குறையாததும் ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது பத்தாயிரம் ரூபாவுக்கு குறையாததும் அல்லது ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம் அறவிடப்படும் அல்லது இவை இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்."

வடக்கு மாகாணத்தில் பார்த்தீனிய அழிப்பு சட்ட நடவடிக்கைக்கு 114 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் 30 அலுவலர்கள் நிய மிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த 19 அலுவலர்களும், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் இருந்து 8 அலுவலர்களும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் இருந்து 3 அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பார்த்தீனியம் அழிக்கப்படாமல் இருக்கும் காணிகள் தொடர்பான விவரங்களை விவசாயப் பணிப்பாளர் நாயகம், பிரதேச செயலர்கள் மற்றும் விவசாயப் போதனாசிரியர்கள், கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், விவசாய முகவர் ஆகியோருக்கு உடனடியாக அறிவிக்கவும்.

சட்டநடவடிக்கை மேற்கொள்வதற்கான அலுவலர்கள் காணிகளைப் பார்வையிட வரும்போது அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவவேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (11)

### தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின்

# வடக்குக்கான நிதியில் இதுவரை 173.67 மில்லியன் ரூபா விடுவிப்பு

### ஏனைய வேலைகளை விரைவுபடுத்தவும் பணிப்பு

**யாழ்ப்பாணம், நவ. 5**
**தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அமைச்சின் கீழ் வடக்கு மாகாணத்துக்கு அனுமதிக்கப்பட்ட 400.961 மில்லியன் ரூபாவில் இதுவரை 173.67 மில்லியன் ரூபா பல்வேறு உட்கட்டுமான வேலைக்காக விடுவிக்கப்பட்டுள்ளன.**

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அமைச்சின் செயலாளர் விடுத்த அறிவிப்பில் இதுகுறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 2018இல் உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டத்துக்காக 182.59 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

இதில் கடந்த ஒக்ரோபர் 10ஆம் திகதி வரை 54.15 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்ட வேலைத்திட்டத்துக்காக விடுவிக்கப்பட் டுள்ளது.

இதேபோல மன்னார் மாவட்டத்துக்கு 83.12 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு இதுவரை 47.32 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 85.84 மில்லியன் ஒதுக்கப்பட்டு இதுவரை 58.99 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு 13.23 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு இதுவரை 7 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்துக்கு 30.817 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு இதுவரை எந்த நிதியும் விடுவிக்கப்படவில்லை.

மொத்தமாக 5 மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதியை (400.961 மில்லியன் ரூபா) முழுமையாக செலவிடவும் அதற்கான முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைச்சு மாவட்டச் செயலர்களுக்குப் பணித்துள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,50)



## வீடுகளை விட்டு மக்கள் வெளியேற்றம் குற்றச்செயல்களும் அதிகரிப்பு

கிளிநொச்சி, நவ.5
கல்லாறுப் பகுதியில் வீட்டுத் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளில் மக்கள் இல்லாத காரணத்தால் அதனை வேறு குற்றச்செயல்களுக் குப் பயன்படுத்துவதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு கிராமத்தில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு சுமார் 20 மேற்பட்ட வீடுகளில் மக்கள் வசிக்காத நிலை காணப்படுகின்றது.

இந்த வீடுகளைப் பயன்படுத்திச் சிலர் சமூக விரோதச் செய்றபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் கசிப்பு உற்பத்தி போதைப்பொருள், புகைத்தல் எனச் சில செயற்பாட்டுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பாகப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இவ்வாறான வீடுகளில் வந்து நின்று இரவு நேரங்களில் கொள்ளை,திருட்டு போன்ற செயற்பாடுகளில் ஈடுபடவும் வாய்ப்பா க உள்ளதாகவும் இதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீடுகளில் வசித்த மக்கள் வேறு இடங்களுக்கு சென்று வசிப்பதாகவும் இங்கு காணப்படுகின்றதண்ணீர்ப்பிரச்சினை மற்றும் போக்குவரத்து வசதி இன்மை அடிப்படை தேவைகளின் குறைபாடு மற்றும் பிள்ளைகளின் கல்வி காரணமாகவே அவர்கள் வேறு இடங்களில் சென்று வசித்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கிராம அலுவலரிடம் கேட்ட போது, "இந்தப் பகுதியில் பெரும்பாலான வீடுகளில் மக்கள் வசிக்காத நிலமைகள் காணப்படுகின்றன. மக்கள் தொடர்ச்சியாகப் பதிவுகளை வெட்டி வெளியேறுகின்றனர் அங்கு வசிப்பதற்கான சூழ்நிலை இல்லை என்கின்றனர். குறிப்பாகச் சில சமூகச் சீர்கேடு விடயங்கள் இடம் பெறுகின்றன. இது தொடர்பில் பொலிஸாரும் நடவடிக்கை எடுக்கின்றபோதும் குறைவதாக இல்லை எனத் தெரிவித்தார். (6)

## கால்கோள் விழா ஜனவரி 17 இல்

யாழ்ப்பாணம், நவ. 5
ஆரம்பப் பிரிவுகளைக் கொண்ட அனைத்துப் பாடசாலைகளிலும் 2019 ஆம் ஆண்டுக்கான கால்கோள்விழா ஜனவரி 17 ஆம் திகதி இடம்பெறும் என கொழும்பு கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராய்ச்சி அறிவித்துள்ளார். இந்த தினத்துக்கு முன்னர் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளக்கூடிய மாணவர்களை உள்வாங்கும் வேலைத்திட்டங்களை தயார் செய்யுமாறும் அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் முறையாக வகுப்புக்களை ஆரம்பிக்கும் போது தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வை மேற்கொள்ளுமாறும், தேசிய மற்றும் பாடசாலைக் கொடிகளை ஏற்றல், தேசிய கீதம், பாடசாலைக் கீதம் இசைத்தல் போன்றவை மேற்கொள்ள வேண்டுமெனவும். இந்த வேலைத்திட்டத்துக்குப் பாடசாலையின் சகல பிரிவுகள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் ஆகியோரது பங்களிப்பையும் பெற்றுக்கொள்ளுமாறும்அறிவித்துள்ளார். (9 - 159)

## பளை தர்மக்கேணி பாடசாலையில் சிறப்புற்ற வருடாந்தப் பரிசளிப்பு

பளை தர்மக்கேணி அ.த.க.பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

அதிபர் வே.செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கிளிநொச்சி கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் பா.வாசுதேவனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணத்திலுள்ள கிருபா சாரதிய பயிற்சிப் பாடசாலை அதிபர் அ.கிருபாகரன், பளை பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர் ந.பிரேமவாசன் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய தகவல் தொழில்நுட்ப பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் க.குமரனும் கலந்து கொண்டனர்.

பொருளாதார நிலையில் பின்தங்கிய கற்றலில் ஆர்வமுள்ள மாணவிக்கு ஈருருளி வழங்கப்பட்டது. மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. (4,9)

## நியமனம் வழங்கல் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.5
வடக்கு மாகாணத்தில் உள்ள திணைக்களங்களில் கானப்படும் சுமார் 80 வெற்றிடங்களுக்குமான நியமனம் இன்று வழங்கப்படவிருந்த நிலையில் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
இந்த நியமனங்கள் ஆளுநர் செயலகத்தில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டன.
இந்த நிலையில் நிகழ்வு இரத்துச் செய்யப்படுவதாக நேற்றைய தினம் திடீரென அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக இன்று வழங்கப்படவிருந்த நியமனங்களும் பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
இதேநேரம் கொழும்பில் இன்றைய தினம் மகிந்தவிற்கு ஆதரவாக இடம்பெறும் போராட்டப் பணிகளிலும் மகிந்தவுக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைப்பதில் முனைப்புக் காட்டிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (105)

# பாதுகாப்பு, சுகாதாரத் தொழிலாளர்களின் கொடுப்பனவை உரியவாறு வழங்குங்கள்

## கோரிக்கை விடுக்கின்றனர் அவர்கள்

*யாழ்ப்பாணம், நவ. 5*
*வடக்கு மாகாணத்தில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தொழிலாளர் சேவையில் ஈடுபடும் ஊழியர்களுக்குச் சம்பள அளவுத் திட்டத்துக்கு அமைவாக நாளொன்றுக்கான சம்பளம் வழங்கப்படுவதில்லை என்று ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.*

வடக்கு மாகாணத்தில் உள்ள திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்குப் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைக்குத் தனியார் நிறுவனத்தின் ஊழியர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். அரச சம்பள அளவுத் திட்டத்தின்படி நாளாந்த சம்பளம் வழங்கப்படுவதில்லை. தொழிலாளி ஒருவருக்கு அடிப்படைச் சம்பளம் 600 ரூபா, கொடுப்பனவு 140 ரூபா, ஓய்வூதிய நிதி 111 ரூபா உட்பட 851 ரூபா நாளாந்தம் வழங்கவேண்டும் என்று நியதி உள்ளது. ஆனால் வடக்கு மாகாணத்தில் உள்ள திணைக்களங்கள் மற்றும் அலுவலகத்தில் பணி புரிவோருக்கு நாளொன்றுக்கு 639 ரூபாவே வழங்கப்படுகிறது. இது வாழ்க்கைச் செலவுக்குப் போதாது. வேலைக்குச் சென்றால்தான் வாழ்க்கையை நடத்த முடியும் என்ற நிலையில் பணி புரிகின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனர்.
இது தொடர்பில் இந்தச் சேவையை வழங்கும் நிறுவனம் ஒன்றுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தெரிவிக்கப்பட்டதாவது:
எம்மிடம் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தொழிளார்கள் உள்ளனர். வடக்கு மாகாண சபையால் கேள்விகோரல் நடைபெறும். அப்போது நாளொன்றுக்குக் குறைவான சம்பளத்தைப் பெறும் நிறுவனமே கேள்வி கோரலில் தெரிவு செய்யப்படும்.
தொழிலாளர்களின் வாழ்க்கையைக் கருத்திற்கொண்டு குறைந்த நாள் சம்பளத்துக்கு வேலை செய்யும் நிறுவனமே கேள்வி கோரல் மூலம் தெரிவு செய்யப்படும். ஆகவே அரச சம்பள அளவுத் திட்டத்துக்கு அமைவாக நாள் சம்பளம் வழங்க முடியாத நிலை காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் மாகாண சபையின் உயர் அதிகாரிகளுடன் பேசப்பட்டது. கேள்வி கோரலில் குறைந்த சம்பளத்துக்குச் சேவையாற்றுபவர்களுக்கே ஒப்பந்தம் வழங்கப்படும் என்று கூறினார்கள் என்று தொண்டர்கள் தெரிவித்தனர்.
அவ்வாறிருந்தாலும் இந்த நடைமுறையில் மாற்றம் ஏதாவது செய்தாவது தமக்கு உரிய கொடுப்பனவு கிடைக்க வழி ஏற்படுத்த வேண்டும் என்று பணியாளர்கள் கோருகின்றனர். (4,7)

## மரக்கறி வகைகள் இன்னும் உச்சவிலையே!

யாழ்ப்பாணம், நவ. 5
தற்போது பெய்துவரும் பருவப் பெயர்ச்சி மழை காரணமாக மரக்கறி வகைகளின் விலைகள் இன்னும் அதிகரித்த நிலையிலுள்ளன.
சகல மரக்கறி வகைகளுமே கிலோ நூறு ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றன.
பயிற்றை, கத்தரி, தக்காளி, பாகல், போஞ்சி, லீக்ஸ், கரட் போன்ற மரக்கறி வகைகள் கிலோ 200 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றன.
மரக்கறி விலை அதிகரிப்பால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கௌரி விரதம் மற்றும் கார்த்திகை மாதம் சுப வைபவங்கள் நடைபெறும் மாதம் ஆகையால் மரக்கறி வகைகளின் பாவனை அதிகரித்துள்ளமையும் விலை அதிகரிப்புக்கு மற்றொரு காரணம்.
திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், சங்கானை, சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற சந்தைகளுக்கு மரக்கறி வகைகள் மிகவும் குறைந்தளவிலேயே வந்து சேர்கின்றன.
இந்த மரக்கறி வகைகள் விலை அதிகரித்தாலும் கூட அவை உடனடியாக விற்றுத் தீர்ந்தும் விடுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (4,17)


## 2லட்சம் தென்னங்கன்றுகள் பயனாளிகளுக்கு வழங்கல்

யாழ்ப்பாணம், நவ. 5
தென்னை அபிவிருத்திச் சபை இந்த ஆண்டில் இதுவரைக்கும் 2 லட்சத்து 15 ஆயிரம் தென்னங்கன்றுகளை மக்களுக்கு விநியோகித்துள்ளன.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கே இந்தத் தென்னங் கன்றுகள் அதிகளவில் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று சபையின் பிராந்திய முகாமையாளர் தே. வைகுந்தன் தெரிவித்தார்.
தற்போது மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் அதிகமான மக்கள் தென்னைச் செய்கையில் ஆர்வம் காட்டிவருகின்றனர். அவற்றைக்கோரி விண்ணப்பித்துள்ளனர்.
கூடுதலான தென்னம் நாற்றுகளை நட்டு அதனூடாக அதிகமான தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவித்தார். (4,17)

## பருத்தித்துறை – பொன்னாலை வீதியில் போக்குவரத்துச் செய்யும் நேரம் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 5
பருத்தித்துறை - பொன்னாலை வீதியில் போக்குவரத்துச் செய்யும் நேரம் மேலும் இரண்டு மணித்தியாலங்கள் நீடிக்கப்பட்டுள்ளன. இரவு 9 மணி வரை அந்த வீதியால் பயணிக்க முடியும் என்று இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.
ராணுவம், பொலிஸாரின் வசமுள்ள காணிகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் கடந்த மாதம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. அதில் பொன்னாலை - பருத்தித்துறை வீதி தொடர்பாகவும் கதைக்கப்பட்டது. கடற்றொழிலுக்குச் செல்வோர் மற்றும் வேறு தொழில்களுக்குச் செல்வோர் இரவு 7 மணிக்கு முன்னர் வீதியைக் கடக்க வேண்டியுள்ளது. இதனால் அவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பில் இராணுவத்தினரிடம் கேட்கப்பட்டது. போக்குவரத்துக்கான நேரத்தை அதிகரிக்குமாறு ராணுவத்தினரிடம் கோரப்பட்டது. பொது மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு குறித்த வீதியின் போக்குவரத்தை இரவு 9 மணிவரை நீடிப்பதாக இராணுவம் அறிவித்தது. எனினும் தற்போதுவரை பலருக்கு அந்த வீதியில் போக்குவரத்துக்காக அனுமதிக்கப்பட்ட நேரத்தில் நீடிப்புச் செய்தது தெரியாதுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. வலி.வடக்குப் பிரதேச சபையினர் தற்போது மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு அந்த வீதியில் மின்விளக்கு களைப் பொருத்தி வருகின்றனர். பொன்னாலை - பருத்தித்துறை வீதி போர் காரணமாக 1990 ஆம் ஆண்டு மூடப்பட்டது. 55 கிலோ மீற்றர் நீளமான பருத்தித்துறை - பொன்னாலை வீதியின் 2.75 கிலோ மீற்றர், உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ளடங்கியிருந்ததால் அந்த வீதி பயன்படுத்த அனுமதிப்படவில்லை. போரின் பின்னரான சூழ்நிலைகளில் அந்த வீதியைத் திறக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.
கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக ராணுவத்தின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட மயிலிட்டி துறைமுகம், கடந்த வருடம் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டது. மயிலிட்டியில் வாழ்ந்த பெருமளவான மக்கள் பருத்தித்துறையில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்தனர். மயிலிட்டிக்குச் செல்ல குறிப்பிட்டளவு தூரத்தைக் கடக்க வேண்டிய நிலையிலும், குறித்த பாதைத் தடை காரணமாக அன்றாடம் 42 கிலோமீற்றர் தூரம் சுற்றியே பயணிக்க வேண்டியுள்ளது.
ராணுவத்தின் உதவியுடன் அந்த வீதியால் மக்கள் பயணம் செய்தனர். கடந்த பெப்ரவரி மாதம் அந்த வீதி முழுமையாக விடுவிக்கப்பட்டது. அரச பேருந்துகள் அந்த வீதியால் பயணித்தன. வீதியால் பயணிப்பதற்கு நேரக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. அதிகாலை 5 மணிமுதல் இரவு 7 மணிவரையுமே அந்த வீதியைப் பயன்படுத்த முடியும் என்று இராணுவத்தினர் தெரிவித்திருந்தனர். தற்போது மேலும் இரண்டு மணிநேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. (21,26)

# தென்னைப் பயிர்ச் செய்கை பற்றி வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்



யாழ்ப்பாணம், நவ. 5
யாழ்ப்பாணப் பிராந்திய தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையால் தென்னைப் பயிர்ச் செய்கை தொடர்பான வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சபை தெரிவித்துள்ளது.
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் தென்னை தொடர்பான விரிவாக்கல் நிகழ்ச்சி வெலிஓயா பிரதேசத்தில் ஜனகபுரம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன், பண்ணைத் திட்டமிடல் உத்தியோகத்தர் ஈ.சற்குணன், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.சுபாசினி மற்றும் ஆ.சிபான் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வில் தென்னை தொடர்பான தொழில்நுட்பக் கருத்துக்கள், பசளைப் பிரயோகம், நடுகை முறைகள், உற்பத்தித் திறனை அதிகரித்தல் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் 50 பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.
மற்றொரு நிகழ்வு வலி.தெற்குப் பிரதேச சபை மண்டபத்தில் காலை 9மணியளவில் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கற்பகதரு சங்கங்களின் எதிர்காலத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு ஏதுவாகத் திட்டங்கள் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன. சங்கங்களுக்கான சமாசமும் உருவாக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கற்பக சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் என 150 பேர் பங்குபற்றினர். (4,7)

## அமைச்சர்கள், எம்.பிக்களின் தொலைபேசி விவரம் பதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 5
நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் தொலைபேசி விவரம் 2019 சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தால் வெளியிடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
எனவே மேற்படி பதவிகளில் உள்ளோர் தங்களது அலுவலக தொலைபேசி இலக்கம், தொலைநகல், வதிவிட தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி, இணையத்தள முகவரி விவரங்களை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்று நாடாளுமன்றச் செயலர் நாயகப் பிரதிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.
இதற்கான 2019 தொலைபேசி விவரக் கொத்து விவரப் படிவம் ஊடாக விவரங்களையிட்டு அதில் கையொப்பமிட்டு உடன் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (4,50)

# ஏமன் போர்; பட்டினிச் சாவெய்திய 7 வயதுச் சிறுமி கவனத்தை ஈர்த்துக் கண்கலங்க வைத்த ஒளிப்படம்

சனா.நவ.5

**ஏமன் போரில் பட்டினியால் சாவடைந்த 7 வயதுச் சிறுமியைச் சித்திரிக்கின்ற ஒளிப்படம் செய்தியுடன் வெளியாகியிருக்கிறது. அது உலகத்தின் கவனத்தை ஈர்த்து அனைவரையும் கண்கலங்க வைத்துள்ளது.**



ஏமனிலுள்ள அகதிகள் முகாமில் இருந்த அமல் ஹூசேன் என்னும் 7 வயது சிறுமி பட்டினியால் பரிதாபமாகச் சாவடைந்துள்ளார். 'நியூ யோர்க் ரைம்ஸ்' பத்திரிகை, எலும்பும் தோலுமாக ஒட்டிக் கிடக்கும் உடலோடு அமலின் ஒளிப்படத்தை வெளியிட்டிருந்தது. அது உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தது. ஏமனில் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று பல்வேறு நாடுகளும் வலியுறுத்தியிருந்தன. இந்த நிலையில் அமல் ஹூசேன் பட்டினியால் பரிதாபமாகச் சாவடைந்திருக்கிறார். அவரின் தாய் மரியம் அலி, "என் இதயத்தைக் கூறுபோட்டதைப் போல் உணர்கிறேன். அமல் எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பாள். இப்போது என்னுடைய மற்றைய குழந்தைகளை நினைத்தால் கவலையாக இருக்கிறது" என்றிருக்கிறார்.

**பின்னணி**

அரபு நாடான ஏமனில் சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்திப் போராளிகளுக்கும் இடையே 2015ஆம் ஆண்டு மார்ச் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாகச் சவூதி அரேபியா செயல்படுகிறது. ஹவுத்திப் போராளிகளுக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

சவூதி அரேபியா தொடர்ந்து ஹவுத்திப் போராளிகளைக் குறிவைத்து ஏமனில் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில் ஏமனில் உள்நாட்டுப் போர் நடைபெற்ற இரண்டு வருடங்களில் சுமார் 3இலட்சத்துக்கு அதிகமான குழந்தைகள் பிறந்துள்ளனர். அவர்கள் ஒவ்வொரு நாளும் பசி, வன்முறை தாக்குதலை எதிர்கொண்டு வருகின்றனர். 5ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்தப் போர் காலங்களில் இறந்திருக்கலாம் அல்லது காயம் அடைந்திருக்கலாம். ஏமனின் ஒட்டுமொத்த இளம் தலைமுறையும் வறுமையிலும், வன்முறையிலும் வளர்கின்றனர் என்று ஐ.நா. கவலை அடைந்துள்ளது. அத்துடன் ஏமனில் சுமார் 50இலட்சம் குழந்தைகள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர் என்று பன்னாட்டுத் தொண்டு நிறுவனமான 'சேவ் த சில்றன்' அமைப்பும் தகவல் வெளியிட்டிருந்தது.

## "ஜமால் ஆபத்தான ஓர் இஸ்லாமியவாதி" அமெரிக்காவிடம் கூறிய சவூதி மன்னர்

ஜமால் ஆபத்தான ஓர் இஸ்லாமியவாதி என்று சவூதி இளவரசர் சல்மான் அமெரிக்காவிடம் கூறியதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. துருக்கியில் உள்ள சவூதித் தூதரகத்தில் ஜமால் கொல்லப்பட்டதைச் சவூதி ஏற்றுக் கொள்வதற்கு இடைப்பட்ட காலத்தில் அமெரிக்க அதிபரின் வாசஸ்தலத்துக்குத் தொலைபேசி வாயிலாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் மருமகனான குலஷ்னரிடம் சவூதி இளவரசர் பேசியுள்ளார். அந்த உரையாடலில் ஜமால் ஆபத்தான இஸ்லாமியவாதி என்றும், அவர் 'முஸ்லிம் பிரதர்வுட்' அமைப்பைச் சேர்ந்தவர் என்றும் சவூதி இளவரசர் கூறியதாக அமெரிக்காவிலிருந்த வெளியாகின்ற 'வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஜமால் கொலை விவகாரத்தில் அமெரிக்கா - சவூதி இடையே உள்ள விரிசலைச் சரி செய்வதற்கு இந்த உரையாடலில் இளவரசர் முயன்றுள்ளதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டை சவூதி மறுத்துள்ளது.

## இந்தோனேசியா வானூர்தி விபத்து மீட்புப் பணியில் ஈடுபட்டவர் சாவு

ஜகார்த்தா.நவ.5



இந்தோனேசியாவில் லயன் எயார் விமானம் கடலுக்குள் மூழ்கி விபத்துக்குள்ளாகியிருந்தது. அது மூழ்கிய ஜாவா கடல் பகுதியில் மீட்பு பணியில் ஈடுபட்டிருந்த நீர்மூழ்கி வீரர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் இருந்து கடந்த திங்கட்கிழமை சுமத்ரா தீவில் உள்ள பங்கால் பினாங்கு நகரை நோக்கிப் பயணித்த 'சென்ற லயன் எயார்' பயணிகள் விமானம், புறப்பட்ட சிறிது நேரத்தில் கடலில் விழுந்து நொருங்கியிருந்தது. இதில், விமானத்தில் பயணம் செய்த 189 பேரும் சாவடைந்திருந்தனர். ஜாவா கடல் பகுதியில் சிதறிக் கிடந்த 79 உடல்கள் மீட்கப்பட்டு அடையாளம் காண்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விமானத்தின் கறுப்புப் பெட்டி, விமானத்தின் செயல்பாடுகளை பதிவு செய்யும் தரவு பதிவு மற்றும் சில பாகங்களும் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், மீட்பு பணியில் ஈடுபட்ட இந்தோனேசியாவைச் சேர்ந்த நீர்மூழ்கி வீரர் ஒருவர் மீட்பு பணியின்போது சாவடைந்திருக்கிறார். சியாசுருல் ஆன்டோ (வயது-48) என்ற அந்த வீரர், தேடுதல் மற்றும் மீட்பு நிறுவனத்தின் தன்னார்வலர் என்றும், காற்றழுத்தம் குறைந்ததால் அவர் சாவடைந்திருக்கலாம் என்றும் கடற்படையின் தேடுதல் மற்றும் மீட்பு பிரிவுத் தலைவர் கூறியுள்ளார். செப்ரெம்பர் மாதம் பாலு பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டபோது அங்கு ஆன்டோ மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளார். இதேபோல் 4 ஆண்டுகளுக்கு முன்பு 'எயார் ஏசியா' விமானம் விபத்துக்குள்ளாகியிருந்தபோதும் இவர் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது



## தடையை நீக்காவிட்டால் மீண்டும் அணு ஆயுதப் பாதை

*அமெரிக்காவுக்கு வடகொரியா மிரட்டல்*

பியோங்யாங்.நவ.5

எங்கள் நாட்டின்மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா நீக்காவிட்டால், மீண்டும் அணு ஆயுதப் பாதைக்குச் செல்வோம் என வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது.

ஜூன் மாதம் சிங்கப்பூரில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப், வடகொரியா அதிபர் கிம் ஜோங் உன் ஆகியோர் சந்தித்துப் பேசினர். உலகமெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தப் பேச்சின்போது, கொரியத் தீபகற்பத்தில் அணு ஆயுதங்களை முழுமையாகக் கைவிடுவதற்கு கிம் ஜோங் உன் சம்மதம் தெரிவித்தார். இதுதொடர்பான ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டார். அதைத்தொடர்ந்து பெரிய வடகொரியா அணு குண்டுச் சோதனையையோ, கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையையோ நடத்தவில்லை. கடந்த சில தினங்களுக்கு முன் ட்ரம்பை மீண்டும் சந்தித்துப் பேச விருப்பம் தெரிவித்தார் கிம் ஜோங் உன். அதன் எதிரொலியாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் மைக் பாம்பியோ வடகொரியாவுக்குப் பயணம் செய்து கிம் ஜோங் உன்னை சந்தித்து பேசினார். விரைவில் இரண்டாவது முறையாக இருநாட்டு தலைவர்களும் சந்தித்துப் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், அமெரிக்கா அரசு உறுதியளித்ததைப் போல் வடகொரியாவின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகள் எதுவும் இன்னும் விலக்கப்படவில்லை. இந்த நிலையில், அமெரிக்கா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாவிட்டால் தங்கள் நாட்டின் கொள்கைப்படி அணு ஆயுத பலத்தை அதிகரிப்பதன் மூலம் நாட்டை பொருளாதார வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பப் போவதாக வடகொரியா எச்சரித்துள்ளது.

## மாயமாக மறைந்தது தீவு! வடக்கு ஜப்பானில் ஆச்சரியம்

டோக்கியோ.நவ.5

ஜப்பான் எப்போதும் பூகம்பங்கள், சுனாமி என்று கடும் இயற்கைச் சீற்றங்களை, பேரிடர்களை சந்தித்து வரும் நாடு என்பது நன்கு அறியப்பட்ட ஒன்று. இந்த நிலையில் வடக்கு ஜப்பானில் உள்ள சிறிய தீவு ஒன்று காணாமல் போயுள்ளது. இது ஜப்பான் அதிகாரிகளிடத்தில் அதிர்ச்சியையும் பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்து இந்தத் தீவு கடல்நீரில் மூழ்கிவிட்டதா? என்று ஆய்வு மேற்கொள்வதற்கு ஜப்பான் முடிவெடுத்துள்ளது. இந்தத் தீவின் பெயர் இசாம்பே ஹனகிட்ட கொஜிமா இந்தத் தீவு 1987ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இது எவ்வளவு பரப்பளவுடைய தீவு என்பது தெரியவில்லை. அண்மைக்காலத்தில் இது கடல் மட்டத்திலிருந்து 1.4 மீற்றர்கள் (நான்கரை அடி) உயரம் மேலே வந்தது. வடக்கு ஜப்பானின் ஹொக்கய்டோ தீவிலிருந்து கண்களுக்குத் தெரிந்தது. ஆனால் தற்போது அந்தத் தீவைக் காணவில்லை. பூகம்பம், உள்ளிட்ட காலநிலை மாற்றங்களால் தீவுகள் கடலுள் அமிழ்ந்து போவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கட்டுப்பாட்டை இழந்த பாரவூர்தியால் பயங்கர விபத்து தொடர்ச்சியாக 31 வாகனங்களை மோதித்தள்ளியது

## மோதுண்ட வாகனங்களுக்குள் சிக்கிச் சீனாவில் 15 பேர் சாவு

பீஜிங்.நவ.5



சீனாவின் அதிவேக நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச்சாவடி அருகே பொருள்கள் நிரப்பட்ட பாரவூர்தி ஒன்று திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் எதிரே வந்த மகிழுந்து உள்ளிட்ட வாகனங்களின் மீது அடுத்தடுத்து மோதி விபத்து ஏற்பட்டது. தொடர்ச்சியாக 31 வாகனங்களுடன் மோதியதில் அவை ஒன்றன் மேல் ஒன்றாகக் குவிந்தன. இந்த விபத்துக் குறித்த தகவலை அறிந்த பொலிசார் மற்றும் மீட்புப்படையினர் அங்கு விரைந்து சென்று விபத்தில் சிக்கியவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். இந்த விபத்தில் இதுவரை 15 பேர் சாவடைந்திருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன. மேலும், 44 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. இந்த விபத்துக்கான காரணம் குறித்துப் பொலலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சீனாவில் இது போன்று தொடர் வாகன மோதல் விபத்துகள் அடிக்கடி நிகழ்வது வழமையானது. போக்குவரத்து விதிமுறைகளை பாரவூர்தி ஓட்டுநர்கள் கடைபிடிப்பதில்லை என்கிற முறைப்பாடுகள் வருடம்தோறும் அங்கு அதிகரித்தே வருகின்றன.

திருமண பட்டுப்புடைவைகளின் ஆலயம்
Vani Tex
வாணி ரெக்ஸ்

தீபத்திருநாளை முன்னிட்டு வாணியின் விசேட விலைக்கழிவுகள்.
உங்கள் ஆடைத் தெரிவுகளுக்கு இன்றே முந்துங்கள்
* திருமண பட்டு சாறிகள்.
* பூப்புனித நீராட்டு விழா சாறி வகைகள்.
* பிறந்த நாள் விழாக்களுக்கான பாட்டி புறொக் மற்றும் மொடன் புறொக் வகைகள்.
* அரச, தனியார் நிறுவன ஊழியர்களுக்கான ஒரே நிறத்திலான சாறி வகைகள்.
* இந்தியாவிலிருந்து உடனுக்குடன் வெளிவந்த ஒன்லைன் சாறி வகைகள்.
* புதிய வகை சல்வார், லெகங்கா, மஸ்தானி ஆடை வகைகள்.
ஆண்களுக்கான அனைத்துவகை ஆடைகளையும் மலிவு விலையில் பெற்றிடலாம்.
(Sup/1687)(10)
இல.81, பெரியகடை, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5578

சிவமயம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 09.10.2018 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் பொன்னையா குமாரகுலசிங்கம்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (06.11.2018) செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 08.11.2018 வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
தெய்வங்கேணி வீதி, சரசாலை வடக்கு,
சாவகச்சேரி (CS/21035)(11,17)

தோற்றம் 03.06.1961 மறைவு 09.10.2018

## மரண அறிவித்தல்

### வெஸ்லீ போல்

**(Trinity College Teacher -Kandy)**



கண்டியைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெஸ்லீ போல் 01.11.2018 வியாழக்கிழமை அமெரிக் காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெபோல் டாக்டர் அருளியா தம்பதிகளின் அன்பு மகனும். கமலாவின் (கண்டி) அன்புக் கணவரும். லீலா. ஸாம்போல் (சுவீஷேசகர்). டெய்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும். மைக்கல். டேவிட். எபன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்டைக்க ஆராதனை இன்று (05.11.2018) திங்கட்கிழமை அமெரிக்காவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
நல்லூர். (CS/21034)(11,17) ஸாம் போல் (சகோதரன்)
**077 385 2640**

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

## மரண அறிவித்தல்



### திருமதி இராசவல்லி கனகரத்தினம்

சித்தன்மாவடி வீதி. கல்வயல் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும். வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசவல்லி கனகரத்தினம் (03.11.2018) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - இராசபூபதிதம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் கனகரத்தினத்தின் ஆருயிர் மனைவியும் மகிந்தன் (லண்டன்) மயூரதி (முகாமைத்துவ உதவியாளர் - பிரதேச செயலகம் - தென்மராட்சி). மனோரதி. மயூரா (பிரான்ஸ்). மயூரதன் ( கோகுலன் ) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வாசுகி (லண்டன் ). சுபாகரன் ( சாரதி. இ.போ.ச.கோண்டாவில் சாலை ). கலைவதனன் (நீர் வழங்கல் சபை. கிளிநொச்சி ). ராஜ்மோகன் ( பிரான்ஸ்). வாகினி ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஷ்ணேஸ்வரன். இராஜேஸ்வரி. சாரதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு. தியாகராசா. சிவராசா. தவராசா மற்றும் யோகநாதன் . திலகவதி . சிவபஞ்சாட்சரம். கமலாட்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அபினுஷா. அருஷன். சுருதிகன். சதுர்ஷன் . திவாகன். அட்ஷயா. அபிராமி. திவானுஷன். அபிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 05.11.2018 ) திங்கட்கிழமை மு.ப.11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**சித்தன்மாவடி வீதி.**
**கல்வயல், சாவகச்சேரி.**
**தகவல் : குடும்பத்தினர்.**
**077 015 5782**

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 08 . 1925



மறைவு 03 . 11 . 2018

### சுப்பிரமணியம் சிறீ பத்மநாதன்

**(ஓய்வுநிலை சிரேஷ்ட வரி மதிப்பாளர் உள்நாட்டு இறைவரித் திணைக்களம்)**

சாவகச்சேரி கோவில் குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் கோவில் வீதி. நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சிறீபத்மநாதன் 03.11.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - லலிதாதேவி (அன்னக்கா) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் சரோஜினி. சுசிலாதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான மீனாம்பிகை. சிவகுருநாதன். விமலாதேவி ஆகியோரின் சகோதரனும் இந்திராணி. லலிதாதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான யோகரட்ணம். அழகரட்ணம். யோகேந்திரன். பத்மாதேவி ஆகியோரின் மைத்துனரும் பிரதீபா. இராஜீவன் (Commercial Bank இன் ஓய்வுநிலை வடபிராந்தியமுகாமையாளர்). Dr. நிரூஜா. யாதவன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சிறீபாலன். கமலவாணி. Dr. ரவிந்திரராஜ். சுமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபாங்கன் (Scotland Yard U.K.). சத்தியா. பிரகதீசன். கவிதாஞ்சலி. Dr. பிரகலாதன். கொயுத்திரிக்கா. Dr. செல்வாங்கன். அனிஷ். பிரசாந்தி. அபினயா. ஆரன்யா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 05.11.2018 திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் 435. கோவில் வீதி, நல்லூரில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**0777 687 821** (CS 18508/17) **தகவல்: S.P.இராஜீவன் (மகன்)**



# இளவாலை வருத்தப்படாத

Congratulations

# 5 ஆவது ஆண்டு வ

## அருளாசிச் செய்தி



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கமானது நான்காம் ஆண்டினை நிறைவு செய்து ஐந்தாம் ஆண்டில் கால்பதித்திருக்கும் இவ்வேளையில் ஆசிச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கமானது பொழுது போககு நோக்கமற்ற சிறந்த சமூக, கலாசார , கல்வி உதவிச் செயற்பாடுகளை மேற்க கொண்டு வருகின்ற சிறந்த இளைஞர் சங்கமாக திகழ்கின்றது என்று கூறினால் மிகை யாகாது.

எமது கிராமத்தில் மட்டுமல்லாது இச்சங்கத்தின் சேவையானது பல தேசங்கள் வரை பரந்து விரிந்து செல்கின்றது. பொருளாதார நலிவான குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் மாணவர்களுக்கான கல்விகற்றல் உபகரணங்கள் வழங்கல், கல்வி செயற்றிட்டங்கள் செய்தல், மருத்துவ உதவிகள் வழங்கல், இரத்த தான முகாம், மருத்துவமுகாம், டெங்கு ஒழிப்பு நடவடிக்கை எனப் பல சேவைகளைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். இச் சங்கத்தின் சேவைகள் எண்ணிலடங்காதவை. இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான இளைஞர் சங்கங்களை காண்பது அரிது. இவ்வாறான சேவைகளை செய்துவரும் இச் சங்கத்-தினை பாராட்டி வாழ்த்துவதுடன், இவ் வருத்தப்படாத வாலிபர் சங்கமானது மேலும் பல உச்சங்களை தொடவேண்டும். அவர்களது சேவை மேலும் சிறந்து விளங்க எல்லாம் வல்லாம் இளவாலை ஆனை விழுந்தான் விக்னவிநாயகப் பெருமானின் அருளாசி வேண்டி ஆசி கூறி அமைகின்றேன்.

**சிவஸ்ரீ இராம. பாலச்சந்திரக்குருக்கள்**

## தலைவரின் உள்ளத்திலிருந்து



இளவாலையின் சமூக விருட்சமாக விளங்கிக்கொண்டிருக்கும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5 ஆம் வருட நிறைவினை முன்னிட்டு வெளியிடுகின்ற மலருக்கு தலைவராக இருந்து வாழ்த்து செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன்.


இன்றைய நவீன யுகத்தில் இளைஞர்களுடைய வாழ்வியல் போக்கு வித்தியாசமான பாதையில் சென்று கொண்டிருக்கின்ற வேளையில் சமூக சேவையை உன்னத சேவ யாகக்கொண்டு அரும்பணியாற்றிக்கொண்டிருக்கின்ற சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவ ரையும், சிரேஷ்ட உறுப்பினர்கள், ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் எல்லோரையும் பாராட்டி நிற்கின் றேன். இவர்களின் அளப்பெரிய அர்ப்பணிப்புள்ள ஒத்துழைப்பே எங்களுடைய வளர்ச்சிக்கு காரணமாய் அமைந்தது என்றால் அது மிகையாகாது சுயநலப் போக்கின்றி பொது நலத்தோடு சேவை செய்கின்ற எம்முடைய சங்கம் தொடர்ந்து ஐந்தாண்டு அல்ல நீடூழிகாலம் பணியாற்ற வேண்டும் என்பதே எமது பேரவா.

மேலும் எமது செயற்திட்டங்களை சுருக்கமாக நோக்குமிடத்து கல்வி, கலை, கலாசாரம் மற்றும் பாரம்பரிய விழுமியங்களை மேம்படுத்தும் நோக்கில் " உயர்த்தும் கரங்கள்", "அரும்பு" போன்ற செயற்திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம். இந் நேரத்தில் எமது சேவை சிறப்பானதாக அமைய பண உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கிய எமது கிராமத்தவர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு வாழ் நன்கொடை யாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் இந்நேரத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் எமது சங்கமானது பல்லாண்டுகாலம் சேவையாற்றி மேன் மேலும் வளர இறைவனின் நல்லா சிகளை வேண்டி வாழ்த்து செய்தியை நிறைவுசெய்கின்றேன்.

**செல்வநாயகம் - அன்ரன்செல்வக்குமார்**
**இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் (தலைவர்)**

## வாழ்த்துச் செய்தி



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவின் பால் நாம் மிக மனமகிழ்வு அடைகின்றோம். இவர்களின் எமது ஊர்த் தொண்டுகள் நாவலடி கலைமகள் வாசிகசாலை புனரமைப்புடன் ஆரம்பித்து கல்விப்பணி, இரத்ததானப் பணி, டெங்கு நோய் பரவாமல் தடுப்பு இயக்க செயல்கள், தமிழர் பண்பாட்டை போற்றுவிக்கின்ற தைப்பொங்கல் விழா, சித்திரை வருடப் பிறப்பு நிகழ்வு, தீபாவளி நிகழ்வு, விளையாட்டு நிகழ்வுகள், மாட்டுவண்டி சவாரிப் போட்டிகள், பட்டம்விடும் போட்டிகள், வெளியூர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ் மக்களின் இயல்பு வாழ்வுக்கு உதவுதல்.

இவ்வாறாகக் கடந்த ஐந்து ஆண்டுகளாக மக்களுக்கு இவர்கள் செய்யும் தொண்டுகள் மிகவும் மகத் தானவை. இவர்களின் மக்கள் சேவை தொடர்ந்தும் சிறப்புடன் நடைபெற இறை ஆசி வேண்டி எனது நல்லாசிகள்.

**Dr.த.பேரானந்தராசா**
**பொதுவைத்திய நிபுணர் - யா/போதனா வைத்தியசாலை.**

## வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

இயற்கை வளம் பலகொண்டமைந்த வலிகாமம் வடக்கு தெல்லிப்பழைப் பிரதேசத்திலே சமயம், கல்வி, கலை கலாசாரம் எனப் பல்வேறு துறைகளிலும் மேன்மை பெற்று விளங்கும் இளவாலை என்னும் ஊரிலே அமைந்து சமூகப்பணியாற்றி வரும் இளவாலை 'வருத்தப்படாத இளைஞர்கழகம் தமது ஐந்தாம் ஆண்டு நிறைவிலே வெளியிடுகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கிராமம், பிரதேசம், மாவட்டம் எனப் பல்வேறு மட்டத்திலும் பல அமைப்புக்கள் நாட்டினதும், நாட்டு மக்களினதும் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு இயங்கிவருகின்றன. அந்தவகை யிலே கிராமிய மட்டத்திலே மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு அவர்களின் தேவைகளை இனங்கண்டு அதற்கான திட்டங்களை உரியமுறையிலே வகுத்து அவற்றினை சிறப்புற நடைமுறைப்படுத்துவதனூடாக மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி பிரதேசத்தை அபிவிருத்திப் பாதையிலே கொண்டு செல்ல முடியும்.

அந்தவகையிலே இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளில் மக்களுக்கு அளப்பரிய சேவையினை ஆற்றிவருவது இங்கு நோக்கத்தக்கது. குறிப்பாக புலம்பெயர் உறவுகளின் நிதி-ப்பங்களிப்போடு கிராமிய மட்டத்தில் மட்டுமன்றி மாவட்டம், மாகாண மட்டத்திலும் உரியவர்களை இனங்கண்டு அவர்களுக்கான வாழ்வாதாரம், கல்வி போன்ற உதவிகளை வழங்கியும் மற்றும் இரத்ததான முகாம்களை நடத்தியும் பாரம்பரிய விழாக்கள், கருத்தரங்குகள் நடத்துதல் எனப் பலதரப்பட்ட செயற்-திட்டங்களையும் சிறப்பாக முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஒரு நிறுவனத்தின் வெற்றியும் தோல்வியும் அந்த நிறுவனத்தின் தலைமைத்துவத்திலும் நிர்வாகத்திலுமே தங்கியுள்ளது. அந்த வகையில் சிறப்பாக இயங்கிவரும் இளவாலை வருத்தப்படாத இளைஞர்கழகமானது மேலும் பல ஆண்டுகள் தனது பணியினை விரிவுபடுத்தி நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பல்வேறு துறைகளிலும் சிறந்த சேவையினை வழங்க வேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

**ச. சிவஸ்ரீ**
**பிரதேசசெயலாளர், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை.**

## அகவை ஐந்தின் நிறைவை வாழ்த்துகிறேன்



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் இளைஞர்களின் முன்னு-தாரணமாகப் பணிகளை ஒரு சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடந்த 5 வருடங்களாக நான் அறிவேன்.

மிகவும் அர்ப்பணிப்போடு சுய ஒழுக்கமிக்க இளையோர் தமது கிராம எல்லையைக் கடந்து மனிதாபிமானப் பணிகளுடன் வடக்கு, கிழக்கு, மலையகம் தழுவிய ரீதியில் எம் உறவுகளுக்கு ஆதரவுக் கரம் மேற்கொண்டு வருவது போற்றுதற்குரியது.வன்னி பேரவலத்தாலும் மலையக மண்சரிவா லும் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு இந்த வாலிபர்களின் பணி மகத் தானது.மனித நேயப் பணிகள் போன்று கலை கலாசாரப் பண்பாட்டு விழுமி யங்களை வளர்த்தெடுப்பதிலும் மருத்துவ சுகவாழ்வு கல்வி செயற்றிட்டங் களிலும் இரத்ததானம் சிரமதான முன்னெடுப்புகளிலும் கடந்த 5 வருடங்களிலும் இவ் இளையோர் சங்கம் காத்திரமான பங்களிப்பை நல்கி இருக்கின்றது.இளையோர் சங்கங்களுக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த எம் தமிழ் சமூகத்துக்கே குறுகிய காலத்தில் சிறந்த உயிர் துடிப்பான எல்லைகள் தாண்டிய மனிதாபி மானத்தை செயலுருவில் காட்டிய இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் சகல அங்கத்த வர்களையும் வழிகாட்டிகளையும் எம் மக்கள் சார்பாக உளமார அகவை ஐந்தின் நிறை வில் வாழ்த்துகின்றேன்.

**வைத்திய கலாநிதி பரா.நந்தகுமார்**
**சுகாதார வைத்திய அதிகாரி**

## சேவைகள் தொடர வாழ்த்துகின்றேன்



இலங்கைத் திருநாட்டில் வடபுலத்தே யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள பழம் பெரும் பதியான இளவாலைக் கிராமத்திற்கு பெருமை சேர்த்து வரலாற்றில் பெயர் பொறித்த இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் ஐந்து வருடங்களை பூர்த்தி செய்து நிறைவுடன் மகிழ்வாக ஆறாம் வருடத்தில் கால் பதிக்கும் இத் தருணத்தில், மன மகிழ்வுடன் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். தங்கள் வாலிபர் சங்கத்தால் எமது கல்லூரிக்கு ஆற்றப்பட்ட கல்விசார் சேவைகளையும் இளவாலைக் கிராமத்திற்கு வழங்கப்பட்ட சமூகநலன்சார் பங்களிப்பையும் விளையாட்டு, களியாட்ட, கலாசார நிகழ்வுகளையும் நினைத்து நன்றியுடன் பாராட்டுகின்றேன.

இளமைத்துடிப்பும் வாலிப மிடுக்கும் தடம்மாறித் தடுமாறாமல் கிராமத்தின் அபிவிருத்திக்காக கழகத்தை இயங்கிச் செல்லும் நிர்வாக உறுப்பினர்களதும், அங்கத்தவர்களதும் தன்னலமற்ற சேவை வாழ்த்துவதற்-குரியது என்பதில் ஐயம்மேதுமில்லை. ஆல மர விழுதுகள் ஆலமரத்தினை பலமாக தாங்கி நிற்பது போல கழகத்தின் அனைத்து செயற்பாடுகளுக்கும் ஒற்றுமையாக கைகொடுக்கும் கழகத்தின் அனைத்து உறுப்பி-னர்களின் சேவைகள் இன்னும் தொடரவும், நீங்கள் இன்னும் பல நூற்றாண்டுகள் சாதனையாளர்களாகத் திகழவும் வாழ்த்துகின்றேன்.

**Fr. Godfrey Joel**
**Rector - J/St.Henry's College Ilavalai,Srilanka**

## செயலாளரிடமிருந்து...



யாழ் மாவட்டத்தின் வலிகாம பிரிவினுள் தெல்லிப்பளை, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள இளவாலை கிராமத்தில் கடந்த 5 வருடங்களாக செயற்பட்டு வருகின்றமையினையிட்டு பெருமையடைகின்றோம். எமது சங்கமானது ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு 06.11.2018 அன்று பத்திரிகையில் ஐந்தாம் ஆண்டு நிறைவுவிழா சிறப்பு மலர் வெளியி டப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.


எமது சங்கத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளிற்கும் ஒவ்வொரு உறுப்பினர்கள் தலைமை தாங்கி முன்னின்று செயற்படுவது சிறப்பம்சமாகும். எமது சங்கமானது சமூக சேவையை மையமாக கொண்டதோடு நின்றுவிடாது கல்வி, விளையாட்டு, பாரம்பரிய கலைகலாச்சார நிகழ்வுகள் போன்ற செயற்பாடுகளையும் ஊக்குவித்து வருகின்றது.

எமது சங்கத்தின் செயற்பாடுகளாக உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டம், வாழ்வாதார உதவிகள் வழங்குதல், பாடசாலை மாணவர்களிற்கான கற்றல் உபகரணங்கள் வழங்குதல், இரத்ததான முகாம், அரும்பு கல்வி செயற்றிட்டம், பாடசாலை மாணவர்களின் கல்விக்கான மாதாந்த உதவிகள், வெள்ள நிவாரணப்பணிஇ போன்ற பணிகளும் பொங்கல்விழா, சித்திரை வருட புத்தாண்டு விழா நேத்திரம் சஞ்சிகை வெளியீடு, நத்தார் பண்டிகை, மாட்டு வண்டி சவாரிப்போட்டி, கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி, உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி போன்ற நிகழ்வுகளும் வருடாந்தம் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கவையாகும்.

நெறி தவறி போகும் இளைஞர் சமுதாயத்தின் மத்தியில் எமது இளைஞர்களின் செயற்பாடானது எல்லோ ருக்கும் ஓர் முன்னுதாரணமாக காணப்படுகின்றது. எமது சங்கம் ஐந்து ஆண்டுகள் என்ன ஐநூறு ஆண்டுகள் நிலைத்து நிற்க வாழ்த்திநிற்கின்றேன்.

**செயலாளர்,**
**வருத்தப்படாத வாலியர் சங்கம்,**
**இளவாலை.**

## நன்றியுடன் வாழ்த்துவோம்



ஒருவருடைய வாழ்க்கைப் பருவங்களில் வாலிபப் பருவம்தான் வலுவுடையது. சாதனைகளை நிலைநாட்ட வல்லது. அதன்மூலம் தனது சமுதாயத்தை நல்வழிப்படுத்தி உயர்வு அடையச் செய்யும் ஆற்றல் மிக்கது. இக்கருத்தினை எங்கள் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினர் கடந்த ஐந்து ஆண்டு காலமாகச் சாதித்துக் காட்டிக் கொண்டு வருகிறார்கள். இவர்கள் செயல் வியப்புக்கும் அதே நேரம் பாராட்டுக்கும் உரியதாகும். யாழ்ப்பாண மக்கள் வாழ்வில் ஆயுதப்போர் முடிந்த பின்னர் நம் அரசியல்.

எதிரிகள் மூலம் புதியதோர் அரசியல் சாணக்கியப் போர் நடந்து கொண்டு இருக்கிறது. மாண வர்களையும், வாலிபர்களையும் போதைப் பொருள், மது முதலியவற்றுக்கு அடிமையாக்கி அவர்களுடைய மதியை மயக்கி சுயத்தை இழக்கச் செய்து கொள்ளை, வழிப்பறி, வாள்வெட்டு, பாலியல் வன்முறைகளுக்குத் தூண்டித் தமிழர் சமூகத்தைச் சீர்குலைக்கும் தீய செயற்பாடுகள் தினமும் நடந்து கொண்டிருக்கின்றன. நம்முடைய சமூகத்தை நம்மவர்களைக் கொண்டே அழிக்கும் நயவஞ்சகச் செயல்கள் நடந்தேறுகின்றன. இதன் உண்மை நிலையை அறிந்து, தடுத்து நிறுத்த வேண்டிய நம் தலைவர்கள் பணப்போதைக்கு அடிமையாகிக் கண்மூடிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையை உணர்ந்த நம் வாலிபர்கள் சிலர் தாமாகவே சிந்தித்து நலிவுற்றிருக்கும் நம்மவர்களுக்குக் கைகொடுத்து அவர்களின் வருத்தத்தைப் போக்கி வாழ வைக்கும் நற்பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அத்துடன் தம்போன்ற தம்மில் இளையவர்களையும் இந்த நல்வழியில் ஈடுபடச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது"

என்னும் வள்ளுவர் குறளை மெய்ப்பித்துப் பணிசெய்து கொண்டிருக்கும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரை நன்றியுடன் பாராட்டுவோம். அவர்களின் தூய பணி தொடர வாழ்த்துவோம். அவர்கள் தளராமல் பணி செய்யத் தோள் கொடுப்போம்.

வளர்க பணி ! வெல்க வாலிபம்

**கலாபூஷணம், சைவப்புலவர் - சு.செல்லத்துரை - ஓய்வுநிலை**
**அதிபர் - இளவாலை வடக்கு, இளவாலை.**

## வாழ்த்துச் செய்தி

ஈழவளத்திருநாட்டின் வடபாலமைந்த யாழ் நகரின் வலிகாமம் பகுதியின் இளவாலையில் செயற்பட்டு-வரும், சமூக மட்ட அமைப்புக்களில் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கமும் ஒன்றாகும். இச்சங்கமானது குறித்த பிரதேசத்தைச் சார்ந்த இளைஞர்களினால் சமூகசேவை, சமூக நலன் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டு தனது செயற்பாட்டினை சிறந்த முறையில் மேற்கொண்டு வருகின்றது. இவ்வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் செயற்பாடானது ஏனைய இளைஞர்களுக்கும் இளைஞர் அமைப்புக்களுக்கும் ஓர் முன்னுதிரணமாகக் காணப்படுவதுடன் பலரது பாராட்டினையும் பெற்று-வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இச்சங்கமானது ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் வெற்றிகரமாக நிறை-வடைந்துள்ளமையை முன்னிட்டு 06.11.2018 அன்று பத்திரிகையில் ஐந்தாம் ஆண்டு நிறைவுவிழா சிறப்பு மலரும் வெளியிடப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் செயற்பாடுகளாக உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டம், வாழ்வாதார உதவிகள் வழங்குதல், பாடசாலை மாணவர்களிற்கான கற்றல் உபகரணங்கள் வழங்குதல், நான்கு மாதங்களுக்கொரு தடவை இரத்ததான முகாம் நடாத்துதல், அரும்பு கல்வி செயற்றிட்டம், பாடசாலை மாணவர்களின் கல்விக்கான மாதாந்த உதவிகள், வெள்ள நிவாரணப்பணி போன்ற பணிகளும் பொங்கல் விழா, சித்திரை வருட புத்தாண்டு விழா, நத்தார் பண்டிகை, மாட்டு வண்டி சவாரிப்போட்டி, கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி போன்ற நிகழ்வுகளும் வருடாந்தம் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை முக்கிய அம்சமாகும்.

இவ்வகையில் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்படும் பத்திரிகை சிறப்புமலரிற்கு எனது வாழ்த்துச்செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைவ-துடன் இச்சங்கத்தின் செயற்பாடுகள் மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**உ.யசோதா**
**பிரதேச செயலர், பிரதேச செயலகம்,**
**சண்டிலிப்பாய்.**



## வருத்தப்படாத வர்லியர் சங்கத்

நகைச்சுவைத்தனமாக, தென்னிந்திய சினிமாவின் பெயரைக்
முகநூலில் பக்கம் ஆரம்பித்து ஒரு கேலித்தனமாக ஆரம்பித்தது எமது
எண்ணத்தின் பிரகாரம் நாம் கூடிநின்று கதைபேசும் சந்தியருகே
புனரமைக்க ஆரம்பித்தோம். எமது கைகளில் இருந்த காசுகளைத்
வைத்தோம். அதை ஒரு சிலர் கேலிக்கூத்தாகவும் நகைச்சுவைத்த
வாழ்த்தி நின்றனர்.

அதே உற்சாகத்துடன் ஒருவாரத்தினுள் இளவாலை கிராமத்தில் பொ
என்பதை உணர்ந்து பல ஆண்டுகாலமாக செயலிழந்து இருந்த "க
ஊர்மக்களிடம் நிதிதிரட்டி புனர்நிர்மாணம் செய்தோம். நாம் சற்றும் எ
இந்த செயற்றிட்டத்துக்காக சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா
யமையும் சமூகத்தின் ஓர் வித்தியாசமான பார்வை எம்மீது திரும்பி
கொள்ள வைத்தது.

அடுத்த அடுத்த வாரங்களிலேயே இரத்ததானமுகாம், டெங்கொழி
அப்போது ஒரு சில ஊடகங்களின் பார்வையும் எம்மீது திரும்பியது. ஆ
ணமாக இருக்கிறது. உங்கள் சேவைகளை அப்பெயர் மழுங்கடித்து
ஆயினும் அந்தப் பெயரை மாற்ற நாங்கள் தயாராக இருக்கவில்ல
எங்களை வித்தியாசமாக அடையாளப்படுத்தியது. அந்த கேலித்தனம்
வேறுபடுத்திக் காட்டியது. அதன் நகைச்சுவையில் தான் இத்தனை வ
வெற்றியின் சக்தியே அந்த நகைச்சுவைதனை பெயர் என்பதில் உறுதி
பெயர்மாற்றும் கோரிக்கைகள் இல்லாமல் போயின.

தொடர்ச்சியாகப் பாரம்பரிய விளையாட்டுப் போட்டி, பொங்கல் விழா,
எமது கிராமம் மட்டுமல்ல அயற்கிராமத்தில் இருந்தும், அயற்பிரதேசத்தி
வினோதத்தினால் எம்மை அறிந்து எமது சேவைகளை அறிந்தும் வாழ்

வெறும் 4 மாதங்களுக்குள் எங்கள் சேவைகள் பாராட்டப்படுகின்றது.
குறித்த அந்த சேவைகளுக்கான வெற்றிடம் பலகாலமாக இருந்திருக்
வேண்டிய எவரோ செய்யத் தவறியதனால் தான் நாங்கள் இவற்றை
புலப்பட்டது. அந்த வெற்றிடத்தின் நீள, அகலத்தை ஆராய்ந்தோம். ஆம்
எமது இனத்தின் மீள் எழுச்சி என்பதைத் தெட்டத் தெளிவாகப் புரிந்து
பிரதேசத்துக்கு அல்ல. எமது இனத்துக்கே எமது தேவை இருக்கிறது என்
இங்கு தான் நாம் அடுத்த பரிமாணத்துக்குச் செல்லலாகினோம்.
விதவைகளாக, தாயை, தந்தையை இழந்த அனாதைகளாக மறு
காணாமலாக்கப்பட்டவர்களாக புனர்வாழ்வு கூடங்களில் இருப்பவர்க
கண்களுக்குத் தெரிந்தது.

ஆயினும் எம்மால் எதனைச் செய்துவிட முடியும் என்ற கேள்வி எழு
செய்து முடிப்போம் என்று ஆரம்பித்தோம். போரால் பாதிக்கப்பட்ட எம
உதவியை வழங்கும் நோக்குடன் ஒரு இசை நிகழ்வை ஒழுங்கு செய்
விற்று நிதி திரட்டினோம். அந்த நிதியைக் கொண்டு கிளிநொச்சிப் ப
மாணவர்கள் 40 பேருக்குத் தேவையான கற்றல் உபகரணம், பாடசா
னோம்.மிகவும் வெளிப்படைத்தன்மையாக திரண்ட நிதியினையும்
ளையும் முகநூலில் பதிவிட்டோம். இதன்மூலம் புலம்பெயர் உறவுகள்
நம்பிக்கை கொண்டனர். உதவிகள் வழங்க நினைத்தும் சில போலிகளா
வழங்க சிந்தித்த பலருக்கு எமது நடவடிக்கைகள் நம்பிக்கை உடைய
பலதரப்பட்டவர்களிடம் இருந்தும் நிதி உதவிகள் கிடைத்தன. வடக்கு,
ரித்தோம்.

4 மாதங்களுக்கு ஒருமுறை இரத்ததானமுகாம், வருடம் தோறும் டெ
கப்பட்ட பகுதிகளில் மருத்துவ முகாங்கள், தைப்பொங்கல் பாரம்பரிய வி
நாளில் சிறுவர், முதியோர் இல்லங்களில் சென்று கதைபேசி அவர்
கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் இலவசக் கணினி வகுப்புக்கள் என
கட்டமைக்கப்பட்ட அமைப்பாக எமது 5 ஆவது ஆண்டினை நிறைவு செ

www.ivvsangam.com இளவால

## வாழ்த்துச் செய்தி

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5 ஆவது வருட நிறை
வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன
பேணப்பட்டு வந்த நிலையில் இன்று போதைக் கலாசாரமும், இன்றை
ஊடுருவி அனைவரையும் திசைதிருப்பும் நிலையில் உள்ளது. இந்த
எதிர்காலம் கேள்விக்குறியான நிலையிலேயே உள்ளது.

இன்றைய இளைஞர்கள் நாளை உலகின் தலைவர்கள் என்பதற்
சமுதாயத்தின், நாட்டின் எதிர்காலம் தங்கி உள்ளது. எனவே சமுதாயத்
வீணாக்காது இளைஞர்கள் ஒன்றிணைந்து சமூகத்தை அபிவிருத்திப் பா
செயறபடுவது வரவேற்கத்தக்க விடயமாகும்.

சங்க இளைஞர்களின் இத்தகைய செயற்பாடுகள் மூலம் அடுத்த
பாதையில் எடுத்துச் செல்ல முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு இவ
யடைய எனது நல்லாசிகள்.

**தவிசாளர், வலிகாமம் வடக்கு பிர**

விளம்பர அனுசரணை

SVM நிறுவனம்
இல.154, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.

smg ஆதனங்கள்/ சொத்துக்களை விற்க, வாங்க, பராமரிக்க
021 222 6856, 077 506 0023
802, Palaly Road. Tirunalvely
www.sellmovegrow.com

Nmobile Phoneshop
021 222 0875 ·
No.11, Newmarket, Jaffna.

நாயகி தயாரிப்புகள்
மிக்சர், முறுக்கு, தட்டுவடை முதலான உணவு உற்பத்திகள்
2006. 2007. 2008. 2009. சிறந்த தர விருது பெற்றது
வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை.

Home Design Centre
Planning & Permit Drawings
Estimates
Land Surveyoring
077 665 6025/ 077 268 0228
Earlalai South, Chunnakam.

BAN
Banke

# ...ாத வாலிபர் சங்கத்தின்
# ... விழா சிறப்பிதழ்

Congratulations



## ...ர் சங்கத்தின் வரலாறு

...பெயரைக் கொண்டு ஆரம்பித்துப் பாடல்கள் இயற்றி
...ரம்பித்தது எமது பயணம். ஏதேச்சையாக கிடைத்த ஓர்
...சந்தியருகே இருந்த பயணிகள் நிழற்குடை ஒன்றைப்
...த காசுகளைத் திரட்டி ஒரு தீபாவளி நாளில் திறந்து
...கைச்சுவைத்தனமாகவும் பார்த்தனர். ஒருசிலர் மட்டும்

...ராமத்தில் பொருத்தமான பொது வாசிகசாலை இல்லை
...து இருந்த "கலைமகள் படிப்பகம்" என்னும் கட்டடத்தை
... நாம் சற்றும் எதிர்பாராமல் எம்மை நம்பி கிராம மக்கள்
...தாயிரம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை வழங்க-
...ம்மீது திரும்பியமையும் எம்மை இன்னும் உற்சாகம்

... டெங்கொழிப்பு செயற்றிட்டங்களை முன்னெடுத்தோம்.
...திரும்பியது. ஆயினும் உங்கள் பெயர் மட்டும் கேலித்த-
...முழுங்கடித்துவிடும் என பலரும் ஆலோசனை கூறினர்.
... இருக்கவில்லை. எமது பெயரின் கேலித்தனம்தான்
... கேலித்தனம் தான் ஏனையவர்களில் இருந்து எம்மை
... இத்தனை வாலிபர்களும் திரண்டிருக்கிறோம். எமது
...ன்பதில் உறுதியாக இருந்தோம். காலப்போக்கில் அந்தப்

...ொங்கல் விழா, சித்திரை விழா என்பவற்றை நடத்தியே
...அயற்பிரதேசத்தில் இருந்தும் எமது அமைப்பின் பெயரின்
... அறிந்தும் வாழ்த்தி ஊக்குவித்தனர்.
...ட்டப்படுகின்றது. வரவேற்கப்படுகிறது என்ற இடத்தில்
...க இருந்திருக்கிறது என்பதை உணரமுடிந்தது. செய்ய
...ங்கள் இவற்றைச் செய்ய வேண்டியாகின்றது என்பது
...ந்தோம். ஆம் அந்த வெற்றிடம் போருக்குப் பின்னரான
...வாகப் புரிந்துகொண்டோம்.எமது ஊருக்கு அல்ல. எமது
... இருக்கிறது என்பதைச் சிந்திக்கத் தொடங்கினோம்.
...ானோம். போரில் பாதிக்கப்பட்டு அங்கவீனர்களாக.
...களாக மறுநாள் உணவுக்கே ஏங்கும் ஏழைகளாக
... இருப்பவர்களாக எங்கள் உறவுகள் இருப்பது எமது

...ற கேள்வி எழுந்தது. எங்களால் இயன்றதை நாங்கள்
... பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு எங்களால் இயன்ற
... ஒழுங்கு செய்தோம். இதன்மூலம் நுழைவுச் சீட்டுக்கள்
...கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த போரில் பாதிக்கப்பட்ட
...ரணம். பாடசாலை காலணிகள் என்பவற்றை வழங்கி
... நிதியினையும் அதன் மூலம் உதவித்திட்ட விவரங்க
...பெயர் உறவுகள் பலரும் எம்மை அறிந்தனர். எம்மீது
... சில போலிகளாலும். சில மோசடிகளாலும் உதவிகளை
...க்கை உடையனவாக தெரிந்தன. இதன்மூலம் எமக்கு
...த்தன. வடக்கு. கிழக்கு என எமது சேவைகளை விஸ்த

...ம் தோறும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை. போரால் பாதிக்
...ல் பாரம்பரிய விளையாட்டு விழா. சித்திரைப் புத்தாண்டு
...தைபேசி அவர்களை மகிழ்வித்து இசை நிகழ்வுகள்.
...குப்புக்கள் என பலதரப்பட்ட செயற்றிட்டங்களோடு ஒரு
...னை நிறைவு செய்கின்றோம்.

**இளவாலை வருத்தப்படாத வாலியர் சங்கம்**

... செய்தி

...வது வருட நிறைவையொட்டி வெளியிடவுள்ள மலருக்கு
...ச்சியடைகின்றேன். தொன்று தொட்டு தமிழர் கலாசாரம்
...ாரமும். இன்றநெற் கலாசாரமும் எமது காலசாரத்தில்
... உள்ளது. இந்த நிலையில் இளைஞர் சமுதாயத்தின்

...வர்கள் என்பதற்கிணங்க இளைஞர்கள் கைகளிலே
...வே சமுதாயத்தை சீரழிக்கும் விடயங்களில் நேரத்தை
... அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லும் வகையில்

...மூலம் அடுத்த தலைமுறையை முன்னேற்றகரமான
...மக்குண்டு இவர்களது சேவை மேன்மேலும் வளர்ச்சி

**திரு. சோ.சுகிர்தன்**
**...மம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.**

### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் ஐந்தாவது ஆண்டு சிறப்பு மலரினை பத்திரிகையில் பிர-சுரிக்க உள்ளதனால் இவ் இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இக்கழகம் வடமாகாணம் மட்டுமன்றி கிழக்கு மாகாணத்திலும் இடர்படும் மக்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் மாதாந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள். நோயாளர்களுக்கான மருத்துவ உதவிகள். மற்றும் ஏனைய உதவித்திட்டங்களாக துவிச்சக்கரவண்டி வழங்குதல். மருத்துவ முகாம்களை நடாத்துதல். வெள்ள அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குதல். இரத்ததான முகாம் நடாத்துதல். ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த. சாதாரணதர பரீட்சைகளில் தோற்றவுள்ள இளவாலை மற்றும் அயற்கிராம மாண-வர்களுக்கான இலவச கருத்தரங்குகளை நடாத்துதல். டெங்கு ஒழிப்பு நடவடிக்கை. விளையாட்டுத்துறைக்கான ஊக்குவிப்பு என பல்வேறு செயற்பாடுகளை ஆற்றிவருவது பாராட்டத்தக்கது. இச் செயற்பாடுகளுக்கு புலம்பெயர் உறவுகள். கிராமத்-தவர்கள். நலன்விரும்பிகள் மற்றும் நிறுவனங்கள் கைகொடுத்து உதவி வருவதன்மூலமாக இப்பணியை ஆற்றிவருவ-தாக அறியப்படுகின்றது.

இவர்களது பணி மென்மேலும் தொடரவும். இவர்களது சமூக பணியின்மூலம் நலிவுற்ற மக்கள் விருத்திபெறவும். இவர்களைப்போன்று சமூகத்தில் இளைஞர்கள் தம்மாலான பணியினை மேற்கொள்ள இவர்களது பணி முன்மாதிரியாக அமையும் என நம்புகின்றேன். இவர்கள்பணி தொடர ஆதாரமாய் அணிதிரளும் அனைவரையும் பாராட்டி மலரும் சிறப் பு மலர் சிறக்க என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**நா. வேதநாயகன் -**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

### தமிழர் தாயகம் எங்கும் சேவை பரவட்டும்...



5ஆவது ஆண்டினை நிறைவு செய்து 6 ஆவது ஆண்டில் கால்பதிக்கும் வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரை வாழ்த்தி. வாழ்த்துச்செய்தி வெளியிடுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்!

கடந்த 5 ஆண்டுகளாக இவர்கள். தமிழர் தயாகத்தின் பல பகுதிகளிலும் போரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார. கற்றல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் மற்றும் கிராம பிரதேச மட்டங்களில் பலதரப்பட்ட சமூக சேவைகளையும் ஆற்றிவருவதை அறிவேன். அத்துடன் கடந்த ஆண்டு தமிழ்தாயகமே திரண்டு உரிமைக்காய் குரல் கொடுத்த 'எழுக தமிழ்' நிகழ்வுக்கு பொது மக்களை திரட்டுவதிலும். அவற்றின் முக்கியத்துவத்தை கிராமங்களில் கொண்டு சேர்ப்பதிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருந்தமையையும் இந்த இடத்தில் பாராட்டி நிற்கின்றேன்!

உண்மையில் போருக்கு பின்னரான இந்த கால கட்டத்தில். பேரினவாத அரசின் திட்டமிட்ட நிகழ்ச்சிநிரலின் கீழ் எமது தமிழ் இளைஞர்களை போதை பொருளுக்கு அடிமைப்படுத்தியும். வாள்வெட்டு என்ற ஆயுத கலாசாரத்தையும் ஏற்படுத்-துவதன் மூலமும் அவர்களை திசை திருப்பி தமிழர் தேசத்தின் எதிர்காலத்தை இருள்மயப்படுத்த எத்தனித்துவருகிற போதும். இந்த வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் வாலிபர்கள் அந்த நிகழ்ச்சி நிரலில் சிக்காது தமது இளமை காலத்தை ஆற்றுப்படுத்துவதோடு. தமிழர் தாயக வாழ் மக்களுக்கு தம்மால் இயன்ற சேவைகளை ஆற்றி வருவதென்பது முன்மாதிரியானது!

இவர்களை முன்மாதிரிகளாக கொண்டு இந்த தமிழ்தேசமெங்கும் வாழ்கின்ற இளைஞர்கள் அனைவரும். தமிழ்மக்கள் முழு உரிமையோடும். சுதந்திரத்தோடும் தமிழருக்கான தேசத்தில் வாழ. தம்மால் இயன்ற அரசியல். சமூக பணிகளில் இணையவேண்டும் என அவா கொள்வதுடன். இந்த இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் இன்னும் பல கிளைகளை பரப்பி தமிழர் தாயகமெங்கும் பரந்து விரிந்து பல ஆண்டுகளுக்கு சேவையாற்றவேண்டும் என வாழ்த்தி நிற்கிறேன்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**
**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.**

### வருத்தப்படாத வாலியர் சங்கத்தின் சமூக சேவைகள் பாராட்டத்தக்கவை



தமிழ்த் தலைமைகளின் தவறான வழிகாட்டல்களால் தமிழ் இனம் பல் இன்னல்களையும். துயராங் களையும்.ஈடற்ற இழப்புக்களையும் சந்தித்தவர்களாக வாழ்ந்துவருகின்றார்கள். கொடியயுத்தமும். வன்முறைகளும் தமிழ் மக்களின் மனோதிடத்தையும். எதிர்காலம் மீதான நம்பிக்கையையும் பெரிதும் பாதிக்கச் செய்துள்ளது. இந்தநிலையில் "தமிழ் மக்கள் தோற்றுப் போனவர்கள் அல்ல" என்ற பலமான நம்பிக்கையை எமது மக்களிடையே நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

சரியான தலைமைத்துவத்தின் வழிகாட்டல் இல்லாமல் எமது இளைஞர். யுவதிகள் எதிர்காலம் மீதான நம்பிக்கையை இழந்தும். பொருத்தமான வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியாமலும் இருக்கின்ற சூழலை நாம் மாற்றியமைத்து. அவர்கள் தலைநிர்ந்து வாழும் வாழ்க்கை உறுதி செய்ய வேண்டும். எமது இளைஞர்கள் போதைக்கும். வன்முறைக்கும் பழகிவிட்டார்கள் என்று முன்னர் வடக்கு மாகாணசபையை பொறுப்பேற்றவர்கள் அவதூறு சுமத்திச் சென்றுள்ளார்கள். அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது எமது இளைஞர். யுவதிகளுக்கு எந்தவகையிலும் உதவவில்லை. இத்தகைய இன்றைய யாழ்ப்பாணத்தின் சூழ்நிலையில் வருத்தப்படாத வாலிபர் சங்கத்தில் இளைஞர் முன்வந்து இணைந்து. சமூகப் பொறுப் போடு பல மக்கள் நலன்சார்ந்த பல காரியங்களைச் செய்துவருவதுகண்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

உங்கள் சமூகசேவைகள் மேலும் சிறப்பாக முன்னெடுக்கப்படவும். வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினர்களும். அவர்களால் வழிகாட்டப்படும் எமது இளைய தலைமுறையினரும் ஆளுமையுள்ள எதிர்காலத் தலைமைகளாக உருவாக வேண்டும் என்றும் விரும்புகின்றேன்.

உங்கள் முயற்சிகளுக்கு எனது ஆதரவும். வாழ்த்துக்களும் என்றென்றும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

**என்றும் மக்கள் சேவையிலுள்ள**
**டக்ளஸ் தேவானந்தா பா. உ.**
**அமைச்சர் - மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள்**
**அமைச்சு செயலாளர் நாயகம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)**

### மன்னார் மக்கள் சார்பாக வாழ்த்துகின்றேன்.

மக்கள் சரியானதை எடுத்துக் கொண்டு அதற்காக தியாகம் செய்யத் தயாராக இருந்தால் வெற்றிக்குரிய தடையாக எதுவுமே இல்லை. மார்ட்டின் லூதர் கிங்கின் இறுதி பேச்சின் சாரமது. இதன் இன்னுமொரு ஒத்த வடிவமான செயல்முறையாகவே நான் வருத்தப்படாத வாலிபர் சங்கத்தை கருதுகின்றேன்.

வருத்தப்படாமல் (உழைப்பு / தியாகம்) ஒரு அமைப்பு தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் இயங்கி இருக்க முடியாது. இவர்கள் சமூகத்தின் அவலத்தின் மீது வருத்தப்பட்டதற்காக வருத்தப்பட்டிருக்க வேண்டி இருந்தி ருக்கலாம். எனினும் அவர்கள் அதனை வேறு மொழியில் வருத்தப்படாத வாலிபர்கள் தம்மை மீள நிறு வி யி ருக்கிறார்கள் என்பதனையே இந்த ஐந்தாண்டுகள் நிரூபித்து நிற்கின்றன.

தங்களுடைய தனித்திறன்களைப் பயன்படுத்தி முழுவதுமான துடிப்புடன் இருக்க அனுமதிக்கும் ஸ்தாபனத் தின் பாகமாக இருக்கவே மக்கள் விரும்புவார்கள் என்பர் வருத்தப்படாத வாலிபர் சங்கமும் துடிப்புடன் இயங்கி மக்களின் மனங்களை வென்று இருக்கின்றது. அது யாவருக்கும் இத்தருணத்தில் வெளிப்பட்டு நிற்கின்றது. இதனை உண்மையென நம்புபவர்கள் உங்களுடைய ஒவ்வொரு எண்ணமும் உயர்வானதாக இருக்கப் பொறுப்பெடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையின் மூலம் உங்களைவிட பெரிய ஒன்றை உங்களுடைய தலைமுறைகளுக்காக விட்டுச் செல்ல திட சங்கல்பம் எடுத்து பாடுபடுங்கள். அப்போதுதான் நாளைய நம் தலைமுறைகளாவது நிமிர்ந்து நிற்கும் என்பதே எனது பேரார்வமாக இருக்கின்றது.

வருத்தப்படாத வாலிபர் சங்கம் தனக்குள்ளாக ஒரு மேன்மையான சிந்தனையை கொண்டிருக்கின்றது. அச்சிந்தனை வளர்ந்து பரந்து இருக்கிறது. அது பலரது வாழ்வை மாற்றியிருக்கிறது. மாற்றவும் போகிறது. அது தனது எல்லையை விரிவு படுத்தி அக்கறையை அகலப்படுத்தி தமிழர் உன்னதங்களை உலகுக்கு பறைசாற்றி தமது சமூகத்தில் அர்த்தம் நிறைந்த வாழ்வுக்கு வழி சமைக்கப்போகிறது என்ற என் நம்பிக் கையே அவர்களுக்கு ஆசியாக்கி விடைபெறுகின்றேன்.

**பா.ஜெயகரன்**
**பிரதேசசெயலகம், மடு.**

### மேலதிக அரசாங்க அதிபர் (காணி) அவர்களின் வாழ்த்துச் செய்தி



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரின் சிறப்பு மலருக்கு வாழ்தது செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளவாலைக் கிராமத்திலுள்ள இளைஞர்கள் தமது புலம்பெயர் உறவுகள் மற்றும் கிராமத்திலுள்ள உபகாரிக-ளிடமிருந்து நிதியினை பெற்று சமூகத்தில் தேவையுடையவர்களை அறிந்து அவர்களுக்கு உதவுவது சிறப்புடையது. அவர்களது பணி ஏனையவர்களை யும் சமூகத்தில் அக்கறை கொள்ளச்செய்யும் என்பதில் தவறில்லை

இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கு பகுதிகளில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையில் பாதி-க்கப்பட்ட மக்களுக்கு சமூக சேவை ஆற்றுவதனை நோக்காகக்கொண்டு அவர்களுக்கு உதவுவது பாராட்டப்படவேண்டும். அதேபோல் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு இலவச வகுப்பு-க்களை நடாத்தியும் கற்றல் உபகரணங்களை வழங்கியும். இரத்ததான முகாம். டெங்கு ஒழிப்பு பணிகள். பாரம்பரிய விழாக்கள். பண்டிகைகள் என பல பணிகளை ஐந்தாண்டுகளாக ஆற்றி-வருவது குறிப்பிடத்தக்கது. இவர்களது பணியினை பாராட்டுவதோடு. இவர்களது பணிக்கு பக்க-பலமாக இருந்து நிதி வழங்கும் நிறுவனங்கள் பரோபகாரர்களையும் பாராட்டி மலரும் சிறப்பிதழ். சிறப்புடன் இதழ் விரிக்க என் நல்வாழ்த்துக்களை கூறி அகமகிழ்கின்றேன்.

**சு.முரளிதரன் - மேலதிக அரசாங்க அதிபர் (காணி)**

### இளவாலை வருத்தப்படாத வாலியர் சங்கத்தின் ஆண்டு விழா வாழ்த்து



தமிழ் மக்கள் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் ஒரு புதிய சிந்த னைகளோடு சமுதாய மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்பு மிகுந்த அமைப்பாக வளர்ந்து வருவது மிகுந்த மகிழ்ச்சி தருகிறது. எம் மத்தியில் இளைஞர் சமூகம் எம் தேசத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுகளாக. வாழ்வாதார மேம்பாட்டுக்காக மீண்டும் புத்தெழுச்சி பெற்று விடிவும் விடுதலையும் பெற்றிடத் தம்மை அர்ப்பணிப்பது அளப்பரிய செயற்பாடாகும் எனப் பாராட்டுகின்றேன்.

நகைச்சுவை உணர்வுகளோடு ஒன்றுபட்டு உவகை கொண்ட இளம் உள்ளங்கள் வருத்தப்படாத இளைஞர் கழகம் ஒன்று கூடிப் புதிய வழிகாட்டிகளாய் சமுதாயத்தில் உழைப்பதை நான் அறிந்து மகிழ்ந்து பாராட்டியிருக்கிறேன். அவர்கள் நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டிருக்கிறேன். இளைஞர் சமுதாயத்தில் கல்வி. கணனித்துறையில். தொழில்நுட்பத் தொழில்துறை முயற்சிகளில். விளை யாட்டுத்துறையில் இவ்வியக்கம் புதிய வழிகாட்டிகளாய் விளங்குகின்றது. கொள்கை. இலட்சியப் பற்றுள்ள ஒழுக்கமுள்ள ஒரு இளைஞர் சமுதாயத்தை உருவாக்குவதில்.கட்டமைப்பதில் இவ் வாலி பர்கள் வெற்றி பெற்று வருகிறார்கள். தமிழினத்தின் விடுதலைக்காக இலட்சோப இலட்சம் மக்கள் தங்கள் உயிர்களையே பலிகொடுத்துத் தியாகம் நிறைந்த எம் தமிழர் சமுதாயத்தில் இளைஞர்கள் சிலர் மதுவுக்கும். போதைக்கும் அடிமையாகிச் சீரழிவதைத் தடுத்து நிறுத்தி ஒழுக்கமுள்ள ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில வருத்தப்படாத இளைஞர் கழக இளைஞர்கள் வெற்றிபெற உழைக்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

தங்கள் மன்றத்தின் ஆண்டு விழா சிறப்புடன் வெற்றிபெற இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாவை.சோ.சேனாதிராசா,பா.உ.**

### முல்லைத்தீவிலிருந்து வாழ்த்துகின்றேன்.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் மலர்ந்து ஐந்து ஆண்டுகள் நகர்ந்து பயணிக்கும் தருணமதில் அவர்கள் வழங்கிய பல்வேறு உதவிகளை நினைவு கூர்ந்து நிற்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். குறிப்பாக எமது கரைதுரைப்பற்று பிரதேசத்தில்

- பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள்
- யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ மற்றும் மாற்றுத்திறனாளிகளினை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள்
- பாடசாலை மாணவர்க்ளுக்கான கல்வி உபகரணங்கள்
- சென்ற வருட சிறுவர் மற்றும் முதியோர் மாற்றுவலுடையோர் தினத்திற்கு இணை அனுசரணை

போன்ற உதவிகள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு இவர்கள் இனிவரும் காலங்களிலும் சமூகத்திற்கான தங்கள் சேவைகளைத் தொடர வேண்டுவதோடு இச் சங்கம் மென்மேலும் வளர்வதற்கு எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்கு வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**பிரதேச செயலாளர்**
**பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று**

### வாலியர்களின் பயணம் சிறக்கட்டும்



சமூகத்தில் பல்வேறு துறைகளிலும் ஆளுமை மிக்கவர்களை உருவாக்கு வதற்கான கருவியாய் விளங்கும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கமானது ஐந்து ஆண்டுகளை ஆக்கபூர்வமான முறையில் பூர்த்தி செய்து ஆறாவது ஆண்டில் கால்பதிக்கும் இத்தருணத்தில் அவர்களது பணி மேலும் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நெறிப்படுத்தல்கள் ஓர் அமைப்பினூடாக வழிநடத்தப்படும்போது ஒழுக்கமும் அறிவும் கலாசாரமும் முறையாக முன்னேற்றமடையும். இளைஞர்களின் இத்தகைய இணைவு தற்காலத்தின் தேவையென்றே சொல்லலாம்.

ஓர் அரசாங்க அமைப்பாக அல்லாத போதும் சிறந்த முறையில் தொடர்ந்து ஐந்து வருடங் களாக பிரதேசத்தின் தேவை அறிந்து செயற்பட்டு வரும் ஓர் அமைப்பாக இந்த வருத்தப் படாத வாலிபர் சங்கம் செயற்பட்டு வருவது பாராட்டுதற்குரியது.

இணையத்திற்குள் முடங்கிக் கிடக்கும் உலகை தட்டி எழுப்புவதுபோல் மாவட்ட ரீதியாக இளைஞர்களை ஒன்றிணைக்கும் வகையில் வருடம்தோறும் நடத்தப்படும் விளை யாட்டுப்போட்டிகளும். தமிழர் பாரம்பரியத்தினை கட்டிக்காக்கும் வகையில் நடத்தப்படும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி. பட்டம் விடும் போட்டி என்பன உண்மையில் வரவேற் கத்தக்க விடயங்களாகும்.

அத்துடன் தங்களால் முன்னெடுக்கப்படும் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல். கணினிக் கற்கை நெறி. மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புக்களும் பரீட்சைகளும் போன்ற மாணவர்களுக்கான கல்விச்செயற்பாடுகள் தொடர்ந்து வரும் வருடங்களில் மேலும் பரந்து பட்ட அளவில் நடத்தப்பட்டு பலரும் பயனுறும் வண்ணம் அமையவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

உண்மையில் இவ்வாறு இளைஞர்களுக்கான ஓர் கழகத்திற்கான கதவினை முதன் முத லில் திறந்து வைத்தவர்கள் பாராட்டுதற்குரியவர்கள். இவ்வாறான சிந்தனைகள் கருவுறுதல் கடினம். இவ்வாறே கருவுற்ற சிந்தனைகள் செயல்வடிவம் காணல் கடினம். பல கடினங்கள் தாண்டி கருவுற்று செயல் கண்டு இன்று ஐந்தாண்டு கண்டு ஆறாண்டில் கால்பதிக்கும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கும் தனது செயற்பாடுகளில் கரைகாண வாழ்த்துகிறேன்.

"வாழ்க உங்கள் பணி"

**அ.ஜெபநேசன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தென்மெற்கு பிரதேசசபை மானிப்பாய்**

...அனுசரணை

BANK OF CEYLON
BOC
Bankers to the Nation

IDM
Creating Opportunities Nurturing Achievers Since 1974
உங்கள் Diploma மற்றும் உயர் கல்விக்கான சிறந்த தேர்வு
Achievers International Campus
யாழ்ப்பாணம் 077 290 8584
நெல்லியடி 076 652 0414
மல்லாகம் 077 770 6983

Arul Construction
DESIGN & BUILD
A.L.Reminus (Kishor)
B.B.A (Hons), NCT Civil Eng. NVQ-05
Polity Ilavalai, Jaffna

கிறீன் அக்றோ
குபோட்டா, பம்ரக்ரர்
நெல் அறுவடை இயந்திரங்கள்
Hayleys உர. நெல்வகைகள்
என்பவற்றை பெற்றுக்கொள்ளலாம்.
021 228 5480
A9 வீதி. ஆனந்தபுரம். கிளிநொச்சி.

GLORY ALUMINIUM
Glory Aluminium Enterprises
Alumex Aluminium இற்கான
யாழின் முகவர்
No.164 Stanley Road, Jaffna.
021 222 1153, 077 311 4415

# உயர் கண்டீர் உவகை கொண்டோம்



எமது கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய

**திருமதி இராதிகா லெனாட் இந்திக**
**(B.A,PGDE, S.L.P.S III )**

அவர்கள் **அதிபராகப் பதவி உயர்வு பெற்று கடந்த 19.09.2018 யா/ சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில்** பதவிப் பொறுப்புக்களை ஏற்றதனை அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் மேலும் பட்டங்கள், பதவி உயர்வுகள் பெற்று சேவையால் மேன்மையுற்று நீடுழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:- **சேவையாளர் சங்கம், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

(CS/21033)(11,17)

## நல்லூர் பிரதேசசபை, கொக்குவில் நடுக்கட்டல் சேவை பெறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

| தொ.இ | விவரம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | நடுக்கட்டல் சேவை | 02 |

**அடிப்படைத் தகைமைகள்**

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினைக் கொண்டவராகவும் ஐந்து வருடங்கள் பிரதேசத்தில் வசிப்பதனை வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- நன்னடத்தை மற்றும் சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் உட்பட இரு நற்சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

**ஏனைய நிபந்தனைகள்**

- முற்றிலும் தற்காலிகமானதும் எக்காலத்திலும் நிரந்தர நியமனம் கோரமுடியாததுமான பதவியொன்றாகும்.
- நடுக்கட்டல் உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்படுபவர் முற்றிலும் தரகு அடிப்படையிலான (கொமிசன்) கொடுப்பனவைப் பெறும் வகையில் நியமிக்கப்படுவார்.
- நியமனம் பெறும் நடுக்கட்டல் உத்தியோகத்தர் ரொக்கப்பிணை பணமாக ரூபா ஐயாயிரம் (5000.00) இனை அலுவலகத்தில் மீளளிக்கக் கூடிய பிணைப் பணமாக செலுத்துதல் வேண்டும்.
- விண்ணப்பப் படிவம் சொந்தக் கையெழுத்திலேயே பூரணப்படுத்தப்பட வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

- நல்லூர் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் வரி நீங்கலாக ரூபா.50/- ஐச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி தகைமைகளுக்கான தகைமைச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
- கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் **" நடுக்கட்டல் சேவை வழங்குவதற்கான விண்ணப்பம்"** எனக் குறிப்பிட்டு **2018.11.20 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ** கிடைக்கக் கூடியதாக **"தவிசாளர், நல்லூர் பிரதேசசபை, இல. 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் "** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**சேவையைப் பெறுவது தொடர்பான இறுதித்தீர்மானம் சபையினால் மேற்கொள்ளப்படும்.**

**தலைவர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

02.11.2018 (JN/8244)(11,17)

## வீடுகளுக்கு வந்து கற்பித்தல்


**குழு - தனி வகுப்புக்கள்**
ஆங்கிலம் அனைத்துத் தரங்கள்
கலைப்பாடங்கள் / கணக்கியல் - ஆங்கில மூலம்
சிங்களம் - சிறு வகுப்புக்கள்

**077 331 6402**

(CS/21035)(11,17)

## வருடமொன்று கழிந்ததுவே... மெது இதய அஞ்சலிகள்

தோற்றம் 26 . 05 . 1928



மறைவு 05 . 11 . 2017

**அமரர் நாகமுத்து நல்லதம்பி**


பார்தனிலே பக்குவமாய் பட்டறிவு மேலோங்கச்
சீர் பெறவே செய்திட்ட செய்நன்றி மறப்போமோ?
சிந்தை தனிலுங்களைத் தெய்வமாய்க் கொண்டே
சீரடிகளில் தொழுவோம் தரணியிலே நாமிருந்து
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர்.

(ACH/360)(11,17)

## மரண அறிவித்தல்



**டாக்டர் செல்லத்துரை இராஜரட்டினம்**

ஓய்வுபெற்ற பல் வைத்தியரும் யாழ்ப்பாணம், மூன்றாம் குறுக்குத்தெருவில் வசித்தவருமான டாக்டர் செல்லத்துரை இராஜரட்டினம் 03.11.2018 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு. திருமதி செல்லத்துரை தம்பதிகளின் புதல்வனும் காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா பரமு - திருமதி சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற திருமதி பத்மாவதி இராஜரட்டினத்தின் பாசமிகு கணவரும் கிரிஷன் (பின்லாந்து), செல்வி நிவேதித்தா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.11.2018) திங்கட்கிழமை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின்னர் தகனக்கிரியைக்காக பொன்னாலை திருவடிநிலை மயானத்திற்கு நண்பகல் 12.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ம.ச.ஜெயதேவன்**
**021 222 2456, 077 703 6891**

**தகவல்: பிள்ளைகள்**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், கனடா PR, 21.10.1988, சதயநட்சத்திரம், கும்பராசி, கிரகபாவம் 61 (வித்தியாசம் 25 வரை எதிர்பார்க்கலாம்), உயரம் 5'6" உடைய மணமகனுக்கு நற்குணமுடைய அழகிய படித்த மணமகள் தேவை. (மணமகன் கொழும்பு வந்துள்ளார்)

**077 978 0205 (தந்தை)**

(CS/18684)(11,17)

## ES Printers

GRAPHIC design

**2019 இற்கான அனைத்து வகையான கலண்டர்களையும் குறைந்த விலையில் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.**

**அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்**



357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 222 7432



ABI Fashion World

**புதிய ரகங்கள்! நீங்கள் விரும்பும் விலையில் உங்கள் அபி பஷன் வேல்ட் காட்சியறையின் 03 ஆவது தளத்தில்...**

விழிகள் வியக்கும் ஒளி விழா தீபாவளி திருவிழா

**இது அபி பஷனின் நம்ம வீட்டுத் தீபாவளி !**

# அபி பஷன் வேல்ட் இன்

ரெடிமெற் ஆடைகளின் சங்கமம்


**50% வரையான தீபாவளி சிறப்பு அதிரடி விலைக்கழிவு**

**இச்சலுகை 05.11.2018 வரை மட்டுமே**
(விலைக்கழிவுகள் நிபந்தனைகளுக்குட்பட்டது)




**112, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
(சத்திரச்சந்திக்கும் பிரதம தபாலகத்திற்கும் இடையில்)

**021 222 3738** abifashionworld



# அன்புக்கு வெரும் அடிபணிவர்

மன்னன் ஒருவர் நோய் வாய்ப்பட்டுப் பல நாள்களாக படுத்த படுக்கையாகக் கிடந்தார். அவரை நலம் விசாரிப்பதற்குத் தினமும் பிரமுகர்கள் பலர் வந்து போய்க் கொண்டி ருந்தார்கள். அவர்கள் வரும்போது வெறும் கையுடன் வருவதும் கிடையாது. சத்துள்ள வகை வகையான பழங்கள், உணவுப் பண்டங்கள் எனப் பலவற்றைத் தட்டுக்களில் வைத்து எடுத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் இப்படியே சிலர் பலவித பழங்களையும் பண்டங்களையும் அரசிடம் கொடுத்து நலம் விசாரித்துக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு விவசாயி மன்னனைக் காண்பதற்கு அரண்மனை வாயிலுக்கு வந்தான். அவரது எளிமையான தோற்றத்தைப் பார்த்த காவலாளிகள் அவரை அரண்மனைக்கு உள்ளே செல்லவிடாது தடுத்தனர். இருந்தும் அவர் காவலாளிகளைப் பொருட்படுத்தாது எப்படியோ அரண்மனைக்குள் புகுந்து மன்னனின் படுக்கையறையளவுக்கு வந்துவிட்டார்.

அவரது கலைந்த தலை முடியும் ஆடையில் படிந்திருந்த தூசியும் அவன் கிராமத்திலிருந்து வெகுதூரம் நடந்து வந்திருகிறார் என்பதை வெளிப்படுத்தின. அரசனைச் சூழ இருந்த பிரமுகர்கள் முகத்தைச் சுழித்துக் கொண்டனர். அவர் சத்தமில்லாமல் வந்துள்ளான். அவரது அழுக்குகள் அரசின் உடலில் பட்டால் மன்னருக்கு மேலும் நோய்த் தொற்று ஏற்பட்டு விடுமென்று கூறி அவரை உடனே வெளியேற்றும்படி அங்கிருந்தவர்கள் அரசனைக் கேட்டுக் கொண்டனர்.

விவசாயியின் கோலத்தைப் பார்த்த மன்னனோ அவரை விரட்டாமல் தன்பக்கம் அழைத்து அவர தன்னைத் தேடி வந்த நோக்கம் என்னவென அமைதியாக விசாரித்தார்.

விவசாயியோ "மன்னா, உங்கள் உடம்புக்கு முடியாமல் போயிற்று என்று கேள்விப்பட்டேன். உடனேயே உங்கள் உடல் தேற வேண்டும் என்று எங்கள் ஊர் மாரியம்மனுக்குப் பொங்கல் படைத்தேன். அந்தப் பிரசாதத்தைத் தங்களுக்காகக் கொண்டு வந்துள்ளேன். ஏற்றுக் கொள்ளுங்கள். அம்மன் பிரசாதம் சாப்பிட்டால் எந்த நோயும் பறந்து ஓடிவிடும்" என்றார்.

உடனே மன்னன் சற்றும் தாமதிக்காது அந்தப் பிரசாதத்தை வாங்குவதற்காகக் கையை நீட்டினார். விவசாயியும் உடனே தான் கொண்டு வந்ததைப் பையுள் இருந்து வெளியே எடுத்தார். அப்போது அதிலிருந்து கெட்டுப்போன ஒரு மணம் வந்தது. அங்கிருந்தவர்கள் மூக்கைப் பொத்தி, முகத்தைச் சுழித்துக் கொண்டனர். ஆனால் அரசரோ எதனையும் கவனிக்காத மாதிரி மிகவும் மகிழ்வுடன் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டதோடு தனது கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலையைக் கழற்றி விவசாயிக்கு பரிசாகக் கொடுத்து நன்றி கூறி அவனை அனுப்பி வைத்தார்.

உடனே அங்கிருந்த பிரமுகர்களில் ஒருவர் "அரசே கெட்டுப்போன பொங்கலுக்கா முத்து மாலையைப் பரிசளித்தீர்கள்?" என்றார் வியப்புடன். அரசரோ "அது கெட்டுப் போயிருக்கிறது என்பது எனக்கும் தெரியும் ஆனாலும் தான் கொண்டு வந்த பிரசாதத்தை நான் சாப்பிட்டுக் குணமடைய வேண்டும் என்ற அவரது கள்ளம் கபடமற்ற அன்பு மட்டும் உண்மையானது! உண்மையான அன்புக்கு மதிப்பு மிக அதிகம். நான் அளித்த முத்துமாலை கூட உண்மை அன்புக்கு முன்னால் எம்மாத்திரம்?" என்றார்.

# வாழையடி வாழையாக...


ஒருவரையோ அல்லது அவரது பரம்பரையையோ வாழ்த்தும் போது நம் முன்னோர்கள் "வாழையடி வாழையாக நீடூழி வாழ்க" என்று வாழ்த்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். கனிதரும் பல பயனுள்ள மரங்கள் இந்தப் பூமியில் இருக்க வாழை மரத்தை மட்டும் இப்படிப் பரம்பரை விருத்திக்கு உதாரணமாகக் கொள்வதற்கு காரணமில்லாமல் இல்லை. வாழை மரம்தான் குலை ஈந்ததும் தன்னுடைய வாழ்வை முடித்துக் கொள்வது. இப்படித் தனது வாழ்வை முடித்துக் கொள்வதற்குச் சில காலங்களுக்கு முன்பாக அது தன்னுடைய் பரம்பரையை விருத்தி செய்ய குட்டிகள் பலவற்றை ஈன்று விடும். எந்தவொரு வாழையும் தனது பரம்பரைக்கு ஒரு குட்டியையேனும் ஈனாமல் இறப்பது கிடையாது. ஒரு வாழைக் குட்டி ஈன்று ஒரு சில மாதங்களில் அது வாழைக் குலையை வெளிவிடும்.



அந்த வேளை அது ஈன்ற குட்டி வளர்ந்து கன்னிப் பருவத்தை அடைந்து விடும். இப்போது தாய் மரத்தின் குலை 5,6 மாதங்களில் பழுத்து விடும். அது பழுத்ததும் அதைத் தனக்கு நீரூற்றி பசளையிட்டு பராமரித்த எஜமானுக்கு நன்றிக்கடனாகச் செலுத்திவிடும். வாழைக்குலை வெட்டப்படும் போது தாய் வாழையின் ஆயுளும் முடியும். இந்த வேளை அது ஈன்ற குட்டி கன்னியாகி குலை தரும் நிலையை அடைந்துவிடும்.

இப்படியே இந்தச் செயற்பாடுகள் ஒரு முடிவில்லாமல் ஒரு சங்கிலித் தொடர் போல நடைபெற்றுக் கொண்டிருக்கும். அதன் பரம்பரை ஒருபோதும் அழிந்து போவதில்லை. இன்னும் பெருகிப் பெருகி ஒரு தோப்பாக நிலை பெற்று விடும். இதனால் தான் பல கனிதரும் மரங்கள் இருக்க ஒருவரை வாழ்த்துவதற்கு நம்முன்னோர் உதாரணமாக வாழை மரத்தை எடுத்துக் கொண்டனர். அதாவது அவர் பரம்பரை வாழையைப் போல் தொடர்ந்து செழித்து விருத்தியாகத் தனி மரமாக அன்றி, தொடர்ந்து தோப்புப் போல் அவர் பரம்பரை பல வழிகளிலும் செழிப்புற்றுப் பயன்தர வேண்டும் என்பதே அந்த வாழ்த்தின் அர்த்தமாகும். ஒரு மாமரமோ, தென்னையோ பனையோ அல்லது மற்றும் கனிதரும் மரங்களோ வாழையைப் போன்று தொடர்ந்து இயல்பாகவே தம் பரம்பரையை விருத்தி செய்வது கிடையாது.

## வித்தியாசங்களைக் கண்டுபிடிப்போம்



## இலங்கையின் முதலாவது தலைமை அமைச்சர்
# டி.எஸ் சேனநாயக்கா



இவர் டி.எஸ்.சேனநாயக்கா. இலங்கையின் முதலாவது தலைமை அமைச்சர் . 1884 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 20ஆம் திகதி பிறந்த பௌத்தரான இவர் கொழும்பு புனித தோமையார் கல்லூரியில் கல்வி பயின்றவர். பின்னர் சிறிது காலம் நில அளவை திணைக்களத்தில் எழுதுநராகப் பணியாற்றினார். அதன் பின்னர் தனது தந்தையாருக்குச் சொந்தமான இறப்பர் தோட்டத்தைக் கவனித்தார்.

1929ஆம் ஆண்டில் இலங்கைச் சட்டவாக்கப் பேரவையில் ஓர் உறுப்பினரானார். 1931 ஆம் ஆண்டில் அரச சபைக்குத் தெரிவு செய்யப்பட்டு வேளாண்மை காணி அமைச்சரானார். வேளாண் மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தவர். 1946ஆம் ஆண்டில் பிரித்தானியரால் வழங்கப்பட்ட 'சேர்' பட்டத்தை மறுத்தார். எனினும் பிரித்தானியருடன் நல்லுறவை வளர்க்க விரும்பினார். 1947ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு இலங்கையின் முதலாவது தலைமை அமைச்சரானார். 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம்திகதி பிரித்தானிய ஆதிக்கம் முடிவுற்றதும் இலங்கை முழுவதையும் நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றார். கல்லோயாத் திட்டத்தைத் தொடக்கி வைத்தார். குதிரைச் சவாரி ஒன்றில் கலந்து கொண்ட வேளை குதிரையின் மேலி ருந்து தவறிவிழுந்து காயமடைந்த இவர், 1952ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி இறந்தார். இவருக்குப் பின் இவரது மகன் டட்லி சேன நாயக்கா இலங்கையின் தலைமை அமைச்சரானார்.



# கேட்டில் எக்ரெட்!

கேட்டில் எக்ரெட் (Cattle Egret) என்பது ஒரு கொக்கு இனத்தைச் சேர்ந்த பறவை. இவை, மாட்டுக் கொக்குகள் என்றும் உண்ணிக் கொக்குகள் என்றும் அழைக்கப்படும். மாடுகள், காண்டாமிருகங்களுக்கு உற்ற தோழனாகத் திகழ்கின்றன.

அவற்றின் உடலில் இருக்கும் உண்ணிகளைக் கொத்திச் சாப்பிடும். காண்டாமிருகத்தின் மீது சவாரி செய்யும் இவை, அவற்றின் எதிரிகள் தென்பட்டால், உடனே 'கீச் மூச்' என்று சத்தம் எழுப்பி, நண்பனுக்கு எச்சரிக்கை செய்யும். காண்டாமிருகத்தின் தோல் மீதுள்ள பூச்சிகளையும் 'கேட்டில் எக்ரெட்' பிடித்துச் சாப்பிடுகிறது. இதனால், இந்தப் பறவையைத் தவிர வேறு எந்தப் பறவையையும் தன் மீது உட்கார்வதற்கு காண்டாமிருகம் அனுமதிப்பது இல்லை.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நிலமை மேலும் மோசமடையும்

கொழும்பில் குழப்பமடைந்த அரசியல் நிலவரங்கள் அடுத்த வாரத்திலும் தெளிவதற்கான அறிகுறிகள் எவையும் தெரியவில்லை. அரச தலைவருக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையிலான நேரடி மோதலைத் தவிர்க்கும் விதத்தில் நாடாளுமன்றத்தை நாளைமறுதினம் 7ஆம் திகதி கூட்டுவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் உறுதியளித்த போதும் அதற்கான அரசிதழ் (வர்த்தமானி) அறிவிப்பு இன்னும் வெளியிடப்படவில்லை என்பதால் 7ஆம் திகதி நாடாளுமன்றம் கூடுமா என்கிற சந்தேகம் தொடர்கின்றது. அரச தலைவர் நாடாளுமன்றத்தைக் கூட்டவில்லை என்றால் அவரை எதிர்த்து நாடாளுமன்றத்தைக் கூட்டுவது என்பதே பெரும்பான்மையான உறுப்பினர்களின் முடிவாக உள்ளது என்பதால் அடுத்த வாரமும் அரசியல் குழப்பம் தொடர்வதற்கான சாத்தியங்களே அதிகம் இருக்கின்றன.

மகிந்தராஜபக்சவை புதிய தலைமை அமைச்சராக நியமித்த கையோடு நாடாளுமன்றத்தையும் 16ஆம் திகதி வரைக்கும் ஒத்திவைத்தார் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன. இது மக்களாட்சிக்கு மாறான செயற்பாடு என்று கூறும் ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பவற்றின் தலைவர்கள் கூடி நாடாளுமன்றத்தை கார்த்திகை 2ஆம் திகதியே கூட்ட வேண்டும் என்று சபாநாயகரிடம் வலியுறுத்தியிருந்தார்கள்.

எனினும் அரசதலைவருடன் முரண்படாத வகையில் ஒரு சுமூக நிலமையை ஏற்படுத்தும் விதமாக மைத்திரிபால சிறிசேனவுடன் சபாநாயகர் இது குறித்துக் கலந்துரையாடினார். இதனால், கார்த்திகை 5ஆம் நாள் நாடாளுமன்றத்தைக் கூட்டுவது என்று இரு தரப்பினரும் இணங்கியிருந்தனர். அதற்கான அரசிதழ் அறிவிப்பை அரச தலைவர் விடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அது வெளியிடப்படவில்லை. இதையடுத்து கார்த்திகை 7ஆம் நாள் நாடாளுமன்றம் கூட்டப்படும் என்று அரச தலைவர் பக்கம் இருந்து தெரிவிக்கப்பட்டது. ஆனால், அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பும் இதுவரையில் வெளியாகவில்லை.

நாடாளுமன்றத்தில் மகிந்த ஆட்சிக்கான பெரும்பான்மையை நிரூபிப்பதில் ஏற்பட்டுள்ள இடர்பாடே இதற்கான காரணம் என்று அரசியல் வட்டாரங்களில் உய்த்துணரப்படுகின்றது. நேற்று மாலை வரையான நிலவரத்தில் மகிந்த தரப்புக்கு 104 உறுப்பினர்களின் ஆதரவும் ரணில் விக்கிரமசிங்கவின் தரப்புக்கு 112 உறுப்பினர்களின் ஆதரவுமே இருந்தது. ஜே.வி.பி. உறுப்பினர்கள் மற்றும் ஐ.தே.கவின் அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோர் நடுநிலை வகிக்கப்போவதாக அறிவித்துள்ளனர். இந்த நிலையில் யாருக்கும் பெரும்பான்மையை நிரூபிக்கக்கூடிய நிலமை இப்போதைக்கு இல்லை.

ஐ.தே.க. பக்கம் இருந்து குறைந்தது இன்னும் 9 பேரையாவது தம் பக்கம் இழுத்தால் மட்டுமே மகிந்த தரப்பினரால் வெல்ல முடியும் என்பதே இதுவரையில் நிலவரம். அதற்கான பேரங்கள் இன்னமும் படிந்து வராமையாலேயே நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அறிவிப்பை அரச தலைவர் இன்னமும் விடுக்கவில்லை என்று தெரிகிறது.

நிலமை இப்படியே சென்றால் நாடாளுமன்றத்தை எப்படியும் எதிர்வரும் 7ஆம் திகதி கூட்டி அன்றைய தினமே மகிந்த மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றுவது என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டம். அப்படி நடந்தால் அது அரச தலைவருக்கு பெரும் அவமானமாகவும் தோல்வியாகவும் முடியும். இதனால், அவர் முன்னரே கூறியதைப் போன்று பதவி விலகும் நிலமையும் ஏற்படலாம்.


அதேநேரத்தில் ஐ.தே.கவும் பெரும்பான்மையை நிரூபிக்கத் தவறும்பட்சத்தில் நாடு மேலும் உறுதியற்ற நிலமைக்குள் தள்ளப்படும். நிலமைகள் மேலும் மோசமடையும். இது பல குழப்பங்களுக்கு வழிவகுப்பதாக இருக்கும்.

# நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவது அரச தலைவரின் நோக்கமா...?

இந்துமதி



எதிரணியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை மகிந்தவுக்கு ஆதரவாக இழுப்பதற்கு வாய்ப்பாக நாடாளுமன்ற அமர்வை அரச தலைவர் ஒத்திப்போட்டிருப்பது ஜனநாயகத்தைக் கொலை செய்கின்றதொரு மோசமான செயலாகும். மகிந்தவின் பக்கம் தாவுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவியும், பெருந்தொகையான பணமும் வழங்கப்படுவதாகவும் செய்திகள் வெளியாகின்றன. அரச தலைவர் இதை ஊக்குவிக்கும் வகையில் நடந்துகொள்வதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. இந்த நிலையில் தமக்கே பெரும்பான்மை இருப்பதாக அவர் கூறி வருவதையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதேவேளை கூட்டமைப்



பின் தலைவரைப் பேச்சுக்களுக்கென அழைத்த மகிந்த தரப்பினர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைத் தம் பக்கம் இழுத்தெடுத்ததன் மூலமாகக் கூட்டமைப்பின் தலைவருடன் மேற்கொண்டு பேசுவதற்கு நிரந்தரமாகவே தடைபோட்டு விட்டனர்.

**கட்சி தாவுகின்றவர்களை மக்கள் மன்னிக்கர்**

ஒட்டுமொத்த தமிழர்களின் முகத்தில் கரியைப் பூசிவிட்டுக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த வியாழேந்திரன், மகிந்தவின் பக்கம் தாவியுள்ளார். கிழக்கு மக்களைப் பாதுகாப்பதற்காகவும், அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் தாம் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவித்ததாக வெட்கமின்றி அவர் கூறியதை எந்தத் தமிழனும் ஏற்றுக்கொள்ள மாட்டான். பதவிக்காகவும், பணத்துக்காகவும் தாம் கொண்ட கொள்கையை உதறித் தள்ளியவர்களை வரலாறு என்றுமே மன்னிக்காது. இனிவரும் காலத்தில் மக்களைத் தன் பக்கம் ஈர்ப்பதற்கான வீர முழக்கங்க ளில் அவர் ஈடுபடுவார் என்பதை நாம் நம்பலாம். பணமும் இனி அவரிடம் நிறையவே சேர்ந்து விடுவதால், தேர்தல்களை ஒட்டி வாரியிறைத்து வெற்றி பெறவும் அவர் முயல்வார்.

**மகிந்தவுக்கு எதிராக வாக்களிப்பது சரியானதாகப் படுகிறது**

மகிந்தவுக்கு எதிராக வாக்களிப்பதற்குக் கூட்டமைப்பு முடிவு எடுத்துள்ளதாகக் கூட்டமைப்பின் தலைவர் கூறியுள்ளது தற்போதைய சூழ் நிலையில் சரியானதொரு முடிவாகவே தெரிகின்றது. மகிந்த தரப்பின் துரோகத்தனத்துக்குச் சரியானதொரு பதிலடியாகவே இதைக் கொள்ள முடிகின்றது.

**அரச தலைவரின் நோக்கமும் அதனால் உண்டாகப்போகின்ற இழப்புக்களும்**

மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன்னுடைய பக்கம் ஈர்க்கும் வரையில், நாடாளுமன்றத்தைக் கூட்டுவதில்லையென்ற முடிவில் அரச தலைவர் உள்ளதாகவும் தெரியவருகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன் பக்கம் இழுத்துக் கொள்வதற்கு மகிந்த தரப்புக்குக் கால அவகாசத்தை வழங்குவதே அரச தலைவரின் நோக்கம் என்பதை எவராலும் சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும். பன்னாட்டுச் சமூகம் அரச தலைவர் மீது கொண்டிருந்த நம்பிக்கை முற்றாகவே இழக்கப்பட்டு விட்டது. இதனால் நாட்டு மக்களே பாதிப்புக்களை எதிர்கொள்ளப் போகின்றனர். ஏனென்றால் அரச தலைவரிடம் நம்பிக்கை இழந்த பிற நாடுகள் இலங்கைக்குத் தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என எதிர்பார்ப்பது மடமைத்தனமானது.

**மகிந்தவின் கைகளுக்கு மாறவிருக்கின்றது கட்சி**

மகிந்த தலைமையில் அமைக்கப்பட்ட புதிய அமைச்சரவை மீதும் நம்பிக்கை ஏற்படுவதற்கான வாய்ப்புக் குறைவாகவே உள்ளது. இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை மகிந்தவிடம் ஒப்படைப்பதற்கான முயற்சிகளும் இடம்பெறுவதாகத் தெரிகின்றது. தற்போது மைத்திரிபால சிறிசேனவே அந்தப் பதவியை வகித்து வருகின்றார். மகிந்த தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து கட்சியின் தலைமைப் பதவி அவருக்கே வழங்கப்படவேண்டுமென அவரது நெருங்கிய ஆதரவாளர்கள் விரும்புகின்றனர். இதை மைத்திரி எவ்வாறு சமாளிக்கப் போகின்றார் என்பதும் தெரியவில்லை.

**அரச தலைவரின் செயற்பாட்டால் வன்முறை உருவாகும் வாய்ப்பு**

இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதரான சமந்தா பவர் வெளியிட்டுள்ள அறிக்கை அச்சமூட்டும் வகையில் அமைந்துள்ளது. இலங்கை அரச தலைவரின் கண்மூடித்தனமான செயல்களால் அந்த நாட்டில் வன்முறைகள் உருவாகுவதற்கான சாத்தியம் அதிகரித்துள்ளதாக அவர் கூறியதை எவருமே குறைத்து மதிப்பிட முடியாது. காலம் காலமாகத் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் இந்த நாட்டில் இடம்பெற்றுள்ளன. தற்போது அதிகாரப்போட்டி கரணமாக பெரும்பான்மை மக்களிடையே வன்முறைகள்



இடம்பெறுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டு விட்டது. இதனால் மோசமான விளைவுகள் ஏற்படுமென்பதை எதிர்பார்க்க முடியும். கூட்டமைப்பின் முடிவால் ஆத்திரமுற்ற சில தரப்பினர் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளிலும் இறங்கக்கூடுமென்ற அச்சம் கலந்த எதிர்பார்ப்பும் நிலவுவதை மறுத்துரைக்க முடியாது. அவ்வாறு ஒரு நிலைமை ஏற்பட்டால் அதைக் கட்டுப்படுத்துவதற்கான திறமையும் அர்ப்பணிப்பான சிந்தனையும் அரச் தலைவரிடம், புதிய தலைமை அமைச்சரிடம் உள்ளதா? என்பதும் சந்தேகத்துக்கிடமானது. எது எப்படியிருப்பினும் அமைதியாக இருந்த நாட்டில் குழப்ப நிலையொன்றைத் தோற்றுவித்திருக்கும் அரச தலைவரின் செயல்களை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

# மக்களுக்கான தலைவர்கள் இங்கில்லை...!

ந.ஜெகதீஸ்வரன்



மாஓ சேதுங் சீனப் புரட்சிக்குத் தலைமை தாங்குவதற்கு முன்னர் பெருந்தொகையான சீனமக்கள் பட்டினியால் மடிந்தார்கள். இந்தக் கட்டத்தில் சீன அரசியலில் தலைமை ஏற்ற மாஓ சேதுங் ஓர் அரசியல் தலைவர் எப்படி இருக்கவேண்டும் என்ற மிக எளிய வரைவிலக்கணம் ஒன்றைக் கொடுத்தார். "அரசியல் தலைவர் தமது ஊருக்குச் செல்லும்போது அந்த ஊர் மக்கள் கோலாகலமாக வரவேற்பார்கள். அரசியல் தலைவர்கள் அதில் மயங்கிவிடாது. அந்த ஊரில் உள்ள ஏழைகளைக் கண்டறிந்து மிகக் குறைந்த செலவில் வாங்கக்கூடிய உப்பையாவது வாங்கும் நிலையில் அந்த மக்கள் உள்ளனரா? என்பதைக் கண்டறிவதற்கு அவர்களின் சமையலறைக்குள் சென்று அவர்கள் உப்பு வைத்திருக்கும் பாத்திரத்தில் உப்பு இருக்கிறதா? என்பதைப் பார்ப்பது அவசியம்" என்பதே அவரது அந்த வரைவிலக்கணம்.

> 2013ஆம் ஆண்டில் வடமாகாணசபை அறிவிக்கப்பட்டது. நீண்ட போருக்குப் பிறகு தமக்குக் கிடைத்த நிம்மதியான அல்லது கௌரமான அரசியல் ஏற்பாடு என மக்கள் அதைக் கருதினர். இந்த எண்ணத்துக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

அவ்வாறான யாராவது தமிழர் தரப்பில் அரசியலில் உள்ளனரா? என்பது இன்றுள்ள கேள்வி. 'மக்களுக்காக' என்ற எண்ணம் உள்ளவர்களே அரசியலில் ஈடுபட வேண்டும். தனது மக்களுக்கு நல்லதோர் எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுப்பதே ஒரு சிறந்த தலைவருக்கு இருக்கக்கூடிய சிறப்பியல்பாகும். மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று நினைப்பவர்களுக்குக் கட்சி முக்கியமல்ல. அவரது செயற்பாடே முக்கியமானது. ஒரு தலைவனின் சிந்தனையும் அர்ப்பணிப்பான கடின உழைப்பும் இருந்தால் மாத்திரமே மக்கள் நன்மையடைவர்.




### எமது தலைவர்களின் நோக்கம் அடுத்து வருகின்ற தேர்தலே

தமிழ்த் தலைவர்களின் நிலை அடுத்து வரும் தேர்தலில் தாம் வெல்லக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதே. மக்களுக்கு எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொடுத்துவிட்டால் அடுத்த தேர்தலில் தம்மை மறந்து விடுவார்கள், அல்லது புறமொதுக்கிவிடுவார்கள் என்ற பயமும் இவர்களிடம் இருக்கிறது. சில தலைவர்கள் தமது ஒளிப்படங்களை எல்லா அலுவலகங்களிலும் கொழுவி வைக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்துகின்றனர். தமக்கு விருப்பமான கடவுள் படமுள்ள நாட்காட்டியை வாங்கிச் சுவரில் தொங்கவிட்டு அதற்குப் பூவும் வைக்கின்ற மக்கள், டிசம்பர் 31ஆம் திகதி வந்ததும் கடவுளைக் கழற்றிக் குப்பையில் எறிந்துவிட்டுப் புதிய கடவுள் படமுள்ள அடுத்த வருட நாள்காட்டியை வாங்கித் தொங்கவிடுகின்றனர். ஓர் அரசியல்வாதி பதவி விலகிய மறுநாளே அவர் கொழுவச் சொன்ன படத்தைக் கழற்றி மக்கள் குப்பையில் எறிந்து விடுவர். உண்மையான தலைவர்கள் தமது படங்களில் நம்பிக்கை கொள்ளாமல் மக்களின் மனதில் இடம்பிடிக்கும் வேலைத்திட்டங்களை உருவாக்கிக்கொடுப்பது அவசியம். அதுதான் மாஓ சேதுங் குறிப்பிட்ட ஏழையின் வீட்டு உப்புப் பாத்திர உதாரணமாகும்.

### தலைவராக வந்தமைந்த நீதியரசர்

2013ஆம் ஆண்டில் வடமாகாணசபை அறிவிக்கப்பட்டது. நீண்ட போருக்குப் பிறகு தமக்குக் கிடைத்த நிம்மதியான அல்லது கௌரமான அரசியல் ஏற்பாடு என மக்கள் அதைக் கருதினர். இந்த எண்ணத்துக்கு முக்கிய காரணமாக அமைந்தது. ஏற்கனவே அரசியலில் இருந்த தமிழ்த் தலைவர்கள் ஆகக்கூடியது சட்டத்தரணிகளாக இருந்தார்களே தவிர, நீதியரசராக, உயரத்தில் இருந்து தீர்ப்புக் கூறியவர்களாக இருக்கவில்லை. இதனால், விக்கினேஸ்வரனைச் சரியான தெரிவு என மக்கள் நம்பினர். இந்த ஆண்டு தேசிய நல்லிணக்க அமைச்சால் வடமாகாணப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு என்று 87.5மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு அதற்கான வேலைத் திட்டங்களை வடமாகாண அமைச்சு வகுக்காதாதால் அந்தப் பணம் திரும்பும் நிலையில் இருப்பதாக அண்மையில் யாழ்ப்பாணத்துக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிடும்போதுதான் மக்களுக்குத் தெரிய வந்தது. கிளிநொச்சி மாவட்டம் பற்றி அதிக அக்கறையுடன் பேசுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாணசபை உறுப்பினர்களும் இதுபற்றிச் சிந்திக்கவில்லையா?



இவ்வாறானதொரு நிதி ஒதுக்கீடு மத்திய அரசில் இருந்து தமக்குக் கிடை த்திருப்பதாக முதலமைச்சர் மற்றும் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் ஆகியோர் ஊடகங்கள் மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்தியிருக்க வேண்டும்.

### மக்கள் தீர்ப்பளிப்பார்கள்

அரசியல்வாதிகள்தான் ஒவ்வொரு தேர்தல்களிலும் மாற்றப்படுவார்களே தவிர மக்கள் அதே கிராமத்தில்தான் இருப்பார்கள். இத்தகைய பிழைகள் பாதிக்கப்பட்ட மக்கள் விழிப்படைவதற்கு வழியேற்படுத்தும். அடுத்து வருகிற தேர்தல்களில் இதில் கவனம் செலுத்தாத தலைவர்கள் ஒதுக்கப்படுவார்கள். கொழும்பு அரசின் நிதி மக்களுக்குத் தேவையில்லை என்று கூறுகின்ற வடமாகாண்சபை மத்திய அரசின் சம்பளத்தையோ, சொகுசு வாகனங்களையோ வேண்டாம் என்று கூறுவதில்லை. சமூக அக்கறை இல்லாத அரசியல் தலைவர்கள்போலவே திணைக்கள் அதிகாரிகளும் செயற்படுகின்றனர். ஒதுக்கப்படும் நிதிக்கான அறிக்கைகளையும், பாதீட்டையும் தயாரிக்கும் வல்லமையுள்ள பொறியிலாளர்களும், தொழிநுட்ப அலுவலர்களும் வட மாகாணத்தில் போதியளவுக்கு இல்லை. இதனால் நிதி ஒதுக்கீடுகளைப் பெறுவதால் மட்டும் உரிய உட்கட்டுமாண வேலைகளை நிறைவேற்ற முடியாத சூழல் காணப்படுகின்றது.



### வடக்கில் சிறந்த பொறியியலாளர்கள் இல்லை

தமிழரில் தலைசிறந்த பொறியியலளராகப் பேராசிரியர் துரைராஜா உட்படப் பலர் இருந்தார்கள். அவ்வாறான திறன்ம மிக்கவர்கள் இல்லாது போனதும் பொறியியல் துறையில் திறமைச்சித்தி அடைகின்ற தற்காலத்து மாணவர்கள் இங்கு பணியாற்ற விரும்பாது சிங்கப்பூர் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் அதிக சம்பளத்துக்கு வேலைக்குச் செய்வதாலும் வட மாகாணத்தில் பணியாற்றக்கூடிய சிறந்த பொறியியலாளர்கள் இல்லை.

அபிவிருத்தியை உள்வாங்கும் ஆற்றல் சிங்கள, முஸ்லிம் தலைவர்களுக்கு இருப்பதுபோல தமிழருக்கு இல்லாதிருப்பதே இத்தகைய பின்னடைவுகளுக்குக் காரணம் ஆகும். ஆனால் ஊழல் விடயத்தில் இவர்களே கைதேர்ந்தவர்களாக உள்ளனர். உலக வங்கியின் நிதி உதவியுடன் வடமாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட 'நெல்சிப்' திட்டம் இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

இனிவரும் தேர்தல்களின் போதாவது மாஓ சேதுங் குறிப்பிட்டதுபோல ஏழை

## ஆசிரியருக்கான கடிதம்

# யார் கவனிப்பார் எங்களை...?

இரண்டு வாரங்களுக்கு மேலாக உலாவரும் செய்தியாகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்த செய்தி இருக்கிறது. அதற்கான சங்கங்களும், அரசியல்வாதிகளும், பொதுநலன் கொண்டோரும் பல போராட்டங்களை நடத்துகின்றனர். உயர் மட்டங்களுடன் பேசிக்கொள்கின்றனர். வடக்குக் கிழக்கு அரசியல்வாதிகளும் இது தொடர்பில் பேசிக் கொள்கின்றனர். போராட்டம் நடத்துகின்றனர்.

பத்திரிகையில் அறிக்கை விடுகின்றனர். தோட்டத் தொழிலாளர்களும் மனிதர்களே. அவர்கள் விடயத்தில் அக்கறை காட்டுவதுபோல, வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற எம்போன்ற தொழிலாளர்களையும் (தனியார் நிறுவனத்தின் சுத்திகரிப்புத் தொழிலாளி) கவனத்தில் கொள்ளுங்கள். ஆயிரம் ரூபாவுக்குக் குறைவான சம்பளத்தைப் பெறுகின்ற பல ஆயிரம் வறியவர்கள் எம்மத்தியிலும் வாழ்கின்றனர். எம்மைத் தவிரத், தனியார் கடைகளில் பணிபுரிபவர்கள்(அதிகமாகப் பெண் பிள்ளைகள்), பாதுகாப்பு ஊழியர்களாகக் கடமை புரிவோர் எனப் பலர் இருக்கின்றனர்.

ஊழியர்களது சம்பள அளவுத்திட்டத்தைத் தொழில் திணைக்களத் தலைமையகம் வரையறுத்துள்ளது. கேள்விகோரலின்போது விலை குறைவாகக் கேட்பவர்களுக்கே அரச நிறுவனங்கள் உரிமத்தை வழங்குகின்றன. ஒப்பந்தகாரர்கள், தொழிலாளர்களுடன் பேரம் பேசிச் சம்பள அளவைக் குறைக்கின்றனர். ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்த முடியாமல் திண்டாடுகின்றனர். அவர்களுக்கு இலாபமும் கிடைப்பது இல்லை. ஆரம்பித்த தொழிலைவிட முடியாது திண்டாடுவதாகவும் கூறுகின்றனர். அரச நிறுவன அதிகாரிகள் கணக்காய்வாளர்களைக் காரணம் சொல்லுகின்றனர். அப்படியாயின் வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் ஊழியர்களுக்குச் சம்பளத்தைத் திருப்தியாகக் கொடுக்கக்க முடிகின்றதே? அதை அந்தந்த அதிகாரிகள் எப்படித் தீர்மானிக்கிறார்கள்?

வடக்கு மாகாணசபை ஆட்சி நடந்த காலத்திலும் இத்தகைய ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. தயவுசெய்து எங்களையும் ஒருகணம் உங்கள் சிந்தனையில் எண்ணுங்கள். நாங்களும் ஆயிரம் ரூபாவுக்குக் குறைவான ஊதியம் பெற்று உயிர்வாழ்கின்ற மனிதர்கள்தான்!

*ஜ.யசோதரதேவன், வவுனியா.*

# பெண்ணிய சமத்துவமும் விடுதலையும்!



ப.விஜயலட்சுமி

1792ஆம் ஆண்டில் அமெரிக்காவில் மேரி உல்ஸ்டன்க்ராப்ட் 'பெண்களின் உரிமைகளை நிறுவுதல்' என்ற நூலை எழுதி வெளியிட்ட காலத்தைப் பெண்ணியத் தொடக்க காலம் என்று நாம் கூறுவதாக இருப்பின், இற்றைக்கு நீண்ட 225 ஆண்டுகள் கடந்தும் பெண்ணியம் தொடக்கக் காலத்தில் முன் வைத்த அதே கோரிக்கைகளையும், தேவைகளையும் முன் வைத்து நகர்கிறது என்பது ஒரு கோட்பாட்டின் வளர்ச்சி என்று கூற முடியாது.

**கட்டமைப்பு**

பெண்ணியம் எங்கு தொடங்கியதோ அங்கேயே அதே நிலை முடிந்து வளர்ச்சியற்றது. ஆனால், உயிரோடு இருக்கிறது என்பதுதான் உண்மை. இவ்வாறு கூறியதால் பெண்ணியம் எதையும் சாதிக்கவில்லை என்ற பொருள் அல்ல. இன்னும் சஞ்சரிக்க வேண்டிய பாதைகள் நிறையவே இருக்கின்றன என்பதே இதன் பொருள்.

ஆண்மை,பெண்மை என்பவை உயிரியல் ரீதியானவை அல்ல. அது சமூக ரீதியில் கட்டமைக்கப்படுபவை என்னும் 'சீமோன் தெபூவா'வின் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டதாகினும் இந்தக் கட்டமைப்பை அதாவது, சமூக ரீதியான 'பெண்' கட்டமைப்பை முற்றிலும் அகற்றி, பெண்ணுக்கான சுயமான கட்டமைப்பை உருவாக்கப் பெண்ணியம் இன்னும் போராடவேண்டியுள்ளது.

'அடையாளம் என்று இயல்பிலேயே எதுவுமில்லை. அது கட்டமைக்கப்படுவதே' என்ற அமைப்பியலின் கண்டுபிடிப்பு அனைத்துக்கும் பொருந்துவதாகவே அமைகிறது.

இதனடிப்படையில் பெண் எவ்வாறு உடல், உளரீதியில் கட்டமைக்கப்பட்டுள்ளாள் என்பதைக் கண்டறிந்து அந்த ஒரே வகை மாதிரிகளை உடைத்து, பெண்களுக்கான சுய கட்டமைப்பை உருவாக்கப் பெண்ணியம் இன்னும் உழைக்க வேண்டியுள்ளது. இந்தப் புரிதல் தமிழில் பெண்ணிய ஆய்வாளர்களுக்கு இன்னும் சென்று சேரவில்லை என்பதுதான் அப்பட்டமான உண்மை. 'பெண்ணுக்கு எதிராகச் செய்யப்படும் கொடுமைகள், பிரச்சினைகள், சிக்கல்கள், புறக்கணிப்பு போன்றவற்றைத் தொகுத்துக் கொடுப்பதுதான் பெண்ணிய ஆய்வு' என்று புரிந்து கொள்ளப்பட்டு அதன் அடிப்படையிலேயே பல ஆய்வுகளும் செய்யப்படுகின்றன. பெரிய அணைக்கட்டில் விரிசல் வழியாக வெளியே ஒழுகும் நீரை வெளியில் இருந்து அடைக்க முனைவதை ஒத்த ஒரு முயற்சியாகும் இது. உண்மையான காரணத்தைக் கண்டறிந்து அதை நிவர்த்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**பெண்களின் இயல்பாளுமை**

பெண்ணானவள் உள அடிப்படையில், 'அச்சம், மடம், நாணம்' என்ற அமைப்பில் கட்டமைக்கப்பட்டுள்ளாள். அதாவது, அவள் இயல்பிலேயே அச்சம் உடையவளாக, எதையும் கண்டு பயப்படுபவளாக இருக்க வேண்டும். நாணம் அவளது அணிகலன். நாணமற்ற பெண்ணைச் சமூகம் பெண்ணாகக் கருதுவது இல்லை. இவற்றில் மிக முக்கியமான அடுத்த குணம் என்பது 'மடம்' அதாவது, அறிவார்த்த அடிப்படையில் அவள் முட்டாளாக, தெரியாதவளாக, பிறர் சொல்லித் தெரிந்து கொள்பவளாக, சொந்தமாகச் சிந்திக்கத் தெரியாதவளாக, முடிவெடுக்க இயலாதவளாக, நெடுநோக்கு அற்றவளாகக் கட்டமைக்கப்பட்டுள்ளாள்.

இந்த மூன்று பெருஞ்சுவர்களை அல்லது தடைகளை இன்றும், படித்து வேலைக்குப் போகும் சிந்தனை செய்யும் பெண்களால் கூடக் கடக்க முடிவதில்லை அல்லது போராட வேண்டியுள்ளது என்பதே யதார்த்தம். 20 ஆம் நூற்றாண்டின் கல்வி வளர்ச்சியின் காரணமாகப் பல பெண்கள் கல்வி கற்று சிந்தனையாளர்களாகப் பெரும் பதவி வகிப்பவர்களாக வளர்ந்த போது, சமூக அறிவு மையத்தில் பெண்ணின் இருப்பு ஆங்காங்கே தென்படத் தொடங்கியது.

**அடிமைத்தனத்தில் இருந்து மீண்டெழுவோம்!**

பொதுக்கல்வி மட்டங்களிலும், உயர்கல்வித் துறைகளிலும் பெண்களின் எண்ணிக்கை ஆண்களை விடக் கூடுதலாக ஆனது. 'மனப்பாட நிலையினர்' என்று தொடக்கத்தில் கேலி செய்து பெண்களை ஒதுக்கியவர்கள் கூட இன்று பொது வேலைவாய்ப்புகளிலும் பெண்கள் முன்னிலையில் இருக்கும் நிலை கண்டு சற்று விழிப்படைந்துள்ளனர்.

> என்னதான் அறிவார்ந்தவளாக இருப்பினும் அவள் உடல் அளவில் பலவீனமானவள். அவள் பிச்சைக்காரனான ஒரு ஆணைக் கூட அஞ்சி நடக்க வேண்டிய்வள் என்பது இந்த வன்புணர்ச்சிகள் சமூகத்துக்கு குறிப்பாகப் பெண்ணினத்திற்குத் தரும் பாடம்.

பெண்ணை அடக்கி ஆளப் பயன்படுத்தப்பட்ட 'மடம்' என்ற ஆயுதம் இன்று, பழுதுபட்ட நிலையில் இனி அறிவின்மையைக் கூறிப் பெண்ணை ஆளமுடியாது என்பதையும், அவளோடு போட்டியிட்டுக் கல்வி வட்டத்தில் அல்லது வேலைவாய்ப்புகளில் வெற்றி பெற்றுத் தனது ஆளுமையை எல்லா ஆண்களும் நிலைநாட்டுவது கடினம் என்பதையும் உணர்ந்த ஆண் ஆதிக்க சமூகம், ஏனைய இரண்டு ஆயுதங்களான அச்சம், நாணம் இவற்றை மிக வக்கிரமாகப் பயன்படுத்தி வருகிறது.

பெண்ணை அறிவால் வெல்ல முடியாது. அவளை உடல் பலத்தால் வென்று அடக்குதல் அதாவது, உடல் அடிப்படையில் ஆணுக்கு வலிமையும் பெண்ணுக்கு மென்மையும் ஆரம்ப காலந்தொட்டே கட்டமைக்கப்பட்டுள்ளதால் இந்த மென்மையைத் தாக்கி அச்சமூட்டிப் பெண்ணை இரண்டாம் நிலையிலேயே தக்க வைத்தல் என்பதுதான் 21 ஆம் நூற்றாண்டின் ஆணாதிக்கக் கருத்தியல்.

பல வடிவங்களில் இந்தக் கட்டமைப்பு சமூகத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இன்று பெருகி வரும் வன்புணர்வுகள் இதற்கு ஓர் உதாரணம். வன்புணர்வுக்கு உட்படுத்தபட்ட பெண்களில் அதிகப்படியானவர்களும் அறிவார்ந்த பெண்கள் என்பது குறிப்பிடத் தகுந்த செய்தியாகும். என்னதான் அறிவார்ந்தவளாக இருப்பினும் அவள் உடல் அளவில் பலவீனமானவள். அவள் பிச்சைக்காரனான ஓர் ஆணைக் கூட அஞ்சி நடக்க வேண்டியவள் என்பது இந்த வன்புணர்வுகள் சமூகத்துக்குக் குறிப்பாகப் பெண்ணினத்துக்குத் தரும் பாடம். பெண்களின் உள்ளக்கட்டமைப்பு, 'அச்சம், மடம், நாணம்' என்றிருப்பின் உடல் கட்டமைப்பு யதார்த்தத்துக்குப் புறம்பானதாகவே உள்ளது.


'கனத்த முலைகள் சிறுத்த இடை, பெருத்த பிட்டம், தடித்த தொடை, மெலிந்த தோள்கள் மென்மையான வாகு' என்பதே அழகான பெண்ணின் அங்க அடையாளங்கள். இதற்கான உதாரணங்களைப் பழங்கால இலக்கிய வருணனைகளிலும், சிற்ப ஓவியங்களிலும் காணலாம். இந்த உடல் கட்டமைப்பு இன்றைய ஊடகங்கள் வரை தொடர்கிறது என்பதைக் கவனித்தால் புரிந்து கொள்ள இயலும்.

பெண்ணின் பாதங்களுக்கு ஓடிக் களைத்த நாயின் நாக்கை உவமை கூறி மகிழ்ந்த தந்தைவழிச் சமூகம் ஆணின் தோளுக்கும் வலுவான கைகளை மட்டும் வருணனை செய்ததன் பின்னணியைச் சிந்திக்க வேண்டும். நுகர்பொருளான பெண் உடலைச் சுமந்து திரிவதற்கு மட்டுமே அவளுக்கு உரிமை உள்ளது. அந்த உடல் அவளுக்குச் சொந்தமானதல்ல. எதிர்காலத்தில் அவ்ளை மணக்கும் ஆடவனுக்குச் சொந்தமானது. அந்த ஆடவனுக்காக அவள் தனது விலைமதிப்பற்ற நுகர்பொருளான உடலைத் தூய்மையாக, புனிதமாகப் பர்துகக்க வேண்டும். அதில் தவறினால் அவள் சமூக மதிப்பீடுகளில் இருந்து நீக்கப்படுவாள். 'பொதுமகளிர்' என்று முத்திரை குத்தப்பட்டு ஆண்களின் காம இச்சை போக்கும் கருவியாகப் பயன்படுத்தப்படுவாள். எனவே 'உடல் புனிதம்' என்பது பெண் உடலுக்கு வகுக்கப்பட்ட முக்கியமான கட்டமைப்பாகிறது.

**புதுமைப் பெண்களாக மாற்றம் பெறுவோம்!**

தந்தை வழிச் சமூகத்தின் இந்தப் பெண் உடல் கட்டமைப்பை உணர்ந்து கொண்ட பெண்ணிய எழுத்தாளர்கள், முதலில் பெண் உடல் புனிதத்தை உடைத்து, பெண் உடல் பெண்ணுக்குச் சொந்தமானது. அதை அனுபவிக்கும் உரிமை பெண்ணுக்கு மட்டுமே சொந்தமானது என்று நிறுவினர். அதன் அடிப்படையிலேயே பெண்ணின் உடல்மொழிக் கவிதைகள் ஏராளம் வெளிவந்தன.

அச்சம், மடம், நாணம், உடல் புனிதம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் பெண் அனைத்து இடங்களிலும் ஒடுக்கப்படுகிறாள். இந்தக் கட்டமைப்பால்தான் பெண் சார்ந்து வாழ வேண்டியுள்ளது. இந்தச் சார்புத் தன்மை அவளை இரண்டாம் இடத்துக்குத் தள்ளி விடுகிறது. பெண்ணியத்துக்கு ஆதரவாளிக்கும் அனைவரும் இந்த மூலகாரணத்தைப் புரிந்து கொண்டு இதிலிருந்து எவ்வாறு வெளிவரலாம் என்று சிந்தித்துச் செயல்பட வேண்டும். அனைத்துப் பெண்ணியச் சிக்கல்களுக்கும், பெண்களுக்கு எதிரான கொடுமைகளுக்கும் இந்தக் கட்டமைப்புத் தான் காரணம் என்பதை உணர வேண்டும். பெண்ணிய ஆய்வுகளும் சிந்னைகளும் இத்தகு பெண் கட்டமைப்பை உடைக்க வழி வகை செய்வதாக அமைய வேண்டும். அவ்வாறு நடந்தால் மட்டுமே பெண் விடுதலை, சமத்துவம் என்ற கனவுகள் நனவாகும்.



சிலந்தி™@NANDHU_TWITTS

மகன் சாப்பிட்ட பிறகே தான் சாப்பிடும் அன்னை, மகன் சாப்பிட்டானா இல்லையா? என்பதறியாது எத்தனை நாள்கள் விரதமிருந்தாளோ..??

முதியோர் இல்லத்தில்..!!

## இன்றைய நாள்

**மேடம்:** நலம் விரும்புவரின் உதவி எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். தாராள அளவில் பண வரவு பெறுவீர்கள்.

**இடபம்:** பொறாமை குணமுள்ளவர்கள் குறை சொல்வர். தொழில் வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். குடும்பச் செலவு அதிகரிக்கும். சொத்து ஆவணம் பிறர் பொறுப்பில் கொடுக்கக் கூடாது. பெண்கள் உடல்நலம் பேண வேண்டும்.

**மிதுனம்:** மனதில் ஒருமுகத் தன்மையுடன் பணிபுரிவது அவசியம். எவரிடமும் வீண் விவாதம் கூடாது. தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவை.

**கடகம்:** மனதில் அன்பும் கருணைத் தன்மையும் அதிகரிக்கும். தன்னைச் சார்ந்தவர்களுக்கு உதவுவீர்கள். தொழில் வியாபாரம் சிறப்பான முறையில் இருக்கும். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு.

**சிங்கம்:** உதவி பெற்றவர் நன்றி மறந்து செயல்படுவர். தொழில் வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** இஷ்ட தெய்வ அனுகிரகம் புதிய நன்மைகளை பெற்றுத் தரும். தொழிலில் உருவான தாமதம் விலகும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். உடல் நல ஆரோக்கியம் பலம் பெறும்.

**துலாம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணப் பரிவர்த்தனையில் பாதுகாப்பு அவசியம்.

**விருச்சிகம்:** வாழ்வில் முன்னேற புதிய வழி பிறக்கும். பிறர் வியக்கும் வகையில் பணிகளை மேற்கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். உபரி பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** இனிய பேச்சு நண்பரின் மனக் கஷ்டம் தீர உதவும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அபரிமிதமான வளர்ச்சி பெறும்.

**மகரம்:** பணிகள் நிறைவேற கூடுதல் கவனமும் உழைப்பும் அவசியம். தொழிலில் உருவாகிற இடையூறை நண்பரின் உதவியால் சரிசெய்வீர்கள்.

**கும்பம்:** வீணாக பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழிலில் உருவாகிற இடையூறு சரி செய்வதால் உற்பத்தி விற்பனை சீராக இருக்கும்.

**மீனம்:** நண்பரிடம் ஆன்மிக கருத்துக்களை பேசுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை இலக்கு குறித்த காலத்தில் நிறைவேறும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.



# தீபாவளிக்கு தொலைக்காட்சியில் '96' படம்

## கொந்தளித்த த்ரிஷா

பிரேம்குமார் இயக்கத்தில் முதல்முறையாக விஜய் சேதுபதியும் த்ரிஷாவும் ஜோடியாக நடித்த '96' படம் அண்மையில் வெளியாகி பெரு வெற்றி பெற்றது. இந்தப் படம் திரையிடப்பட்ட திரையரங்குகளில் காதலர்கள் கூட்டம் கூட்டமாக இன்னமும் வந்து படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில், தீபாவளி நாளில் இந்த படத்தை 'சன் தொலைக்காட்சி' வெளியிடப் போகின்றது. இதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று த்ரிஷா கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கு இரசிகர்களிடையே பெரும் ஆதரவு கிடைத்துள்ளது.













## சிந்தித்த போது....


இன்றைய சூழலில் கல்வியின் பரப்பு எந்த அளவுக்கு அதிகரித்துள்ளதோ.. அந்த அளவுக்கு அறியாமையின் பரப்பும் விரிவடைந்துள்ளது!

கடவுள்-பேய்-ஆவி-பிசாசு-மூடநம்பிக்கைகள் ஆகியன இன்னும் நம்மிடம் உள்ளன..

சிந்தித்தபோது...
கல்வி மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்திக் காட்டியது!
பணம் குறித்துச் சிந்தித்தபோது..
கல்வி மனிதனை விலங்காக்கியது!

குடும்பச்சூழல், வறுமை, அறியாமை எனப்பல காரணங்கள் சொல்லப்பட்டாலும்..
கல்வி கற்போர் வீதம் இன்னும் ஏற்றத்தாழ்வுடனேயே இருந்துவருகிறது.

கல்வி வணிகமாகிவிட்ட இந்தச் சூழலில் கல்வி கற்று அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில் பலரும் கல்விச்சாலைகளில் சேர்வதில்லை..



# பருப்பொருளின் நுண்ணணுவியல்

இதழிகா


பருப்பொருளின் நுண்ணணுவியல் அலகுகள் மிகவும் சூட்சுமமான அமைப்புகளாகவும், இரட்டைத் தன்மை கொண்டனவாகவும் உள்ளன. நாம் அவற்றை பார்க்கின்ற பார்வையைப் பொறுத்து சில சமயங்களில் துகள்களாகவும், சில சமயங்களில் அவை அலைகளாகவும் தோன்றுகின்றன. இதே இரட்டைத்தன்மை மின்காந்த அலைகளாகவும், துகள்களாகவும் தோற்றம்கொள்கின்ற ஒளியினாலும் வெளிக்காட்டப்படுகிறது.

பருப்பொருளின் இந்த இரட்டைப் பண்பினை இதுவரை இயற்பியல் அறிந்திருக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே ஒரே சமயத்தில் துகள்களாகவும், அலைகளாகவும் வெளிப்படுத்திக் கொள்ளும் ஒன்றாக இருப்பது இயற்பியல் துறைக்குப் புதுமையாக இருந்தது. இந்த முரண்பாடுகள் கொவான் போன்ற புதிர்கள் எழுவதற்கு வழிவகுத்தன. இறுதியாகக் குவாண்டம் கொள்கையை வடிவமைப்பதில் நிறைவுற்றன. இது மேக்ஸ் பிளான்க் என்கிற விஞ்ஞானியின் கண்டுபிடிப்பால் சாத்தியமானது. அவர் வெப்ப ஆற்றல் தொடர்ச்சியாக வெளிப்படுவதில்லை என்றும், ஆற்றல் பொட்டலங்களாகவே வெளிப்படுகின்றன என்றும் கண்டறிந்தார். இத்தகைய ஆற்றல் பொட்டலங்களே குவாண்டங்கள் என்றழைக்கப்பட்டன.

**துகள் மற்றும் அலை நிலை**

பருப்பொருள் ஒரு சமயத்தில் துகள்களாகவும், அலைகளாகவும் மாறிமாறி இயங்கிக் கொண்டிருக்கின்றது. இங்கு பருப்பொருள் என்பது ஒரு வரையறுக்கப்பட்ட பண்புகளைப் பெற்றிருக்கிறது என்ற பாரம்பரிய நம்பிக்கை கேள்விக்குறியானது. இது ஒரு நிச்சயமற்ற தன்மையைக் காட்டியது. அவ்வாறு பருப்பொருளானது துகள்களாக இருப்பதற்கும் அலைகளாக இருப்பதற்கும் சாத்தியக்கூறுகள் மட்டுமே இருந்தன. ஆகவேதான் அவை ஒரே சமயத்தில் அலைகளாகவும், துகள்களாகவும் இருக்கின்றன. இவை கணித நிகழ்திறன் என்ற விதியை அடிப்படையாகக் கொண்டு நிகழ்கின்றன என்று உணரப்பட்டன.

உண்மையில் விஞ்ஞான அறிவின் அடித்தளம் எப்பொழுதுமே திடமானதாக இருந்ததில்லை. பலமுறை மாறியுள்ளது. தலையாய விஞ்ஞானப் புரட்சிகள் நிகழ்ந்த போதெல்லாம் விஞ்ஞானத்தின் அடித்தளம் சரிந்து வந்துள்ளது. விஞ்ஞான வரலாறு முழுமையுமே மீண்டும் மீண்டும் அறிவினுடைய அடித்தளம் மாறிக் கொண்டே வந்துள்ளது. சில சமயங்களில் முற்றாகத் தகர்க்கப் பட்டுள்ளது. விஞ்ஞானத்தின் தற்போதைய புதிய கருத் தோட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றமும் அத்தகையதோர் உணர்வையே ஏற்படுத்துகின்றது.




**இயற்கை நிகழ்வுகள்**

இயற்கையானது மனிதப் பார்வையாளனையும் ஒருங்கிணைந்ததோர் உட்கூறாக உள்ளடக்கிய உள்ளார்ந்த இணைப்புக் கொண்ட உறவுகளின் இயக்கபூர்வமான வலைப் பின்னல் என்று கருதப்படுகிறது. இந்த வலைப்பின்னலின் ஒவ்வோர் அங்கமும் ஏனைய அங்கங்களைப் போலவே உறுதியான வடிவங்கள். இந்தக் கருத்தின்படி இயற்கை நிகழ்வுகள் எந்த ஓர் அங்கத்திற்கும் ஏனைய அங்கங்களைக் காட்டிலும் அடிப்படையானது என்கிற கருத்துக்கு இடமளிக்காத வகையில் கருத்தாக்கங்களின் வலைப்பின்னல் என்கிற அடிப்படையில் விவரிக்கப்படுகின்றன.


விஞ்ஞானத்தில் முற்றும் முடிந்த உண்மை என்று எதுவும் இல்லை. விஞ்ஞான விதிகள் எல்லாம் குறைபாடுடையனவாகவும், தோராயமானவையாகவுமே இருக்கின்றன. இத்தகைய தோராயமான விளக்கங்கள் அடுத்தடுத்த முயற்சிகளில் காணப்படும் அடுத்தடுத்த முன்னேற்றங்களால் செழுமைப்படுத்தப்படுகின்றன. இருப்பினும் அந்த மாதிரி முன்னேற்றங்கள் பாரதூரமான மாற்றங்களைக் கொண்டுவருவதில்லை.

ஒவ்வொரு புதிய கொள்கையும் முந்தைய கொள்கையோடு நன்கு வரையறுக்கப்பட்ட விதத்தில்தான் தொடர்புறுத்தப்படுகின்றது. புதிய கொள்கைப் பழையக் கொள்கையை முற்றிலும் மறுத்தலிப்பதில்லை. அதில் நிலவும் உண்மைத் தன்மை செழுமைப்படுத்தப்படுகின்றது. அவ்வள்வுதான். எடுத்துக்காட்டாக குவாண்டம் இயந்திரவியல், நியூட்டனின் இயந்திரவியலை முழுமையாகத் தவறென்று நிரூபித்து விடவில்லை. நியூட்டனின் கால இயற்பியலோர் எல்லைக்குட்பட்டது என்று மட்டுமே நிறுவியுள்ளது.

நியூட்டனின் கண்டுபிடிப்பு பேரண்டத்தின் சீரான ஒழுங்கமைப்பைப் பற்றிக் கூறுகின்றது.

இந்த அடிப்படையைக் குவாண்டம் இயந்திரவியலிலோ, சார்பியல் கொள்கையிலோ மறுதலித்துவிடவில்லை.

மாறாக உறுதிப்படுத்தப்பட்டு புதிய கொள்கைகளாக வளர்த்தெடுக்கப்படுகின்றன. பேரண்டத்தின் அடிப்படையான ஒற்றை நிலை மற்றும் உள்ளார்ந்த சார்புத் தன்மை, அதனுடைய இயற்கை நிகழ்வுகளின் உள்ளார்ந்த இயக்கபூர்வமான தன்மை ஆகிய நவீன இயற்பியலின் இவ்விரு மாபெரும் மையக் கருத்துக்கள் எதிர்கால ஆய்வுகளால் என்றுமே மறுத்தலிக்கப்படமாட்டா.




**மரபுரீதியான கருத்து!**

குவாண்டம் கொள்கையானது திடப்பொருள் குறித்த மரபுரீதியான கருத்தாக்கங்களை உடைத்தெறிந்தது. மரபுவழியான இயற்பியல் 'திடமான பருப்பொருள்" என்ற தீர்மானகரமான கொள்கையை வரையறுத்தது. ஆனால் நவீன இயற்பியல் 'சாத்தியக் கூறுகளுள்ள அலை' போன்ற கொள்கையை உருவாக்கியுள்ளது. உலகம் என்பது தனித்துவமான, 'அடிப்படைக் கட்டுமானக் கற்களால்' ஆனது என்பதை இது மறுதலிக்கிறது.

**கட்டமைப்பை அறிதல்!**

அணுக் கருவுக்குள் செய்யப்பட்ட பரிசோதனைகளின் விளைவாக ஏராளமான நுண்துகள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இது அணுவின் அடிப்படைத்துகள் என்ற கொள்கையை நீர்த்துப் போகவைத்தது. இதைத் தொடர்ந்து அணுக்கரு நிகழ்வுகளை ஆராய்வதற்கு குவாண்டம் கொள்கை போதுமானதாக இல்லை என்று உணர்ந்த விஞ்ஞானிகள் சார்பியல் கொள்கையைத் துணைக்கழைத்தனர்.

குவாண்டம் கொள்கையானது அணுக்கருவின் வடிவமைப்பைப் பற்றியும் அணுக்கருவிலுள்ள துகள்களுக்கிடையேயான உள்வினைகள் குறித்தும் ஆராயப் பயன்பட்டது. அதே போல அணுக்கரு விசையின் தன்மையைப் பற்றியும், அதன் சிக்கல் மிகுந்த வடிவத்தைப் பற்றியும் ஆராயச் சார்பியல் கொள்கை பயன்பட்டது. இவ்வாறாக குவாண்டம் கொள்கையும் சார்பியல் கொள்கையும் சேர்ந்து துகள்கள் குறித்து ஒரு முழுமையான கொள்கையாக உருவாக்கப் பட்டுள்ளன.

பிரபஞ்சம் முழுமையுமே பிரிக்க முடியாத ஆற்றல் படிவங்களாலான இயக்க பூர்வமானதொரு வலைபோலக் காட்சியளிக்கிறது. அவை அனைத்தும் பருப்பொருளின் அடிப்படையான ஒற்றை நிலையையும், உள்ளார்ந்த இயக்கவியல் பண்பையும் பிரபலிக்கின்றன. எனவே துகள்களை தனித்துவமானதோர் அமைப்பாக காண முடியாது. முழுமையோடு ஒருங்கிணைக்கப்பட்டதொரு பகுதியாகவே புரிந்து கொள்ளக் கூடும்.

**இயற்கையை விளங்கிக் கொள்ளல்**

புறநிலையில் நிகழும் ஒரு நிகழ்வை அல்லது இருக்கும் பொருளை நோக்கும் வேறுபட்ட தனிநபர்கள் வெவ்வேறாகப் பார்க்கின்றோம், உணர்கின்றேரம். புறநிலை என்பது ஒன்றுதான். புறநிகழ்வு என்பது ஒன்றுதான். ஆனால் அதை உற்று நோக்கும் எல்லோரும் ஒரே மாதிரியாக, அந்த ஒன்றாக அப்படியே உணர்வதில்லை. உள்வாங்கிக் கொள்வதில்லை. இதற்கான காரணம் என்னவென்றால் அவர்களின் நோக்கம், விருப்பம், கவனம், திறன் ஆகிய அகநிலை அம்சங்கள் வேறுபட்டிருப்பதுதான். ஆக, வேறுபட்ட அகநிலை அம்சங்கள் உடைய மனிதர்கள் புறநிலையை ஒரே மாதிரியாகப் பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை என்பது இதிலிருந்து புலனாகின்றது.

அதுமட்டுமின்றி ஒவ்வொருவரும் சில நம்பிக்கைகளைக் கொண்டிருக்கின்றனர். ஒருவரது உணர்ந்தறியும் தன்மையானது அப்பொருள் குறித்து அவர் கொண்டிருக்கும் நம்பிக்கையினால் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. நாம் அனைவருமே வெவ்வேறு வகையில் நம்பிக்கைகள் கொண்டிருப்பதால் எமக்கு இவையாவும் வெவ்வேறாகவே உணர்ந்தறியப்படுகின்றன. சான்றாக, கற்கால மனிதன் ஒரு மரத்தைப் பார்ப்பதாக கற்பனைச் செய்துகொள்வோம். அவரோடு உங்களது உணர்வை ஒப்பிட்டுப் பாருங்கள்; மேலும் ஒரு பயிற்சி பெற்ற தாவரவியல் அல்லது உயிரியல் விஞ்ஞானி உணர்வையும் ஒப்பிட்டுப் பார்க்கமுடியும்.

உண்மையிலேயே இந்த மூன்று நபர்களும் மூன்று விதமாக விவரிப்பதை எளிதில் அறியமுடியும். இத்தகைய வேறுபாடுகள் ஒருவேளை உணர்தலில் உள்ள வேறுபாடுகளைப் பிரதிபலிக்கின்றன. ஒருவரின் உணர்வுகள் அவர் கொண்டிருக்கும் உறுதியான நம்பிக்கையின்பாற்பட்டதாகும். அவர் கொண்டிருக்கும் நம்பிக்கையின் பின்னணியில் அவரது உணர்வுகள் வடிவமைக்கப்படுகின்றன என்றால் அது மிகையாகாது. ஆக, அனைவரது உணர்வுகள் அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைகளினால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய கருத்துரையானது புறநிலையாக நின்று ஆராயும் அறிவியல் அணுகுமுறையை முற்றிலும் புறந்தள்ளி விடுகின்றதா? என்ற கேள்வியை எழுப்புகின்றது.

**இயற்பியல்**

குவாண்டம் இயற்பியலின்படி பார்ப்போனையும், பார்க்கப்படும் பொருளையும் பிரிக்கமுடியாது. இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. ஆக, குவாண்டம் இயற்பியலானது அகநிலையும், புறநிலையும் இணைத்து விடுகின்றது. இவ்வாறாக ஆய்வாளன் என்பவன் ஆராய்ச்சிச் செயல்முறைகள் என்கிற சங்கிலித் தொடரிலிருந்து பிரித்தெடுக்க இயலா வண்ணம் இறுதிப்பிணைப்பாக இணைந்து விடுகின்றான். இயற்கையை புறநிலையில் மட்டும் நின்று விவரிப்ப தும், விளக்குவதும் இனி இயலாத காரியமாகிவிட்டது. இதுவரை ஆராய்ச்சியாளனுக்கும், ஆராயப்படுகிற உலகினுக்கும் இடையே ஓர் இணைக்கமுடியாத பிரிவினை கடைபிடிக்கப்பட்டது. இந்த அணுகுமுறையைக் குவாண்டம் அணுவியல் ஆய்வுகளில் இனிக் கையாளவியலாது என்று கூறப்படுகின்றது. இவ்வாறாக விஞ்ஞான ஆராய்ச்சியில் அகநிலையும் புறநிலையும் இணைந்தே நிற்கின்றன





## இது புதுசு

பெண்களுக்கான புதிய வடிவிலான தோற் பைகள் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.



# கல்லீரலுக்கு பலம் தரும் மணத்தக்காளி கீரை

மணத்தக்காளிக் கீரையை நாம் அன்றாடம் உணவில் பயன்படுத்துவதன் மூலம் உணவாகவும், மருந்தாகவும் பயன்தருகிறது. அதேபோல்மேற்பூச்சுமருந்தாகவும்பயன் தருகிறது. தோல் நோய்களின் தொல்லைகளில் இருந்து விடுபட உதவுகிறது.

மலச்சிக்கலைப் போக்குகிறது. இதன் காய்களை வற்றலாக்கி அதை உண்பதன்மூலம்நீரிழிவுநோய்க்கும்மருந்தாக மணத்தக்காளி பயன்தருகிறது. குருதி அழுத்தத்தை இதுதணிக்கிறது. ஈரலுக்குவலுத்தரக்கூடியதாகவும்மணத்தக்காளி விளங்குகிறது.

மண்ணீரலுக்கும் இது மருந்தாகிறது. நுண் கிருமிகளை அழிக்கும் திறன் கொண்டதாகவும் மணத்தக்காளி பயன் தருகிறது. நோய் கிருமிகளை எதிர்க்கும் தன்மை கொண்டதாக, நோய் கிருமிகள் வராமல் தடுக்கக் கூடியதாக மணத்தக்காளி வேலை செய்கிறது.

கல்லீரலை பலப்படுத்தக் கூடிய, குடற்புண்ணை ஆற்றக் கூடிய மருந்தை மணத்தக்காளியைப் பயன்படுத்தி தயார் செய்யலாம். இது உடலுக்குக் குளிர்ச்சிதரக்கூடியஓர் உணவாகவும் அமையும்.

அவ்வப்போது மணத்தக்காளியை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம்மஞ்சள்காமாலைநோய் எம்மைஅண்டுமோ என்ற அச்சம் இல்லாமல் இருக்கலாம். கல்லீரலுக்கு பலம்தருவதால்மஞ்சள்காமாலைவராமல்இதுதடுக்கிறது.

மஞ்சள் காமாளை தாக்கம் கொண்டவர்களும் இதை அன்றாடம் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் மஞ்சள் காமாளை படிப்படியாக மறைந்து போகச் செய்கிறது. அதே போல் மணத்தக்காளி வற்றலை பயன்படுத்தி சளிக்கான மருந்தை தயார் செய்யலாம். இது சுவையின்மையை போக்கக் கூடியதாக, பசியைத் தூண்டச் செய்வதற்கும் பயன்படுகிறது.


வாய்ப்புண் உள்ளவர்கள், மணத்தக்காளிக் கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், வாய்ப்புண் மட்டுமின்றி, வயிற்றுப்புண்ணும் குணமாகும். ஏனெனில் வாய்ப்புண் உள்ளவர்களுக்கு வயிற்றுப்புண்ணும் இருக்கும்.

மலச்சிக்கலால் அவஸ்தைப்படுபவர்கள், மணத்தக்காளி கீரையைச் சாப்பிட்டால், இந்தப் பிரச்சினையில் இருந்து விடுபடலாம்.

செரிமான பிரச்சனை உள்ளவர்கள், மணத்தக்காளி கீரையைச்சாப்பிட்டுவந்தால், உடலுக்குவேண்டியசத்துக்கள் கிடைப்பதுடன், செரிமான பிரச்சினையும் நீங்கிவிடும். சிலர்தினமும்சரியாகசிறுநீர்கழிக்கமாட்டார்கள். அத்தகையவர்கள் மணத்தக்காளிக் கீரையைச் சாப்பிட்டு வந்தால், சிறுநீர் சீராக வெளியேறிச் சிறுநீரகத்தில் கோளாறு ஏற்படாமல் பாதுகாக்கலாம்.

முக்கியமாக ஆண்கள் மணத்தக்காளிக் கீரையை சாப்பிட்டு வந்தால், அவர்களின் விந்தணு வலிமையுடன் இருக்கும்.

# உடனடி ஆற்றலுக்கு வாழைப்பழம்



முக்கனிகளில் ஒன்று வாழைப் பழம். வாழைப் பழம் தமிழ் கலாசாரத்தோடு தொடர்புடையது. தெய்வ வழிபாட்டுக்கு வாழைப் பழத்தைப் படைக்கிறோம். திருமணம் போன்ற குடும்ப நிகழ்ச்சி களுக்குச் சீர் வரிசையாகக் கொண்டு செல்வதும் வாழைப் பழத்தைத்தான். அன்றே வாழைப் பழத்தின் மகிமையை முன்னோர்கள் அறிந்திருக்கிறார்கள் என்பதற்கு சாட்சியே இது. வாழைப் பழத்தில் நார்ச்சத்து, இயற்கையான சீனிசத்து, இரும்புச் சத்து, டிரிப்தோபன், புரோட்டீன், கார்போஹைட்ரேட், மக்னிசியம் உள்ளிட்ட பல்வேறு சத்துக்கள் உள்ளன. இவ்வளவு சத்துக்கள் கொண்ட அபூர்வமான பழமாக வாழைப் பழம் இருக்கிறது. வாழைப் பழம் உடலுக்கு உடனடியான ஆற்றலை தரக்கூடியது. சமீபத்திய ஓர் ஆய்வில் 2 வாழைப் பழம் உட்கொண்டால் 90 நிமிடங்கள் செயலாற்ற முடியும் என நிரூபணம் ஆகி உள்ளது. அதனால்தான் விளையாட்டு வீரர்கள் பலரும் உடனடி ஆற்றலுக்காக வாழைப் பழம் உட்கொள்கிறார்கள்.

# சிறுதானிய முருங்கைக் கீரை அடை



**தேவையான பொருள்கள் :**

கம்பு, கேழ்வரகு, சோளம், கொள்ளு, பாசி பயறு கால் கிலோ, குதிரைவாலி அரிசி, சாமை அரிசி, வரகு அரிசி கால் கிலோ, முழுகருப்பு, உளுந்தம்பருப்பு, கொண்டைக் கடலை 4 டீஸ்பூன், வெங்காயம், இஞ்சி, பூண்டு, முருங்கை கீரை, உப்பு, நல்லெண்ணெய் தேவையான அளவு.

**செய்முறை :**

முருங்கைக்கீரையை நன்றாகச் சுத்தம் செய்துகொள்ளவும். வெங்காயம், இஞ்சியை பொடியாக நறுக்கி கொள்ளவும்.

கம்பு, கேழ்வரகு, சோளம், கொள்ளு, பாசி பயறு, உளுந்தம் பருப்பு, கொண்டைக்கடலை, குதிரை வாலி அரிசி, சாமை அரிசி, வரகரிசி இவை அனைத்தையும் நன்றாக கழுவி காலையில் முதல் மாலைவரை தண்ணீரில் ஊறவைக்கவும். ஊறியதும், இரவு ஒருவெள்ளைத்துணியில்கட்டிவைக்கவும். காலையில் முளை கட்டி இருக்கும் கலவையை இஞ்சி, பூண்டு, உப்பு, வெங்காயத்துடன் அரைத்துக்கொள்ளவும்.

தோசைக்கல்லை அடுப்பில் வைத்துச் சூடானதும் மாவை அடைகளாக ஊற்றி அதன் மேலே முருங்கைக் கீரையைத் தூவி சுற்றி சிறிது எண்ணெய் ஊற்றி வெந்ததும் திருப்பி போட்டு வேக வைத்து எடுக்கவும்.



# வல்லாரையின் மருத்துவப் பயன்கள்

மூலிகைச் செடிகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது வல்லாரை.

வல்லாரைச் செடியின் இலையை நிழலில் உலர்த்தி நன்குப் பொடித்து, பாலில்கலந்து தினமும் இரவுபடுக்கைக்குச்செல்லும் முன் குடித்தால் வயிற்றுப் பூச்சிகள் அழிந்துபோகும்.

வல்லாரை இலையைநன்குசுத்தம்செய்து, அதனுடன்சின்ன வெங்காயம், பூண்டு, மிளகு சேர்த்து சட்னியாக அரைத்து 48 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் மாணவ, மாணவிகளுக்கு ஏற்படும் மூளைச் சோர்வை நீக்கி, ஞாபக மறதியைக் குணமாக்கும். ஆனால்வல்லாரைச்சட்னியில்புளியைஅறவே தவிர்க்க வேண்டும். உப்பு சேர்த்துக்கொள்ளலாம்.

வல்லாரை இலையுடன் சம அளவு கீழாநெல்லி இலை சேர்த்து அரைத்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் நீர் எரிச்சல் தீரும்.


குழந்தைகளுக்குத் தினமும் 10 வல்லாரை இலைகளைப் பச்சையாகமென்றுசாப்பிடக்கொடுத்தால்மூளைநரம்புகள்வலுப் பெறும். தொண்டையில் ஏற்படும் அவஸ்தைகள் குறையும்.

வல்லாரை, குருதிச் சோகையைப் போக்கி குருதியில் ஈமோகுளோபின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

வல்லாரைப் பொடியைக் கொண்டு பல் துலக்கினால் பல்லில் உள்ள கறைகளைப் போக்கும். பல் ஈறுகளைப் பலப்படுத்தும்.

இளைப்பு, இருமல், தொண்டைக்கட்டு போன்றவற்றை வல்லாரை போக்கும். காசநோயாளிகளுக்கு வல்லாரை சிறந்த மருந்தாகும்.

வல்லாரை, கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல் போன்றவற்றைப் போக்கி கண் நரம்புகளுக்கு நன்மை அளிக்கும்.



## தண்டிக்க...

அனுராதபுரத்தில் முன்னாள் இராணுவத்தினருக்கான பூசை வழிபாடுகளில் பங்கேற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த அரசு இராணுவத்துக்கு எதிராக நடவடிக்கை எடுத்தது. அவர்களைத் தண்டிக்கச் சில சட்டங்களை நிறைவேற்றியிருந்தது. அந்தச் சட்டங்கள் இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்பதே எனது வழிபாடுப் பிரார்த்தனை. இந்த அரசு அதனை நிச்சயம் செய்யும் என்று நினைக்கின்றேன்.


இந்த அரசு குறுகியகால இடைக்கால அரசு மட்டுமே. மக்கள் ஆணையைப் பெற்றே அரசு அமைக்கவேண்டும். இந்த இடைக்கால அரசில் நான் பதவிகளைப் பொறுப்பேற்க மாட்டேன்.

கட்சி தாவுவதற்கு பணம் வழங்குவதாக குற்றம் சுமத்தப்படுகின்றது. மகிந்த ராஜபக்சவை அரச தலைவர் தேர்தலில் தோற்கடிப்பதற்கு, 400 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டதையும் நினைவில் வைத்திருக்க வேண்டும் என்றார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம், பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக அறிவிக்கும் சட்டம் உள்ளிட்ட சட்டங்கள் கடந்த அரசின் காலத்தில் நிறைவேற்றப்ப ட்டிருந்தன. இந்தச் சட்டங்கள் இராணுவத்தினரை தண்டிப்பதை நோக்காக வைத்தே கொண்டு வரப்பட்டன என்று கோத்தபாய கடந்த காலங்களில் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5,61)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 04.11.2018 | வெற்றி வாரம் 2394 | வர்ணம் ஊதா
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 16 35 49 52
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 658, 216/=
2018.11.06 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்



பிறப்பு 29 . 10 . 1933

இறப்பு 04 . 11 . 2018

### சின்னையா துரைசிங்கம்

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா துரைசிங்கம் நேற்று (04.11.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீற்றாசரஸ்வதியின் அன்புக் கணவரும், கிரியா, பவானி, துஷ்யந்தி, காலஞ்சென்றவர்களான தயாளன், அமலதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான மனோறஞ்சித், சுமணபாலா மற்றும் றஞ்சித் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிதா, நளின் (ஆஸ்திரேலியா), நந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், சஹன்யா, சஜிக்கன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.11.2018) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் புனித லிகோரியார் ஆலய மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியமாவடி லேன்,
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்.

021 227 0272

## ஐ.தே.க...

அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து இதுவரை 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவியுள்ளார்கள். ஐக்கிய தேசியக் கட்சியை உள்ளடக்கிய ஐக்கிய தேசிய முன்னணியில் 106 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்த நிலையில் தற்போது 99 நாடாளுமன்ற உறுப்பினர்களே அந்தக் கட்சியில் உள்ளனர். (5)

## வடக்குப்...

மாறு வடக்கு மாகாண ஆளுநர் குரே பணித்தமைக்கு அமைய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இன்றைய பாடசாலைத் தினத்துக்குப் பொருத்தமான தினத்தில் பாடசாலை அதிபர்கள் பதில் பாடசாலையை நடத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தீபாவளிக் கொண்டாட்டங்களில் ஈடுபடும் வசதியாக இந்த விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

**பரிசுத் தினம் நடக்கும்**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பரிசுத் தினம் திட்டமிட்டபடி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்பதனால் மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஆளணியினர் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெறும் என்று வித்தியாலய அதிபர் கா.கணேசபாலேந்திரன் அறிவித்துள்ளார்.

**பிற்போடப்பட்டுள்ளது**

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த ஒளிவிழா பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த ஒளிவிழா பிற்போடப்பட்டுள்ளது. (ற-105,159)

## வியாழேந்திரன்

நிலையில், மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றும் இடம்பெற்றது.

ஐக்கிய தேசிய கட்சியின் கல்குடா அமைப்பாளர் ஜெகன், இளைஞர் அணித்தலைவர் கார்த்திக் மற்றும் பல முக்கிய உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டு தமது கண்டனத்தை தெரிவித்தனர். சலுகைக்காக கட்சி தாவிய வியாழேந்திரன் என்று கடுமையான கண்டனங்களை வெளியிட்டனர். வியாழேந்திரன் மட்டக்களப்பு மண்ணில் காலடி எடுத்து வைத்தால் செருப்பு மாலை அணிவிப்போம் என்றும் எச்சரிக்கை விடுத்தனர். 30 கோடிக்கு விலைபோன வியாழேந்திரன் இனியும் வேண்டாம், மட்டக்களப்பு மக்களின் மானத்தை போக்கிய அமலுக்கு செருப்பு மாலை அணிவிப்போம் போன்ற பதாகைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தார்கள். (5)

## மேலும்...

ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எங்களை ஆதரிக்கமாட்டோம் என்று தெரிவித்துள்ளனர். அவர்கள் எப்போதும் எங்களிற்கு எதிராகவே உள்ளனர். எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது பிளவுபட்டுள்ளதால் நாட்டை நேசிக்கும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சிலர் எங்களுடன் இணைவார்கள் என்றார். (5,61)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 877
சீட்டிழுப்பு திகதி 2018.11.03 சனிக்கிழமை
I 03 13 40 51
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,198,448/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## மரண அறிவித்தல்



மலர்வு 20 . 07 . 1932

உதிர்வு 04 . 11 . 2018

### திருமதி பரமேஸ்வரி கந்தையா

*(கந்தையா ரீச்சர் - இளைப்பாறிய கணித ஆசிரியை, யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்)*

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கந்தையா நேற்று (04.11.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் வள்ளியம்மை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை தெய்வானை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை கந்தையாவின் (ஆசிரியர், பாலாவோடை) அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம் (கணக்காளர், ஆஸ்திரேலியா), தேவரஞ்சிதம் (கால்நடை வைத்தியர்), யோகேஸ்வரன் (கணக்காளர்), மனோரஞ்சிதம் (இளைப்பாறிய ஆசிரியை), நடேஸ்வரன் (பொறியியலாளர் ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தாயாரும் மஞ்சுளா (இரசாயனவியலாளர்), சிவராமலிங்கம் (தொழில்நுட்பவியலாளர்), கணேஸ்வரி (ஆசிரியை), மனோகரன் (ஆசிரியர்), இந்திரா (உணவு தொழில்நுட்பவியலாளர்) ஆகியோரின் அன்பு மாமியும் பார்த்தீபன், மணிவண்ணன், பைரவி, பிரியாணி, ஜெயந், நிமலன், செந்தூரன், திவ்யா, மாதவன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, சிவசுப்பிரமணியம், பொன்னம்பலம் மற்றும் சரஸ்வதி (ஓய்வு நிலை அதிபர், ஆரம்பப்பிரிவு யாழ்ற்ரன் கல்லூரி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான A.S. ஆறுமுகம், பொன்னம்மா, யோகலிங்கம் மற்றும் யோகேஸ்வரி காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், செல்லம்மா, பர்க்கியம், பொன்னம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

075 627 3991,
011 236 1513


தகவல் :மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 363
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.11.04
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 101,289,128/-
N 12 19 39 41
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 424
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.11.04
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 66,265,700/-
வெற்றி இலக்கங்கள் 18 25 40 45 Q
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## மரண அறிவித்தல்

### கார்த்தியேசு சிறிதரன்



பிறப்பு 24.01.1975

இறப்பு 04.11.2018

கூழாவடி வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கார்த்தியேசு சிறிதரன் நேற்று (04.11.2018) ஞாயிற்றுக் கிழமை அகால மரணமானார்.

அன்னார் கார்த்திகேசு - கமலா்தேவி தம்பதிகளின் புதல்வனும் கேதஸ்மாலாவின் அன்புக் கணவரும் சற்பவதி சிந்துஜா, விதுஷாயினி ஆகியோரின் தந்தையாரும் சிறிகாந்தன், சிறிகுமார் குமுதினி, லலிதா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நற்செல்வம் - தங்கமுத்து தம்பதிகளின் மருமகனும் உதயன், பகவான், சுகந்தா, பிரதீபன், தீபா மற்றும் காலஞ்சென்ற வனிதா ஆகியோரின் மைத்துனரும் இந்திராதேவியின் பெறாமகனும் மகிந்தன், டிலக்ஷா, சயானா, மிதுன் ஆகியோரின் பெரியப்பாவும், யனுஷன், பமின்ஷன், கவிஷன், தஸ்வித், கரிஸ், அனுஷ்கா, நபீஷன், ஜனனி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2018) திங்கட்கிழமை பி.ப. 4.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் காக்கைதீவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர். (காந்தன்)

கூழாவடி வீதி, யாழ்ப்பாணம்.

077 650 0111

## மைத்திரி - மகிந்த...

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் இணைந்துமக்கள்படையைதிரட்டிவருவதாகத் தெரியவருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியினர் கடந்த 30ஆம் திகதி பெரிய போராட்டமொன்றை புதிய அரசுக்கு எதிராக முன்னெடுத்திருந்தினர். இதனையும்விட பன்மடங்கு மக்கள் தொகையை இன்று நடைபெறவுள்ள அரச ஆதரவு ஆர்ப்பாட்டத்தில் களமிறக்கும் நகர்வுகள் இடம்பெற்று வருகின்றன. கடந்த 26ஆம் திகதி தலைமை அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை த்லைமை அமைச்சராக நியமித்து புதிய அரசொன்றை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதிரடியாக அமைத்திருந்தார்.

அரச தலைவரின் இந்தச் செயற்பாடு உள்நாட்டில் மாத்திரமல்ல பன்னாட்டு அரங்கிலும் இலங்கையின் எதிர்காலம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்யப்படுமளவுக்கு அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. 2

இந்த நிலையில், தற்போது உருவாக்கப்பட்டுள்ள அரசுக்கே உள்நாட்டில் அதிகளவான மக்கள் பலம் உள்ளதாக எடுத்துக்காட்டுவதற்கு இன்று ஆர்ப்பாட்டமொன்று நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. நாட்டின் நாலாபுறமும் இருந்து ஒரு லட்சத்துக்கு அதிகமான மக்களை கலந்துகொள்ள வைப்பதே இவர்களின் நோக்கமாகவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் பசில் ராஜபக்ச தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (5,10)

## நாடாளுமன்றத்....

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, வவுனியாவிலும், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பிலும், மத்திய மாகாணத்தில் கண்டியிலும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

அரசமைப்புக்கு முரணாக புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்றமும் மக்கள் ஆணைக்கு விரோதமாக முடக்கப்பட்டுள்ளது. உடனடியாக நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டும் என்று போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி கிருஸ்ணன் ஆலயம் முன்றிலில் ஆரம்பமாகிய போராட்டம், மாவட்டச் செயலகம் வரையில் சென்று மீண்டும் ஏ9 வீதி வழியாக சென்று பழைய மாவட்டச் செயலகம் முன்பாக முடிவடைந்தது.

**வவுனியா**

வவுனியா தினச்சந்தைக்கு முன்னால் நடைபெற்ற போராட்டத்தில், மீண்டும் நாட்டை விற்காதே, நாங்கள் கேட்ட நல்லாட்சி இதுவா?, ஜனநாயகத்தை பற்றி பேசிய இலங்கையின் நெல்சன் மன்டேலா போன்ற பதாதைகளை தாங்கியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆர்ப்பாட்டத்தில் வவுனியா நகரசபை உறுப்பினர்களான லரிப், பாரி, ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் கருணாதாச, முகாமையாளர் சிவலிங்கம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு நகரில் உள்ள காந்தி சிலைக்கு அருகில் நேற்றுக் காலை போராட்டம் நடத்தப்பட்டது. ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்க வேண்டாம் என்று கோசம் எழுப்பினர்.

**கண்டி**

கண்டியில் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள், கண்டி நகரில் நேற்றுப் போராட்டம் நடத்தினர். லக்ஸ்மன் கிரியெல்ல, காமினி ஜயவிக்ரம பெரோ, சம்பிக்க ரணவக்க, தயா கமகே, லகீ ஜயவர்தன, ரஞ்சித் மத்தும பண்பார ஆகியோர் கலந்து கொண்டனர். (5,6,110)

## எங்கள்...

மக்கள் எனப் பலரும் அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். நேற்று மதியம் ஆரம்பித்த போராட்டம் இரவு வரையில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. பல்வேறு தரப்பினரும் சுழற்சி முறையில் கலந்து கொண்டிருந்தனர். நாட்டின் அரசமைப்பு மற்றும் நாடாளுமன்றச் சம்பிரதாயங்களை கவனத்தில் கொள்ளாது சட்டவிரோதமான முறையில் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டமை, நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டமை என்பவற்றைக் கண்டிந்தே இந்த ஆர்ப்பாட்டமும். ஊர்வலமும் நடத்தப்பட்டுள்ளது.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவுகின்றமைக்கு எதிராகவும் மக்கள் கோசங்கள் எழுப்பினார்கள். 'போகாதே போகாதே. கோடிகளுக்குப் போகாதே', 'வரவேண்டாம் வரவேண்டாம் வாக்குக் கேட்டு வரவேண்டாம்', 'வாக்கு கேட்டு வந்தால் செருப்படிதான்', 'விரட்டுவோம் விரட்டுவோம் வீதி வரை விரட்டுவோம்', 'காட்டுவோம் காட்டுவோம் மக்கள் பலத்தைக் காட்டுவோம்' என்று கோசங்கள் எழுப்பி போராட்டம் நடத்தினர். மும்மொழியிலான பதாகைகளையும் தாங்கியிருந்தனர். (ற)

## தமிழ்...

மறந்து செயற்படுகின்றார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார். வவுனியாவில் நேற்று இடம்பெற்ற கட்சி நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கைகள் ஆச்சரியமாக இருக்கின்றது. தனக்கு யாரால் ஆபத்து ஏற்படும் என்று பயந்தாரோ, அந்தத் தரப்புக்கு இன்று அமைச்சுப் பதவிகளை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்றார். நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் நேற்றுத்தான் அரசியலுக்கு வந்தவர். தமிழ்த் தேசியப் போராட்டத்தில் எத்தனை பேர் தமது உயிர்களை இழந்திருக்கின்றார்கள். இதற்காக எவ்வளவு பேர் தங்கள் குருதியைச் சிந்தியிருக்கின்றார்கள். அவர் ஒரு துளி குருதி கூடச் சிந்தியிருக்கமாட்டார். எமது மக்களின் அவலங்களே அவருக்குத் தெரிந்திருக்காது.

நாங்கள் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே போராடுகின்றோம். அதற்காகவே மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்கவுள்ளோம் - என்றார்.

**சுமந்திரன் எம்.பி.**

இந்த நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், மக்கள் நலன்கருதியே மகிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்தோம். இந்த நிலையில சிறுபிள்ளைத்தனமாக நாமல் ராஜபக்ச, அவர் சிறுபிள்ளைதான், கீச்சகத்தில் பதிவிட்டார். அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் மைத்திரியும், மகிந்தவும் ஆலோசிக்கின்றார்கள் என்று குறிப்பிட்டார். அவ்வாறு சொல்லிவிட்டால் நாங்கள் குத்துக்கரணம் அடித்து வருவோம் என்று நினைக்கின்றார்கள். விடுவிப்பதாக இருந்தால் விடுவியுங்கள். அவர்களை விடுவிப்பது நியாயமானதுதான். நாங்கள் மகிந்தவுக்கு எதிர்ப்பைக் காட்டியதால் விடும் அறிக்கைதான் இது. எதிர்ப்புக் காட்டுவதால் அவர்கள் இப்படிச் செய்வார்கள் என்றால், நாங்கள் இன்னமும் அதிகமாக எதிர்ப்புக் காட்டுவோம்.

எங்கள் கட்சியைக் கூறுபோடுவதற்கு மைத்திரி முனைந்திருக்கின்றார். அவருடைய இறுதிக்கான ஆரம்பம் இது. எங்களுடைய உப்பைத் தின்று வந்து எங்களுடைய கட்சியில் இருந்து ஒருவரைக் களவாகக் கொண்டு சென்று அமைச்சுப் பதவி கொடுத்துள்ள மோசமான செயலைச் செய்த அரச தலைவரான நீ. உனக்கு எப்படி ஆதரவு கொடுப்போம்? எங்களுடைய மக்களை கூறுபோடுவதற்காகவா உன்னை நாங்கள் கொண்டுவந்தோம். தேர்தலில் தோற்றிருந்தால், ஆறடி நிலத்தில் போயிருப்பேன் என்று சொன்னாயே? ஆறடி நிலத்திற்குள் போகாமல் காப்பாற்றியது நாங்கள் அல்லவா? எங்களைப் பிரித்துப் போடும் சூழ்ச்சி செய்கின்ற அரச தலைவராக மாறியிருக்கின்றார். இது உனது அழிவுக்கான ஆரம்பம் - என்றார்.

**சிறிதரன்**

இங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், இராணுவத்துடன் இருந்து ஒட்டுக்குழுவாகத் தங்களை வளர்த்துக் கொண்டவர்கள் தற்போது எம்மைப் பார்த்துப் பேசுகின்றனர். முதல் கரும்புலியான யோர்க்கின் தாய் தந்தையரைத் தெருவில் பிச்சை எடுக்க வைத்தவர், பிரிகேடியர் ஜெயத்தின் தந்தையைக் கொலை செய்து மலக் குழியில் போட்டவர், ஈரோஸ் போராளிகள் 13 பேரை வவுனியாவில் வைத்து உமியுடன் சேர்த்து எரித்தவர், மூத்த போராளி அமுதனின் தந்தையை இந்தியாவில் நிர்வாணமாக்கி நடக்க வைத்த ஒருவர் இப்போது கூறுகின்றார், எங்கள் கட்சியின் நாடாளுன்ற உறுப்பினர் சார்ள்ஸ், செல்வம், சிறிதரன், சரவணபவன் போன்றோர் மகிந்தவுக்கு ஆதரவளிக்கவுள்ளனராம். எமது மக்கள் வீட்டுக்கு வாக்களித்தார்கள். எமது இலக்கங்களுக்கு வாக்களித்தார்கள். அந்த வாக்குகள் வீணாகாது. அதற்குரிய பெறுமதி அழிந்து போகாது. நாம் எமது மக்களின் எண்ணங்களுக்கு ஒருபோதும் துரோகம் செய்ய மாட்டோம் என்றார். (5,110)

## ஹக்கீம்...

யோர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக ரிசாட் பதியுதீன் தெரிவித்திருந்த நிலையில், அவருடைய கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியிருந்தது. இதன் பின்னரே, ரிசாட் பதியுதீன் மைத்திரிபாலவைச் சந்தித்திருந்தார். இவ்வாறான பின்னணியிலேயே, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அரச தலைவர் மைத்திரிபாலவைச் சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்பு பற்றிய அதிகாரபூர்வ அறிவிப்புகள் எந்தத் தரப்பிலிருந்தும் இதுவரை வெளியிடப்படவில்லை. ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், ரிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 5 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வைத்துள்ளது. (5)

## மைத்திரிபால...

தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்சவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தனது கீச்சகத்தில் நேற்றுக் காலை கைதிகள் தொடர்பில் பதிவிட்டிருந்தார். அதில், 'தமிழ் மக்களின் அடிப்படைச் சிக்கல்களை தீர்க்கும் வகையில் பெறுமதியான கலந்துரையாடல்களை உருவாக்க எமது தரப்பு தயாராக உள்ளது. நீண்ட நாள் கைதிகளாக உள்ள முன்னாள் போராளிகள் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால மற்றும் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தொடர்ந்து கவனம் செலுத்தி விரைவில் தகுந்த முடிவை அறிவிப்பர்' என்று பதிவிட்டிருந்தார்.

இது தொடர்பில் மங்கள சமரவீர தனது கீச்சகப் பதிவில், கடந்த 2015 ஆம் ஆண்டு அரசியல் கைதிகளை விடுவிக்க மறுத்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தற்போது அந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். இந்த நடவடிக்கை மற்றொரு அதிரடியான சந்தர்ப்பவாதம் மற்றும் அரசியல் இரட்டைவேடமான செயற்பாடாகும். அது நடந்தால், இந்த நெருக்கடியிலிருந்து வெளியே வரும் ஒரே சாதகமான நடவடிக்கை இதுதான், என்று குறிப்பிட்டார். (5)

## மைத்திரிக்கே...

விட்டு வெளியேறவேண்டும். இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூட்டு அரசிலிருந்து வெளியேறி தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை நியமித்த தீர்மானத்தை நாம் வரவேற்கின்றோம். அவர்களுக்கு எமது முழு ஆதரவை வழங்குவதற்குத் தீர்மானித்து உள்ளோம். எவ்வாறாயினும் நான் சுயாதீன உறுப்பினராகவே செயற்படவுள்ளேன். பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான விடயத்தில் நான் அரச தலைவர் மைத்திரிபாலவின் பக்கமே சார்ந்திருப்பேன். புதிய தலைமை அமைச்சர் நியமனம் அரசமைப்புக்கு உட்பட்டதா இல்லையா என்று வாதப்பிரதிவாதங்கள் தொடர்கின்றன. கூட்டு அரசிலிருந்து சுதந்திரக்கட்சி வெளியேறுவதாக அறிவித்த பின்னரே தலைமை அமைச்சர் நியமனம் இடம்பெற்றுள்ளது. அது தவறானது அல்ல - என்றார். (5,61)

## 2நாள்கள் ...

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர் எழுந்த அழுத்தம் காரணமாக, முற்கூட்டியே நாடாளுமன்ற அமர்வு நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச, 5ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் என்று அரச தலைவர் கூறியதாகக் குறிப்பிட்டிருந்தார். இதன் பின்னர் சபாநாயகர் கரு. 7ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படும் என்று அரச தலைவர் தனக்குத் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறானதொரு நிலையில், 16ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்ற அமர்வை இரண்டு நாள்கள் முன்னதாக அதாவது 14ஆம் திகதி கூட்டும் அறிவிப்பையே அரச தலைவர் விடுத்துள்ளார். தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டு அந்தப் பதவிக்கு மகிந்த ராஜபக்சவை அரச தலைவர் மைத்திரிபால கடந்த 26ஆம் திகதி நியமித்தார். இந்த நியமனம் அரசமைப்புக்கு முரணானது என்றும் அதனை சீர் செய்வதற்கு உடனடியாக நாடாளுமன்றைக் கூட்டுமாறு ரணில் விக்கிரமசிங்கவும் 27ஆம் திகதி சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில் அன்றைய தினம் அரசிதழ் அறிவிப்பு ஊடாக நவம்பர் 16ஆம் திகதிவரை நாடாளுமன்றம் முடக்கப்பட்டது. அதன் ஊடாக நாடாளுமன்றின் இரண்டாது கூட்டத்தொடர் முடிவுக்கு வந்தது.

நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டி ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறு தலைநகர் கொழும்பில் பல்வேறு மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜேவிபி ஆகியனவும் நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டுமாறு வலியுறுத்தின. சபாநாயகருக்கு 126 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுக் கொடுத்திருந்தனர்.

மேலும் ஐ.நா. பொதுச் செயலர், அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டி நாட்டின் அரசியல் குழப்பநிலையை முடிவுக்கு கொண்டுவருமாறு வலியுறுத்தின. எல்லாவற்றையும் புறம்தள்ளிவிட்டு மைத்திரிபால சிறிசேன, முன்னர் அறிவித்த திகதியிலிருந்து இரண்டு நாள்கள் முன்தாக நாடாளுமன்றை ஆரம்பிப்பதாக உத்தியோகபூர்வமாக நேற்று அறிவித்துள்ளார். (5)

## மைத்திரியின்...

மறுதினம் சந்திப்பதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ள நிலையில், அவரைச் சந்திப்பதா இல்லையா என்பது தொடர்பில் கூட்டமைப்பு முடிவு எடுக்கவில்லை என்று தெரியவருகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலைக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே காரணம் என்று கூட்டமைப்பு குற்றம் சுமத்தி வருகின்றது. உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், அரச தலைவர் மைத்திரிபாலவைச் சந்தித்துக்கோரிக்கையும் முன்வைத்திருந்தார். ஆனால் அரச தலைவர் அதற்குச் செவிசாய்க்கவில்லை. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தமது அணிக்கு இழுத்தெடுத்துள்ளார். இவ்வாறானதொரு நிலையிலேயே, கூட்டமைப்பின் தலைவரையும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நாளை மறுதினம் புதன் கிழமை காலை சந்திப்பதற்கு வருமாறு அரச தலைவர் அழைத்துள்ளார்.

அரச தலைவரின் அழைப்பை ஏற்றுச் செல்வதா இல்லையா என்பது தொடர்பில் கூட்டமைப்பு இன்னமும் முடிவு எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (5)

## கட்சித்...

என்று அரசிதழில் அறிவித்துள்ள நிலையில், கட்சித் தலைவர்களை சபாநாயகர் கரு ஜயசூரிய இன்று மாலை 3 மணிக்கு சந்திப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளார். ஐக்கிய தேசிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன, நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகின்றன. பன்னாட்டுச் சமூகமும் அழுத்தம் பிரயோகித்துள்ளது. மக்களும் தொடர் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 16ஆம் திகதிக்கு ஒத்தி வைத்த நாடாளுமன்றத்தை இரண்டு நாள்கள் முன்னதாக கூட்டுவதற்கான அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் கட்சித் தலைவர்களுடன் சபாநாயகர் சந்திப்பு நடத்தவுள்ளார். இந்தச் சந்திப்பில் அரச தலைவரின் முடிவை மீறி நாளை மறுதினம் புதன் கிழமை நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கான முடிவுகள் எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (5)

## நம்பிக்கையில்லாத்...

எதிர்த்தரப்பினரின் சூழ்ச்சிகளை முறியடிக்கும் பலம் தற்போது எம்மிடம் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார். சபாநாயகருக்கு தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தை ஒருபோதும் கூட்ட முடியாது. மேற்குலக நாடுகளின் தேவைகளுக்காக புதிய அரசமைப்பு ஒருபோதும் உருவாகாது. அவ்வாறு புதிய அரசமைப்பு உருவாக வேண்டுமாயின் அது நாட்டை பிளவுபடுத்தாத அரசமைப்பாக மாத்திரமே உருவாக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (5)

# சென். லூட்சியா அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 5
மன்னார் ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக் கழக அணி வென்றது.
ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து காத்தான்குடி சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# ஐக்கியம் அணி அதிரடி

யாழ்ப்பாணம், நவ. 5
மன்னார் ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பெரியகமம் எவர்கிறீன் விளையாட்டுக் கழக் அணி மோதியது.
9:0 என்ற கோல் கணக்கில் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# போராடி சாதித்தது றீகன் ஸ்ரார் அணி

யாழ்ப்பாணம், நவ. 5
மன்னார் ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நானாட்டன் றீகன் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம23)




## யாழ்ப்பாணம் லீக்கின் தொடர்

# பொற்பதி அணி அதிரடியாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 5
யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பொற்பதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மணியந்தோட்டம் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதற்பாதி ஆட்டத்தில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. பொற்பதி விளையாட்டுக் கழக அணியின் சார்பில் றொக்சன், யதுஷன் ஆகியோர் கோல்களைப் பதிவுசெய்தனர்.
இரண்டாம் பாதி ஆட்டத்தில் பொற்பதி விளையாட்டுக் கழக அணியின் சார்பில் யனுசியன் இரண்டு கோல்களைப் பதிவு செய்தார். இதையடுத்து ஆட்ட நேர முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# விடியல் வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 5
தீபாவளித் திருநாளை முன்னிட்டு புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் விடியல் விளையாட்டுக் கழக பி அணி வெற்றிபெற்றது.
புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் விடியல் விளையாட்டுக் கழக பி அணியை எதிர்த்து ஒற்றுமை விளையாட்டுக் கழக பி அணி மோதியது.
5:3 என்ற கோல் கணக்கில் விடியல் விளையாட்டுக் கழக பி அணி வெற்றிபெற்றது. (ம-23)

# வெற்றிபெற்றது விக்னேஸ்வரா

யாழ்ப்பாணம், நவ. 5
தீபாவளித் திருநாளை முன்னிட்டு புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சுப்பர்றாங் விளையாட்டுக் கழக ஏ அணி வெற்றிபெற்றது.
புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சுப்பர்றாங் விளையாட்டுக் கழக பி அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக பி அணி மேர்தியது. 3:0 என்ற கோல் கணக்கில் சுப்பர்றாங் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# அல்ஜினா வென்றது

யாழ்ப்பாணம், நவ. 5
மன்னார் ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் தாராபுரம் அல்ஜினா அணி வெற்றிபெற்றது.
ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தாரபுரம் அல்ஜினா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக பி அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் தாரபுரம் அல்ஜினா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



# ஐக்கியம் அணி அசத்தல் வெற்றி


யாழ்ப்பாணம், நவ. 5
யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்கல் 12.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். றொக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதற்பாதி ஆட்டத்தில் சென். றொக்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. ஹமில்டன் றொக்ஸின் கோலைப் பதிவுசெய்தார்.
இரண்டாம் பாதி ஆட்டத்தில் யாழ்ப்பாண ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் சார்பில் அப்றின் கோலொன்றைப் பதிவுசெய்தார்.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளின் மூலம் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் ஐக்கிய அணி வெற்றிபெற்றது. (ம-23)

# தெ.ஆபிரிக்காவிடம் படுதோல்வியடைந்த ஆஸ்திரேலிய அணி

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி வெறும் 152 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. நீல் அதிகபட்சமாக 34 ஓட்டங்களையும், ஹரி 33 ஓட்டங்களையும், லின் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிளுக்வையோ 3 இலக்குகளையும், ஸ்ரெய்ன், நெக்டி, தாகிர் மூவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 124



பந்துகள் மீதமிருக்க 4 இலக்குகளை இழந்து 6 இலக்குகளால் வெற்றிபெற்றது. அதிகபட்சமாக குயின்டன் 47 ஓட்டங்களையும், ஹென்றிக்ஸ் 44 ஓட்டங்களையும், மார்க்ரம் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்ரொய்னிஸ் 3 இலக்குகளையும், நீல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

**ஓட்டமற்ற பந்துகள்**

ஆஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடியபோது தென்னாபிரிக்க அணி 161 ஓட்டமற்ற பந்துகளை வீசியது. ஆஸ்திரேலிய அணி ஒட்டுமொத்தமாக 228 பந்துகளையே எதிர்கொண்டது. அவற்றில் 161 பந்துகளில் ஓட்டமெதையும் பெறாமல் வீணடித்தது. (ம)



### டோனி நீக்கப்பட்ட விவகாரம்

# அணியின் நன்மைக்காக இருந்தால் ஏற்கின்றேன்!

### இப்படிச் சொல்கிறார் சச்சின்

"அணியின் நன்மையைக் கருத்தில் கொண்டு டோனி நீக்கப்பட்டிருந்தால் அவரின் நீக்கம் சரியானதொன்று" என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின்.

ரி-20 ஆட்டங்களுக்கான இந்திய அணியில் இருந்து டோனி நீக்கப்பட்டமைக்கு பரவலாக எதிர்ப்பு ஏற்பட்டுள்ள நிலையில் இந்த விடயத்தில் சச்சின் கருத்துப் பகிர்ந்துள்ளார்.

'தேர்வுக் குழுவினரின் எண்ணம் என்னவாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. மேலும் இதுபற்றி நான் என் கருத்தைக் கூறி அது பிறர் மேல் செல்வாக்குச் செலுத்துவதையும் நான் விரும்பவில்லை.

ஒய்வறையில் தலைவர், தேர்வுக்குழுவினரிடையே என்ன நடந்ததோ அது அங்கேயே முடிந்து போகட்டும் என்று கருதுகிறேன். அவர்கள் என்ன முடிவு எடுத்தாலும் அணியின், நாட்டின் நன்மைக்காக இருக்க வேண்டும். அப்படியிருந்தால் டோனியின் நீக்கத்தை சரி என்று ஏற்பேன்" என்று சச்சின் மேலும் தெரிவித்தார். (ம)

# அன்ரனிஸ் அணி அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 5

தீபாவளித்திருநாளை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றது.


புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து இளம் பறவை விளையாட்டுக் கழக அணி மோதியது. 5:0 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக ஏ அணி வெற்றி பெற்றது. (ம-23)

# ஒற்றுமை வென்றது

யாழ்ப்பாணம், நவ. 5

தீபாவளியை முன்னிட்டு புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஒற்றுமை ஏ அணி வெற்றி பெற்றது.

புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஒற்றுமை விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து சந்திரன் விளையாட்டுக் கழக பி அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் ஒற்றுமை ஏ அணி வெற்றிபெற்றது. (ம-23)



# ரசலுக்கு காயம்

மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரரான ரசல் இந்தியாவுக்கு எதிரான ரி-20 தொடரில் இருந்து விலகினார். காயம் காரணமாக கடந்த சில வாரங்களாக ரசல் அவதிப்பட்டு வருகிறார். இதனால் அவர் இந்தியாவுக்கு எதிரான தொடரில் கலந்து கொள்வாரா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. இந்த நிலையில் தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார் ரசல். (ம)

# ஐக்கியம் அணியை வென்றது வளர்மதி



யாழ்ப்பாணம், நவ. 5

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 21 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வளர்மதி அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியின் சார்பில் ஹரிஸ் இரண்டு கோல்களைப் பதிவு செய்தார். ஆட்டநேர முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வளர்மதி அணி வெற்றி பெற்றது. (ம-23)

# ஸ்கந்தாவின் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 5

தீபாவளியை முன்னிட்டு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வருடாவருடம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகின்றது.

இந்தத் தொடரில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மோதுகின்றன. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி என்று நான்கு அணிகள் கலந்து கொள்கின்றன (ம)



கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் சிவகுரு ஞாபகார்த்த காற்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானதில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த இறுதியாட்டத்தில் றேஞ்சர்ஸ் கலைமதி அணிகள் மோதவுள்ளன. (ம-23.108.422)

**வீடு வாடகைக்கு**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள பிளைச்சர் ஒழுங்கையில் மூன்று அறைகள் இணைந்த குளியல் அறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

(CS 20985) (04.17)

077 997 7308/071 444 2134

**அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்**

இன்னும் ஒரு நாள் மட்டுமே உள்ளது. 2020 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. உங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்.



திருமுருகன் கொம் வெநற் (Pvt) Ltd
321, K.K.S. Road, Jaffna.
(முட்டாஸ் கடை சந்திக்கு அருகில்) தொ.பே. இல : 077 755 4528



**ஆங்கில வகுப்புக்கள்**

**Certificate in English** ( For Beginners)

Duration: 05 Months ( 60 Hours)

உங்களுடையமுன்னேற்றத்திற்கு ஆங்கிலம் ஓர் தடையாக உள்ளதா? கவலையை விடுங்கள்!!

New Batch Starts on 10-11-2018 @ 9.00 am

HOTLINE 077 757 0038 / 071 777 3444

IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
TEL :- 021 222 8060 web : iis.edu.lk

# தடுமாறி வென்றது இந்தியா



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது ரி-20 ஆட்டத்தில் இந்திய அணி 13 பந்துகள் மீதமிருக்க 5 இலக்குகளால் வெற்றிபெற்றது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட், ஒருநாள் தொடர்கள் முடிவடைந்திருந்த நிலையில் ரி-20 தொடர் நேற்று ஆரம்பமானது.

கோக்லிக்குக் கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டதால் பொறுப்புத் தலைவராக ரோகித் நியமிக்கப்பட்டார். நாணயச் சுழற்சியில் வென்ற அவர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார். மேற்கிந்தியத் தீவுகளின் ஆரம்ப வீரர்களாக ஹோப் மற்றும் ரம்டின். 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரம்டின். 14 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் பாண்டே, ஹெட்மயர், பொலாட் இருவரும்கூட மத்திய வரிசையின் நிலைக்கத் தவறினார்கள். இருவரும் மத்திய வரிசையில் 10, 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பிராவோ 5 ஓட்டங்களுடனும், பவல் 4 ஓட்டங்களுடனும், பிரீத்வைட் 4 ஓட்டங்களுடனும் குல்தீப் யாதவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். முடிவில் 8 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களை மட்டுமே பெற்றது 'ரி-20' சம்பியனான தீவுகள்.

பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 3 இலக்குகளையும், ஊமேஸ் யாதவ், கலீல் அகமட், பும்ரா, குருனல் பாண்டியா நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்ப வீரர்களான ரோகித், தவான் இருவரும் ஏமாற்றினார்கள்.

டோனியின் மாற்றாக இனங்காணப்பட்ட பன்டால் முடிந்தது வெறும் ஓர் ஓட்டம் மட்டுமே. முன் வரிசையில் ராகுல் மட்டும் 16 ஓட்டங்களைப் பெற்றார். மத்திய வரிசையில் பாண்டே 19 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார்.

சந்தேகத்துக்கு இடமாக இருந்த இந்திய அணியின் வெற்றியை போராடி சாத்தியப்படுத்த எத்தனித்தார் டினேஸ் கார்த்திக். தன் முயற்சியில் அவர் வெற்றியும் கண்டார். குருனல் பாண்டியா 9 பந்துகளில் 21 ஓட்டங்களை விளாசினார். டினேஸ் கார்த்திக் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களைப் பெற 13 பந்துகள் மீதமிருக்க 5 இலக்குகளால் வென்றது இந்தியா. (ம)

## குருனல் அறிமுகம்



இந்திய ரி20 அணிக்காக நேற்று அறிமுகமாகினார் இளம் வீரர் குருனல் பாண்டியா. மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி20 தொடர் நேற்று ஆரம்பமானது. கோக்லி, புவனேஸ்வர் குமார் ஆகியோருக்குக் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது. ரோகித் தலைவராக நியமிக்கப்பட்டார். குருனல் பாண்டியா இந்திய அணியின் 15 வீரர்கள் கொண்ட குழாமில் இடம்பிடித்திருந்தார். குருனல் பாண்டியாவை விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் ரோகித் சேர்ப்பார் என்று கருதப்பட்ட நிலையில் எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று குருனல் பாண்டியாவுக்கு இடம் கொடுக்கப்பட்டது. (ம)

**மரண அறிவித்தல்**

**திருமதி கணபதிப்பிள்ளை கமலாட்சி**



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், றக்கா லேன், யாழ்ப்பாணம் மற்றும் சிறுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை கமலாட்சி நேற்று (04.11.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கைதடியைச் சேர்ந்த விசுவநாதர் கணபதிப்பிள்ளை (கைதடி தபாற்கந்தோர் ஓய்வு பெற்ற ஊழியர்) அவர்களின் பாரியார் ஆவார்.

அன்னாரின் மரணச்சடங்கு சிறுப்பிட்டியில் இடம்பெறும். தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

தகவல் :
கணபதிப்பிள்ளை கோடீஸ்வரன்
(கைதடி தபாற் கந்தோர் ஊழியர்)
மகன் 077 073 6597

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

உடனடியாக பதிவு செய்யுங்கள்

இந்த வருடமே இறுதி வருடம்

முந்துங்கள் நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன

என் வாழ்க்கைப்பயணத்தின் முதல் வெற்றி அமெரிக்கலொத்தர் விசா மூலம் ஆரம்பமாகின்றது. இதனை சாத்தியப்படுத்திய V2 TRAVELSக்கு எனது மனமார்ந்த நன்றிகள் .



கலைச்செல்வன்

V2 TRAVELS 0768226243

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.